
www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

ஆகஸ்ட் 2006
ரூ. 5.00




மும்பை குண்டு வெடிப்பு

## மதவெறி பயங்கரவாதமும் அரச பயங்கரவாதமும்

படிப்பகம்

www.padippakam.com

## கண்டதேவி கோவில் தேரோட்டம்:

# சாதிவெறியர்களுக்குச் சாமரம் வீசுவதுதான் சமூக நீதியா?

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்று தி.மு.க. அரசு சட்டம் இயற்றியுள்ள போதிலும், கண்டதேவியில் தாழ்த்தப்பட்ட சாதியினருக்குத் தேர்வடம் பிடிக்கும் உரிமை கூட மறுக்கப்பட்டு, அவர்களது வழிபாட்டு உரிமை தொடர்ந்து பறிக்கப்பட்டு வருகிறது. கடந்த ஜூன் 9-ஆம் தேதியன்று நடந்த தேரோட்டம், தேவர் சாதிவெறியர்களின் அதிகாரத் திமிரை நிலைநாட்டும் திருவிழாவாக புதிய பரிமாணத்தை இவ்வாண்டில் எட்டியுள்ளது.

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டைக்கு அருகிலுள்ள சிறு கிராமம்தான் கண்டதேவி. கடந்த சில ஆண்டுகளாக ஆதிக்கச்சாதியினரான தேவர் சாதிவெறியர்களின் வன்கொடுமை அட்டூழியங்களால் இந்த ஊர்க் கோயிலின் தேரோட்டம் நின்று போனது. பின்னர் கடந்த ஆண்டில் உயர்நீதி மன்றத் தீர்ப்பின் அடிப்படையில், தேவர் சாதிவெறியர்களின் எதிர்ப்புக்கு அஞ்சி ஒப்புக்கு சில தாழ்த்தப்பட்டோரைத் தேர்வு செய்து, வடத்தைத் தொட்டு இழுப்பது போல நாடகமாடி, போலீசை வைத்துத் தேரை இழுத்து, 'சமத்துவத்தை' நிலைநாட்டியது, முந்தைய ஜெயா அரசு.

இந்த ஆண்டின் தேரோட்டம் கடந்த ஜூன் 9-ஆம் தேதி நடைபெற்றது. சொர்ணமூர்த்தீஸ்வரர் கோவிலுக்கு அருகிலுள்ள சொர்ணமகால் திருமண மண்டபத்தைப் புறக்காவல் நிலையமாக்கி, கூடுதல் டி.ஜி.பி. மூர்த்தி தலைமையில் 20,000-க்கும் மேற்பட்ட போலீசார் குவிக்கப்பட்டனர். அதில் கணிசமானோர் கிராமப்புற விவசாயி போல வேட்டி-சட்டை அணிந்து கொண்டு கூட்டத்தில் புகுந்து கொண்டனர். மாவட்டத்தின் புதிய கலெக்டர் சித்திக், ஐ.ஜி. சஞ்சீவ் குமார் தலைமையிலான அரசு எந்திரம் இக்கிராமத்திலிருந்த தாழ்த்தப்பட்ட மக்களை மிரட்டி வெளியேற்றியது. கண்டதேவி கோயிலுக்குப் பின்புறம் சுமார் 20 வீடுகளைக் கொண்ட காலனியிலுள்ள தாழ்த்தப்பட்டோரே ஊரில் எஞ்சியிருந்தனர். அக்காலனியைச் சுற்றி சவுக்குக் கம்புகளால் வேலி கட்டி, ஏறத்தாழ 100 போலீசார் சுற்றி வளைத்து, அத்தாழ்த்தப்பட்ட மக்கள் தேரோட்டத்தை எட்டிக் கூடப் பார்க்க முடியாமல் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டனர்.

தாழ்த்தப்பட்ட மக்களை ஒடுக்கி - ஒதுக்கி வைத்துவிட்டு உஞ்சனை நாடு, செம்பொன்மாரி நாடு, தென்னல் நாடு, இரவுசேரி நாடு ஆகிய 4 நாடுகளைச் சேர்ந்த நாட்டார்களின் சாதிவெறித் தலைவர்களுக்குப் பரிவட்டம் கட்டப்பட்டு, தென்மண்டல ஐ.ஜி. தலைமையில் சுமார் 750 பேர் மாலை - மரியாதையோடு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு, அவர்கள் மட்டுமே தேர்வடம் பிடித்தனர். இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பெரிய கருப்பன் தேரோட்டத்தைத் தொடங்கி வைக்க, இராகு காலத்துக்குள் இத்தேரோட்டம் வீதி உலா வந்து முடிவுற்றது. நாட்டார்கள் மட்டுமே பங்கேற்க, அதற்கு போலீசும் அதிகாரவர்க்கமும் ஒத்துழைத்ததைக் கண்டு மகிழ்ச்சிக் கூத்தாடிய நாட்டார்களிடம் சாதிவெறி போதை தலைக்கேற, ''தேவரினத் தேரோட்டத்தை நடத்திய கலைஞர் வாழ்க!'', ''கும்தலக்கா கும் மாவா, தேவருன்னா சும் மாவா?'', ''தேவரின பாரம்பரிய உரிமையைப் பாதுகாப்போம்!'' என்று கூச்சலிட்டனர். அடுத்து வரும் ஆண்டுகளில் கண்டதேவி தேரோட்டம், கோவில் திருவிழா என்ற நிலையிலிருந்து, இன்னுமொரு தேவர் குருபூசையாக மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

நீதிமன்றமே கூட, அனைவரும் சமத்துவமாக தேர்வடமிழுக்க வேண்டும் என்று உத்தரவிடாமல், முதலில் நாட்டார்கள் இழுக்க பின்னர் அனைவரும் இழுக்க வேண்டும் என்றுதான் தீர்ப்பளித்துள்ளது. ஆனால், 'எனது மகனுக்குத் தாழ்த்தப்பட்ட குடும்பத்தில் பெண் எடுத்துள்ளேன்' என்று கூறிக் கொள்ளும் கருணாநிதியின் அரசோ, தாழ்த்தப்பட்டோர் தேர் இழுக்கும் உரிமையைக் கூடப் பறித்துவிட்டு, சாதிவெறியர்களுக்கே முழு சமத்துவம் அளித்துள்ளது.

முன்பு, தாழ்த்தப்பட்டோர் தேர்வடம் பிடித்த 'குற்ற'த்திற்காக தேரில் ஏற்றிய சாமியை வீதியில் அம்போவென விட்டுவிட்டு, கடவுளையே தீண்டத்தகாதவராக்கிக் கொட்டமடித்த இச்சாதிவெறியர்கள், இப்போது தமது சாதிவெறி பாரம்பரிய உரிமை எவ்வித எதிர்ப்புமின்றி நிலைநாட்டப்பட்ட பெருமையில் கூத்தாடிக் கொண்டிருக்கின்றனர். தாழ்த்தப்பட்டோரை ஒடுக்கும் இந்த ஆதிக்க சாதியினர் சூத்திரர்களாம்! ஒடுக்கப்பட்ட பிற்பட்ட சாதியினராம்! இவர்கள் இடஒதுக்கீடு சலுகை பெற்று முன்னேற வேண்டுமாம்! - இப்படி இந்த ஆதிக்க சாதி வெறியர்களுக்கு வக்காலத்து வாங்குவது சமூக நீதியா அல்லது மனுதர்ம நீதியா?



**போலீசு பாதுகாப்போடு, கௌரவமாக பரிவட்டம் கட்டி தேரிழுக்க அழைத்து வரப்படும் நாட்டார்கள்.**

**தடுப்பு வேலி போடப்பட்டு போலீசாரால் கண்காணிக்கப்பட்ட தாழ்த்தப்பட்டோர் குடியிருப்பு.**



**- பு.ஜ. செய்தியாளர், மானாமதுரை.**



படிப்பகம்

www.padippakam.com

**புதிய ஜனநாயகம்**

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

**தொகுதி: 21**

**இதழ் 10**

**ஆகஸ்ட் 2006**

**உள்நாடு**
**தனி இதழ்: ரூ. 5.00**
**ஆண்டு சந்தா: ரூ. 60.00**

**வெளிநாடுகள்**
**(வான் அஞ்சலில்)**
**ஆண்டு சந்தா: US$ 10**

**படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்**

**புதிய ஜனநாயகம்,**
**110, இரண்டாம் தளம்,**
**63, என்.எஸ்.கே. சாலை,**
**(அ.பெ.எண்: 2355)**
**கோடம்பாக்கம்,**
**சென்னை - 600 024.**
**தொலைபேசி: 94446 32561**

## இந்திய—அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம்:
# அம்பலமாகிறது அடிமைச் சாசனம்!

இந்தியாவின் எதிர்கால மின்சாரத் தேவைகள் அனைத்தையும் நிறைவு செய்ய விருக்கும் கற்பக விருட்சமாகவும் 'இந்தியாவும் ஒரு அணுஆயுத வல்லரசுதான்' என்பதற்கு அமெரிக்காவின் வாயிலிருந்து கிடைத்த பிரம்மரிஷிப் பட்டமாகவும் மன்மோகன் சிங் கும்பலால் சித்தரிக்கப்பட்ட இந்திய - அமெரிக்க அணுசக்தி ஒப்பந் தத்தின் உண்மை முகம் நான்கே மாதங்களில் அம்பலமாகியிருக்கிறது. தானாக அம் பலமாகவில்லை. 27 ஜூலை 2006 அன்று அமெரிக்க நாடாளுமன்றம் இந்த ஒப்பந் தத்தைச் சட்டமாக்குவதற்காக நிறைவேற்றியுள்ள திருத்தங்கள் இவற்றை அம்பல மாக்கியிருக்கின்றன. அவை பின்வரும் நிபந்தனைகளை விதிக்கின்றன:

''1. இந்தியா இனி அணுஆயுதங்கள் தயாரிக்கக் கூடாது; கைவசம் இருக்கின்ற அணு ஆயுதங்களை மெல்ல மெல்ல அழிப்பதையும் இறுதியில் அணு ஆயுதங்களே இல்லாமல் செய்வதையும் உத்திரவாதப்படுத்த வேண்டும். இது எந்த அளவுக்கு நிறை வேறியிருக்கிறது என்பது குறித்து அமெரிக்க அதிபர் ஒவ்வொரு ஆண்டும் அமெ ரிக்க நாடாளுமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். 2. அணுஆயுதம் தயா ரிப்பதற்குத் தேவையான மூலக்கூறுகளின் உற்பத்தியை நிறுத்துவதற்கான ஒப்பந் தத்தில் (Fissile Material Cut off Treaty) இந்தியா கையெழுத்திட வேண்டும். இந்தியா குறிப்பிட்ட கால இலக்கிற்குள் இந்த உற்பத்தியை நிறுத்துவதை அமெரிக்க அதிபர் உத்திரவாதப்படுத்த வேண்டும் என்பதுடன் இது குறித்தும் அமெரிக்க நாடாளுமன் றத்துக்கு ஆண்டுதோறும் அதிபர் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். 3. இந்த ஒப்பந் தம் அமலுக்கு வரவேண்டுமானால் அதற்கு முன் இந்தியாவின் அணு உலைகளை ஆய்வுக்கு உட்படுத்துவது தொடர்பாக சர்வதேச அணுசக்தி ஏஜென்சியுடன் இந் தியா உடன்பாடு செய்து கொள்ள வேண்டும். 4. இந்தியாவின் அணுசக்தித் திட்டங் கள், அவற்றின் உற்பத்தித் திறன், கையிலுள்ள அணு ஆயுதங்கள், அணுஆயுதம் தயாரிக்க உதவும் மூலக்கூறுகளின் கையிருப்பு, இந்தியாவில் ஆண்டுதோறும் வெட் டியெடுக்கப்படும் யுரேனியத்தின் அளவு ஆகிய எல்லா இரகசியங்கள் குறித்தும் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 31-ஆம் தேதிக்குள் அமெரிக்க அதிபர் நாடாளுமன் றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். 5. அணு ஆயுதப் பரவல் தடுப்புக்காக அமெரிக்கா உருவாக்கியுள்ள (கட்டைப் பஞ்சாயத்து) அமைப்பில் (Proliferation Security Initiative) இந்தியாவும் உறுப்பினராக வேண்டும். 6. இரானின் அணுசக்தித் திட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கு அமெரிக்காவுக்கு இந்தியா முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.''

இவை மட்டுமின்றி, இந்த ஆண்டின் இறுதியில் கூடவிருக்கும் அமெரிக்க நாடா ளுமன்றத்தின் மேலவையான செனட்டில் நிறைவேற்றப்படுவதற்காகப் பின்வரும் திருத்தங்களும் தயாராக உள்ளன. ''1. இந்திய அணு உலைகள் அனைத்தையும் முழு கண்காணிப்பின் கீழ் கொண்டு வராதவரை தொழில் நுட்பங்களைப் பகிர்ந்து கொள்ள முடியாது. 2. 14 அணுசக்தி நிலையங்களை மட்டும் சர்வதேச அணுசக்தி ஏஜென்சியின் கண்காணிப்புக்கு அனுமதிப்பதாக இந்தியா கூறியுள்ளதை ஏற்கவிய லாது; மீதமுள்ள 8 அணுசக்தி நிலையங்களையும் கண்காணிப்புக்குள் கொண்டுவர வேண்டும். 3. இரான் போன்ற அணு ஆயுதமில்லாத நாடுகள் எத்தகைய கண்காணிப் புக்கு உட்படுத்தப்படுகின்றனவோ, அதே விதமான கண்காணிப்புக்கு இந்தியாவும் உட்படவேண்டும்; இந்தியாவுக்கு அணுஆயுத நாடு என்ற சிறப்புத் தகுதியோ, விதி விலக்கோ தரவியலாது. 4. சர்வதேச அணுசக்தி ஏஜென்சியின் சோதனை மட்டு மின்றி அமெரிக்க அதிகாரிகளின் நேரடி சோதனைக்கும் இந்தியா உட்படவேண் டும். 5. இந்தியாவுக்குச் செறிவூட்டப்பட்ட யுரேனியம் வழங்கலாமென அமெ ரிக்கா திருப்தியடையாத பட்சத்தில், யுரேனியம் விற்கும் பிற நாடுகளும் (Nuclear suppliers Group) இந்தியாவிற்கு அதனை விற்பனை செய்யாமல் தடுக்க அமெரிக்க அரசு முயற்சிக்க வேண்டும்.''

சென்ற ஆண்டு ஜூன் 18-ஆம் தேதி புஷ்ஷும் மன்மோகனும் அமெரிக்காவிலி ருந்து வெளியிட்ட கூட்டறிக்கையிலும் இந்த ஆண்டு மார்ச் மாதம் கையெழுத்திடப் பட்ட புஷ் - மன்மோகன் சிங் உடன்பாட்டிலும் பூடகமாக மறைக்கப்பட்டிருந்த அமெரிக்க மேலாதிக்க நோக்கங்களை இந்தத் 'திருத்தங்கள்' வெளிக் கொண்டு வந் திருக்கின்றன. ''இந்தியாவின் இறையாண்மையையும் அணுசக்தி சுயசார்பையும் பாதிக்கின்ற எந்தவித நிபந்தனைகளுக்கும் உட்படமாட்டோம்'' என கடந்த மார்ச் மாதத்தில் இந்திய நாடாளுமன்றத்திற்கு உறுதிமொழி அளித்த மன்மோகன் சிங்,

தொடர்ச்சி 19-ஆம் பக்கம்

www.padippakam.com



## மும்பை தாக்குதல்:

# மதவெறி பயங்கரவாதத்திற்கு அரசு பயங்கரவாதம் தீர்வாகுமா?

மும்பை - ஜூலை 11, மாலை 6.24 மணி தொடங்கி 6.31 மணி வரை ஏழு நிமிடங்களில் ஏழு தொடர் வண்டிகளில் நடந்த ஏழு குண்டு வெடிப்புச் சம்பவங்கள் 200 முதல் வகுப்பு பயணிகளைப் பலிகொண்டு, 800 பேர்களைப் படுகாயமுறச் செய்த கோரங்களைச் செய்தி ஊடகங்கள் நிறையவே விவரமாகச்சித்தரித்துவிட்டன.

''தேசிய - சர்வதேசியத் தலைவர்கள்'' என்று அறியப்பட்ட அனைவரும் கடும் கண்டனங்கள் தெரிவித்துவிட்டனர். அரசுத் தலைவர், பிரதமர், ஆளுங்கட்சித் தலைவர், ரயில்வேத் துறை அமைச்சர், உள்துறை அமைச்சர், அதேபோல முக்கிய எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லோரும் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் நடந்த இடங்களைப் பார்வையிட்டுவிட்டு, இறந்தோர் குடும்பங்களையும் காயமுற்றோரையும் கண்டு ஆறுதல்கள் வழங்கினர். பாதிக்கப்பட்டவர் குடும்பங்களுக்கு நிதி உதவித் தொகையும் அறிவிக்கப்பட்டு விட்டன.

குண்டு வெடிப்பு சம்பவங்கள் நிகழ்ந்தவுடன், போலீசு மற்றும் சிவில் நிர்வாகத்துக்கு முன்பாகப் பொதுமக்கள் விரைந்து வந்து நிவாரணப் பணிகளில் ஈடுபட்ட பல்வேறு செய்திகள், சம்பவங்களை நேரில் பார்த்தவர்களின் விவரணைகள், துயரச் சம்பவங்களை மும்பைவாசிகள் எதிர்கொண்ட விதம், துணிவு, மத வேறுபாடுகளைக் கடந்த நிவாரணப் பணிகள், அடுத்தநாளே மும்பை வழமையான நிலைமைக்குத் திரும்பிய வியப்பு, குண்டுவெடிப்பைத் தொடர்ந்து மதக் கலவரங்கள் ஏதும் வெடிக்காமல் தடுத்து, மும்பைவாசிகள் அமைதிகாத்த பெருந்தன்மை என ஏராளமாகப் பத்திரிகைகளில் நிரம்பி வழிந்தன.

கடந்த சில ஆண்டுகளில் இவை போன்ற பயங்கரவாதச் சம்பவங்கள் பல நடந்தும், குறிப்பாக மகாராட்டிரத்தில் கடந்த ஆறு மாதங்களில் பல இடங்களில் வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டும், பல தீவிரவாதக் குழுக்கள் பிடிபட்டும் இந்த ஜூலை 11 குண்டுவெடிப்புச் சம்பவங்கள் குறித்து முன்கூட்டியே எச்சரிக்கத் தவறிய உளவுத் துறை, உளவுத்துறை எச்சரிக்கைகளை உதாசீனப்படுத்திவிட்டு, கோரச் சம்பவங்களைத் தடுக்கத் தவறிய போலீசு துறை, அரசு நிர்வாகம் ஆகியவை கடும் கண்டனத்துக்குள்ளாக்கப்பட்டன.

நியூயார்க், இலண்டன், மாட்ரிட்க், கேசபிளங்கா, பாலி, ரியாத், கெய்ரோ என்று கோரமான பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு பலியான நகரங்களின் வரிசையில் மும்பை மேலும் தனிச்சிறப்பான இடம் பெற்றுள்ளதை ஏடுகள் குறிப்பிடுகின்றன. அதாவது, அங்கெல்லாம் ஓரிருமுறைகள் பயங்கரவாதத் தாக்குதல்கள் நடந்துள்ளன. மும்பையிலோ திரும்பத் திரும்ப பயங்கரவாதத் தாக்குதல்கள் நடக்கின்றன. கடந்த ஆறு மாதங்களில், ஆறு இடங்களில் பயங்கரவாதக் குழுக்களிடமிருந்து மிக அதிகம் நாசம் விளைவிக்கக் கூடிய வெடிபொருட்கள்- ஆயுதங்கள் மகாராட்டிரத்தில் மட்டும் கைப்பற்றப்பட்டுள்ளன. 1993-இல் 257 பேரைப் பலிகொண்ட தொடர்குண்டு வெடிப்புகளுக்குப் பிறகு ஆறு பயங்கரவாதத் தாக்குதல்கள் மும்பையில் நடந்துள்ளன.

1993 மும்பை தொடர் குண்டு வெடிப்பு - பயங்கரவாதத் தாக்குதலுக்குக் காரணமாக இருந்தது கிரிமினல் குற்றக்கும்பல் தலைவர்களான தாவுது இப்ராகீம் - மமேன் கூட்டணி என்றும், அயோத்தி பாபரி மசூதி இடிப்பைத் தொடர்ந்து 1992-93 -ஆம் ஆண்டில் மும்பையில் ஆர்.எஸ்.எஸ். - சிவசேனா இந்து பாசிச வெறியர்கள் ஆயிரக்கணக்கான இஸ்லாமியர்களைப் படுகொலை செய்ததற்கு நடந்த பழிவாங்கும் செயல் என்றும் கூறப்பட்டது. இந்த ஜூலை 11 பயங்கரவாதத் தாக்குதலுக்கு காரணம் பாகிஸ்தான் பயங்கரவாத அமைப்பான லஸ்கர்-இ-தொய்பா மற்றும் இந்திய இஸ்லாமிய மாணவர் அமைப்பான ''சிமி'' ஆகியவற்றின் கூட்டுச்செயல் என்றும் செய்தி ஊடகங்கள் கூறுகின்றன.

இந்தியாவில் அதிகரித்து வரும் பயங்கரவாதத் தாக்குதல்களுக்கான காரண காரியங்கள், பின்னணி அமைப்புகள் குறித்து இந்திய உளவுத் துறைகளில் உள்ள நம்பகமான நபர்கள் கூறியதாக முக்கியமாக மூன்று கோணங்களிலான ''வதந்திகள் - ஊகங்கள் - புலனாய்வுச் செய்திகள்'' வந்து கொண்டிருக்கின்றன. அவற்றுள் முதன்மையானது, பாகிஸ்தானைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் சில பத்து பயங்கரவாத அமைப்புகள் (லஸ்கர்,



படிப்பகம்

www.padippakam.com

ஜெய்சா, ஹர்கத், ஹிஸ்புல்லா போன்றவை); பாக். அரசு மற்றும் ஐ.எஸ்.ஐ. உளவு நிறுவனத்தின் நிதி, ஆயுத உதவி, பயிற்சி தரப்பட்டு இந்திய அரசியல், பொருளாதார, சமூக வாழ்வைச் சீர்குலைக்கவும் மதக் கலவரங்களைத் தூண்டவும் ஏவிவிடப்படுகின்றன. பாக். மற்றும் பாகிஸ்தான் கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீர் இளைஞர்களும், இந்தியாவிலுள்ள இஸ்லாம் மத போதனை நிறுவனங்கள் - மதரசாக்களில் பயின்ற மாணவர்களும், கிரிமினல்-குற்றக் கும்பல்களும் இதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

இரண்டாவதாக, உலகம் முழுவதும் வேகமாகப் பரவிவரும் அல்-கொய்தா மற்றும் இஸ்லாமிய ஜிகாதி அமைப்புகள். இஸ்ரேலின் ஜியோனிசம், அமெரிக்காவின் கிறித்தவ ஏகாதிபத்தியம், இந்தியாவின் இந்துத்துவம் போன்றவை உலக இஸ்லாத்தை அழித்து வருகின்றன. உலக இஸ்லாமிய மக்களையும் நாடுகளையும், அடக்கி ஒடுக்குவதாகவும் உலகு தழுவிய இஸ்லாமியப் புனிதப் போர் மூலம் அவற்றை எதிர்த்து முறியடிக்க வேண்டும்; மேற்கே மொராக்கோ, அல்ஜீரியா, எகிப்து முதல் கிழக்கே பிலிப்பைன்ஸ், பாலி வரை தற்போதுள்ள அரசுகளைத் தூக்கி எறிந்து விட்டு இஸ்லாமிய அரசுகளை நிறுவ வேண்டும்; ஈராக், ஆப்கானை ஆக்கிரமித்துள்ள அமெரிக்கா - பிரிட்டன்; பாலஸ்தீனத்தை ஆக்கிரமித்துக் கொண்டு அரபு நாடுகளைத் தாக்கி வரும் இஸ்ரேல்; காஷ்மீரை ஆக்கிரமித்துக் கொண்டு, இந்திய முஸ்லீம்களை ஒடுக்கிவரும் இந்துத்துவ இந்தியா ஆகியவை உடனடி எதிரிகள்; இந்நாடுகளோடு பல வகையிலும் கூட்டுச் சேர்ந்துள்ள அரபு-இஸ்லாமியத் துரோகிகளையும் தாக்கும் புனிதப் போர் என்ற முறையில் பயங்கரவாதத் தாக்குதல்கள் நடத்த வேண்டும் என்பதுதான் பின்லேடன் தலைமையிலான அல்-கொய்தா மற்றும் பல நாட்டு மத அடிப்படைவாதக் குழுக்களின் திட்டம். அவர்களால் ஏவிவிடப்படும் பயங்கரவாதக் குழுக்கள் தாம் ஜூலை 11 மும்பை தொடர் வண்டி குண்டு வெடிப்புகளை நிகழ்த்தியுள்ளன என்று செய்தி ஊடகங்கள் கூறுகின்றன.

மூன்றாவதாக, அயோத்தி பாபரி மசூதி இடிப்பு - அதைத் தொடர்ந்து,



வாரணாசியில் நடந்த குண்டு வெடிப்பில் படுகாயமடைந்த பெண்.

குறிப்பாக மும்பை உட்பட நாடு முழுவதும் இந்து மதவெறி சங்க பரிவாரங்கள் நடத்திய படுகொலைகள், அதன் பிறகு ''கோத்ரா'' இரயில் எரிப்பு சம்பவத்தைத் தொடர்ந்து குஜராத்தில் இஸ்லாமியருக்கு எதிராக நடந்த கொலை வெறியாட்டம், தடா, பொடா போன்ற கொடிய சட்டங்களால் பல ஆயிரம் இஸ்லாமிய இளைஞர்களை அடக்கி ஒடுக்கும் அரச பயங்கரவாதம் இவையெல்லாம் அல்-உம்மா, குஜராத்துக்கு பழிவாங்கும் படை, அஞ்சுமான் போன்ற உள்ளூர் அளவிலான பல பயங்கரவாதக் குழுக்கள் தோன்றக் காரணமாகி உள்ளன. நாட்டிலுள்ள பல மத்ரசாக்களில் மதபோதனை பெற்று, பாகிஸ்தான், வங்கதேசம், சவுதி அரேபியா போன்ற நாடுகளில் பயிற்சி பெற்று, வெளிநாடுகளில் வாழும் இஸ்லாமிய செல்வந்தர்களின் நிதி உதவி பெற்று, ஆயுதங்களைக் கடத்தி வந்து, தகுந்த தருணம் பார்த்து பயங்கரவாதத் தாக்குதல்கள் நடத்துகின்றன.

இவை மூன்றும் ஒன்றோடொன்று தொடர்புடையவை; எதுவொன்றையும் அடியோடு நிராகரித்துவிட முடியாது. என்றாலும் இந்தியாவைக் குறி வைத்து நடத்தப்படும் பயங்கரவாதத் தாக்குதல்கள் அனைத்துக்கும் இந்திய எல்லைக்கு அப்பால் - பாகிஸ்தானில் இருந்து ஏவிவிடப்படும் பயங்கரவாதக் குழுக்களின் சதிவேலைகள் தாம் என்பதை உறுதிப்படுத்தவே இந்திய ஆளும் வர்க்கங்களும், உளவுத்துறைகளும் விழைகின்றன. மதச்சார்பற்றவை என்று கூறிக் கொள்ளும் காங்கிரசு, இடதுசாரி அணி முதல் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. - சிவசேனா முதலிய இந்து மத வெறி பாசிசக் கும்பல்கள் வரை அனைத்து அரசியல் கட்சிகளும் இயக்கங்களும் இந்தக் கோணத்திலேயே அணுகி வருகின்றன. இத்தகைய அணுகுமுறைதான் இந்த நாடு இவ்வளவு காலமும் கடைப்பிடித்து வரும் இந்துத்துவ ''இந்திய தேசிய''க் கொள்கைக்குப் பொருத்தமாக இருக்கிறது.

அதனால்தான், மும்பை ஜூலை 11 தொடர் வண்டி - தொடர் குண்டு வெடிப்புகளை ரயில்வே போலீசு விசாரிப்பதா, பயங்கரவாத எதிர்ப்பு மாநிலப் போலீசு குழு விசாரணை மேற்கொள்வதா என்ற தகராறு தீர்வதற்கு முன்பாகவே, பாகிஸ்தான் ''லஸ்கர் - சிமி'' பின்னணிதான் என்று உடனடியாகவே புலனாய்வுச் செய்திகள் வருகின்றன. ஓரிரு நாட்களிலேயே, நேபாள-பீகார் எல்லையில் இரு பயங்கரவாதிகள் பிடிபட்டதாகவும், லஸ்கர் தலைவர் ''தண்டா'' கென்யாவில் பிடிபட்டதாகவும் செய்திகள் வருகின்றன. ஆனால், மும்பை புறநகரில் உள்ள சதுப்பு நிலக் குடிசைகளில் வாழும் முசுலீம் ஏழைகள் நள்ளிரவில் சுற்றி வளைக்கப்பட்டு, 200 அப்பாவிகளை இழுத்துக் கொண்டு போய் ''விசாரணை'' நடத்துகின்றது, மும்பை போலீசு.

அடுத்த நாளே மும்பை வந்த ஆளுங்கட்சி - எதிர்க்கட்சித் தலைவர்கள் அனைவரும் ஒரு சேர பாகிஸ்தான் நோக்கி குற்றச்சாட்டுகளை அடுக்குகின்றனர். பிரதமர் மன்மோகன் சிங், பாகிஸ்தானை எச்சரிக்கிறார். வாக்குறுதி அளித்தவாறு பயங்கரவாதிகளை ஏவிவிடுவதை பாகிஸ்தான் நிறுத்த வேண்டும், பயங்கரவாதப் பயிற்சி முகாம்களை உடனடியாக மூடவேண்டும். இல்லையென்றால் சமாதானம்-பேச்சு வார்த்தைகள் நிறுத்தப்படும் என்று எச்சரிக்கிறார். எச்சரித்தவாறே, குண்டு வெடிப்புக்குப் பின் சில தினங்களில் நடக்கவிருந்த இந்திய-பாக். அயலுறவுத்துறை செயலர்கள் சந்திப்பு ஒத்தி வைக்கப்பட்டது. புஷ்-பிளேர் முதலிய

www.padippakam.com



நள்ளிரவில் வீடு புகுந்து சோதனை நடத்தி, விசாரணைக்காக மாஹிம் போலீசு நிலையத்திற்கு இழுத்து வரப்பட்ட மும்பய் நகர்ப்புறச் சேரிகளைச் சேர்ந்த ஏழை முசுலீம்கள்.

தனது எஜமானர்களிடம் பாகிஸ்தானுக்கு எதிராக புகார் கூறிய மன்மோகன் சிங், ஜி-8 நாடுகளின் மாநாட்டில் மும்பை தொடர் குண்டு வெடிப்புகள் நிகழ்ச்சிய்ய எழுப்பி பயங்கரவாதத்துக்கு எதிரான கண்டனத் தீர்மானம் நிறைவேற்றச்செய்தார்.

அமெரிக்காவின் மீது பின்லேடன் தலைமையிலான அல்-கொய்தாவின் பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து, ''பயங்கரவாதத்துக்கு எதிரான உலகு தழுவிய போர்'' பிரகடனம் செய்து ஆப்கான், ஈராக் ஆக்கிரமிப்புப் போர் உட்பட பல பாசிசத் தாக்குதல்களை நடத்தி வருகின்றன அமெரிக்காவும் பிரிட்டனும். உலகின் பல்வேறு ஏகாதிபத்திய அடிவருடி நாடுகள் அதற்குத் துணை போகின்றன. அந்த நாடுகளின் வரிசையில் தானாகப் போய் இணைந்து கொண்ட இந்தியா, தாலிபான் மற்றும் அல்-கொய்தாவுடன், பாகிஸ்தானையும் பயங்கரவாத சக்தியாக வைத்து, அதற்கு எதிராக ''அமெரிக்க - பிரிட்டிஷ் பயங்கரவாத எதிர்ப்புப் போரை'' திருப்பிவிடும்படி தொடர்ந்து மன்றாடுகிறது.

ஆனால், அமெரிக்காவும் பிரிட்டனும் தமது ''பயங்கரவாத எதிர்ப்புப் போரின்'' இன்றைய பங்காளியாக பாகிஸ்தானையே சேர்த்துக் கொண்டிருக்கின்றன. ''இஸ்லாமிய பயங்கரவாதத்துக்கு எதிராக ஒரு இசுலாமிய நாட்டுடன் கூட்டு வைத்துக் கொள்வதுதான் சரியான செயல்தந்திரம்'' என்றே ஏகாதிபத்தியங்கள் கருதுகின்றன. அதுமட்டுமல்ல, காஷ்மீர் பிரச்சினை தோன்றிய காலத்திலிருந்தே, இந்தியாவின் நிலையை ஏற்க மறுத்து, பாகிஸ்தான் ஆதரவு நிலையெடுத்து வரும் ஏகாதிபத்தியங்கள், குறிப்பாக பாக்.குடன் நீண்டகாலமாகவே இராணுவ ஒப்பந்தங்கள் போட்டுக் கொண்டு தொடர்ந்து ஆயுத-நிதி உதவி அளித்துவரும் அமெரிக்கா, இந்தியாவின் புகார்களை ஏற்று பாகிஸ்தான் எதிர்ப்பு நிலையெடுக்கும் என்று எதிர்பார்ப்பதே முட்டாள்தனமாகும்.

மேலும், பாகிஸ்தான் ஏவிவிட்டு எல்லைக்கு அப்பாலிலிருந்து வரும் பயங்கரவாதத் தாக்குதல்களை முறியடிப்பதில் உதவுவதில்லை என்பதோடு, அமெரிக்கா - பிரிட்டன் முதலிய ஏகாதிபத்தியங்கள், பாகிஸ்தானுடன் சமாதானமாகப் போகும்படி கடுமையான நிர்பந்தமும் கொடுத்து வருகின்றன. அதனால்தான், இஸ்லாமிய எதிர்ப்பு-பாக். எதிர்ப்பில் அதிதீவிரம் காட்டும் இந்து பாசிச பயங்கரவாத ஆட்சியாளர்களே கூட வலியப் போய் கார்கில் போருக்கு முன்னும் பின்னும் பாகிஸ்தானுடன் சமாதான உறவை ஏற்படுத்தினர். இந்திய விமானம் ஆப்கானுக்குக் கடத்தப்பட்டபோது பா.ஜ.க. மந்திரியே, இந்தியச்சிறையிலிருந்த இரு பயங்கரவாதிகளோடு தனி விமானத்தில் கந்தகார் போய் அவர்களை ஒப்படைத்துவிட்டு, பணயக் கைதிகளை மீட்டு வந்தார். நாடாளுமன்றத்தின் மீது தாக்குதல் நடந்தபின் எல்லையில் இராணுவத்தை குவித்து போர் மிரட்டல்கள் விடுத்துவிட்டு, அமெரிக்க - பிரிட்டன் நிர்பந்தத்துக்குப் பிறகு ஒரு தோட்டா கூடச் சுடாமல் இந்தியா திரும்பிவிட்டது.


ஆக, எல்லைக்கு அப்பால் - பாகிஸ்தானில் இருந்து ஏவிவிடப்படும் பயங்கரவாதத்தை இந்திய ஆட்சியாளர்களால் ஒருபோதும் உண்மையில் எதிர்க்கவோ, எதிர்த்து முறியடிக்கவோ முடியாது. அது ''சிவபெருமான்'' கழுத்தில் சுற்றிப் பாதுகாப்பாக தவழ்ந்து கொண்டிருக்கும் ''பாம்பு'' போன்றது. இந்தியக் ''கருட''னுக்கு அது அஞ்சுவதே இல்லை. எனவே, எல்லை கடந்து வரும் பயங்கரவாதத் தாக்குதல்களை முறியடிப்பதற்காக, பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாதப் பயிற்சி முகாம்கள் மீது அதிரடிப் படைத் தாக்குதல்கள் நடத்துவது; பாலஸ்தீன, அரபுப் போராளிகளுக்கு எதிராக இஸ்ரேல் நடத்தும் பாசிச - இராணுவ பயங்கரவாதத் தாக்குதல் போன்ற எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள ஆர்.எஸ்.எஸ். / பா.ஜ.க. முதல் காங்கிரசு வரை எந்த இந்திய ஆட்சியாளர்களும் ஒருபோதும் துணியப்போவதில்லை.

இந்த நிலையில் உள்ளூர் இஸ்லாமிய மக்களுக்கு எதிராக அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விடுவது ஒன்றே, மும்பை ஜூலை 11 போன்று, அதிகரித்து வரும் பயங்கரவாதத்தை முறியடிக்கக் கூடியது என்று இந்திய ஆளும் வர்க்கங்கள் நம்புகின்றன. அதற்கான பிரச்சாரத்திலும் தயாரிப்பிலும் இந்துத்துவ தேசியவாதிகள் முதல் போலி மதச்சார்பற்ற ஆளும் கூட்டணி வரை அனைவரும் இறங்கிவிட்டனர்.

இந்து மதவெறி பாசிச பயங்கரவாதிகளின் எண்ணவோட்டத்தை மிகவும் தெளிவாகவும் சுருக்கமாகவும் பார்ப்பன பாசிச குரு ''சோ'' தனது ''துக்ளக்'' வார இதழின் தலையங்கமாக எழுதியுள்ளார். ''நடந்துள்ள அராஜகத்திற்குக் காரணம் தேடி அலைவது, அந்த அட்டூழியத்தை நியாயப்படுத்துவதில்தான் முடியும். அதை விடுத்து, தீவிரவாதம் நசுக்கி, பொசுக்கப்பட வேண்டியது என்ற ஒரே உறுதியை மனதில் கொண்டு, அரசு செயல்பட வேண்டும். தீவிரவாதிகளுக்கு சங்கடங்களையும், அவர்களுக்கு உதவுகிற பலருக்கு அச்சத்தையும், உளவுத்துறை துப்பறிவதற்குப் பல வசதிகளையும், போலீசு தக்க சமயத்தில் நடவடிக்கை எடுக்க வாய்ப்புகளையும் - உருவாக்கித் தருகிற 'பொடா' போன்ற சட்டம் அவசியத் தேவை என்பதை, மத்திய அரசு உணர வேண்டும்.'' (துக்ளக் 26.7.06, பக். 3,4)

பொடாவைத் திரும்பக் கொண்டு வருவது உட்பட ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. பாசிஸ்டுகளின் கருத்தை நிராகரிப்பதாகவும், இஸ்லாமிய பயங்கரவாதத்தை முறியடிப்பதற்கு அது தீர்வல்ல என்று ஆளும் காங்கிரசு தலை

www.padippakam.com



பால்தாக்கரேயின் மனைவி மறைந்த மீனாதாய் சிலை அவமானப்படுத்தப்பட்டதைச் சாக்காக வைத்துக் கொண்டு, சிவசேனா குண்டர்கள் நடத்திய கலவரத்தில் தீவைக்கப்பட்ட பேருந்து.

மையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி மற்றும் இடதுசாரிக் கூட்டணிகளும் அவற்றின் அரசும் கூறுகின்றன. ஆனால், பொடா சட்ட நிறைவேற்றம் போன்ற பகிரங்க நடவடிக்கைகளில் இந்த அரசு ஈடுபடவில்லை என்றாலும் அதிகாரபூர்வமற்ற - இரகசிய வழிகளில் அரசு பயங்கரவாதத்தை ஏற்கெனவே அமலாக்கி வருகிறது. அதற்காக மத்திய-மாநில அரசு உளவுப் படைகளை இறக்கிவிடப் பட்டுள்ளது. ஏறக்குறைய எல்லா மாநிலங்களிலும் பயங்கரவாத எதிர்ப்பு குழுக்கள் என்ற பெயரில் தனிப்படைகள் இயங்குகின்றன. சந்தேகத்துக்குரியவர்கள் என்ற பெயரில் நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டு, குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்படாமல், வழக்கு விசாரணைகள் நடத்தப்படாமல் சிறையிலடைக்கப்படுகின்றனர். பாகிஸ்தான் ஊடுருவல் - பயங்கரவாதி என்ற பெயரில் போலி மோதல்கள் நடத்தி பல இளைஞர்கள் கொல்லப்படுகின்றனர். காஷ்மீரில் அப்பாவிச் சிறுவர்கள் கூட பயங்கரவாதிகள் என்ற பெயரில் கொல்லப்படுகின்றனர்.

காங்கிரசுத் தலைவர்களின் தனிப்பட்ட கருத்துக்கள், ஓய்வுபெற்ற உளவுத்துறை - போலீசு உயரதிகாரிகளின் முடிவுகள் ஆகியவை இந்து பாசிச பயங்கரவாதிகளின் கருத்துக்களையே பிரதிபலிக்கின்றன. தடா, பொடா சட்டங்கள் கேடாகப் பயன்படுத்தப்பட்டதைப் போலவே, தற்போது கட்டவிழ்த்து விடப்படும் அரசு பயங்கரவாதம், எந்தத் தீவிரவாதத்துடனும் தொடர்பில்லாத ஜனநாயக, முற்போக்கு சக்திகள், பத்திரிக்கையாளர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள் என்று பிற பகுதி மக்களையும் பலிவாங்குவதற்கு ஏவிவிடப்படும் என்பதில் சந்தேகமில்லை.

என்னதான், கடுமையான அரசு பயங்கரவாத ஒடுக்குமுறையை ஏவிவிட்டபோதும் இஸ்லாமிய பயங்கரவாதத்தை இந்திய ஆட்சியாளர்களால் ஒரு போதும் முடிவுக்குக் கொண்டுவரவே முடியாது. ஏதோ ஒரு சில மாதங்கள் அமைதியாகி விட்டதாகத் தோன்றினாலும், நேரம் குறித்த வெடிகுண்டுகள் நிறையவே ஒளித்து வைக்கப்பட்டிருக்கின்றன. அவை மும்பை தொடர்வண்டி தொடர் குண்டுகளைப் போல எப்போது வேண்டுமானாலும் வெடிக்கலாம்.

அதற்கான அடிப்படையின் கர்த்தாவாக இந்திய ஆட்சியாளர்களே உள்ளனர். முதலாவதாக, இந்த நாட்டில் இஸ்லாமிய பயங்ரவாதம் மட்டும்தான் கோரத் தாண்டவமாடுகின்றது என்ற தவறான தோற்றம் உருவாக்கிப் பாதுகாக்கப்படுகிறது. இஸ்லாமிய பயங்கரவாதத்திற்குத் தூண்டுதல் சக்தியாக விளங்குவது இந்து பாசிச பயங்கரவாதம். நாட்டின் பெரும்பான்மை மக்களைச் சமூக அடிப்படையாகக் கொண்டிருப்பதால், குஜராத், 1992-93 ஆண்டுகளில் நடந்த மும்பை இந்து மதவெறிப் படுகொலைகள், 1985 டில்லி சீக்கியர் மீதான கொலை வெறியாட்டம் போன்ற இந்து பாசிச பயங்கரவாதச் செயல்கள் பெருந்திரள் தாக்குதல்களாக இருக்கின்றன. ஆனால், இஸ்லாமிய பயங்கரவாதம் சிறுபான்மை சமூக அடிப்படையைக் கொண்டிருப்பதால், பலமுறை நிகழ்த்தப்பட்ட மும்பை தொடர்குண்டு வெடிப்புகள், கடந்த தீபாவளிக்கு முன்பு நடந்த டெல்லி குண்டு வெடிப்புகள், சமீபத்தில் நடந்த வாரணாசி குண்டு வெடிப்புகள் போன்றவை முற்றிலும் சதிச் செயல்களாக உள்ளன. மேலும், காஷ்மீரில் நடத்தப்படும் அரசு-இராணுவ பயங்கரவாதப் படுகொலைகள் எல்லாம் தேசிய நலன்களுக்கானது என்று நியாயப்படுத்தப்படுகின்றன. ஆகவே, இந்துமதவெறி, அரசு பயங்கரவாதப் படுகொலைகள் மற்றும் இஸ்லாமிய பயங்கரவாத எதிர்த் தாக்குதல்கள் என்ற சுழற்சியில் மாறிமாறி இந்த நாடும் மக்களும் சிக்கிக் கொண்டுள்ளனர்,

ஆனால், இந்திய ஆட்சியாளர்களும், பிற அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் ''இசட்'' முதல் ''ஏ'' வரை 26 வகை பிரிவுகளின் கீழ் பூனைப்படைகள் புடை சூழ நடமாடி வருகின்றனர். தொடர்ந்து இஸ்லாமிய பயங்கரவாதிகள் தாக்குவதற்குரிய காரணங்களை உருவாக்கிக் கொடுத்து வருகின்றனர். மத்திய கிழக்கில் அரபு மக்களுக்கு எதிராகப் பாசிச வெறியாட்டம் போடும் ஜியோனிய இஸ்ரேலுடனான இராணுவ உறவுகளை அதிகரித்து வருகின்றனர்; ஆப்கானிலும் ஈராக்கிலும் அமெரிக்க-பிரிட்டன் ஆக்கிரமிப்பாளருக்குத் துணையாக (நேரடியாக இராணுவத்தை அனுப்பி வைக்க) பலமுறை எத்தணித்தனர். முடியாத நிலையில் தனியார் படை திரட்டி அனுப்பியுள்ளனர். இங்கேயும் இந்து மதவெறி பாசிஸ்டுகள் குஜராத், ஒரிசா, மராட்டியம் போன்ற கொலைவெறியாட்டங்கள் தங்குதடையின்றி நடத்தப்படுகின்றன.

இந்து பாசிச பயங்கரவாதத்துக்கு எதிரான பதிலடி-தற்காப்பு நடவடிக்கைகள் என்பதாக மட்டும் இஸ்லாமிய பயங்கரவாதிகளின் செயல்பாடுகள் இல்லை என்பதும் உண்மையே. வெவ்வேறு இஸ்லாமிய பயங்கரவாதக் குழுக்களின் நோக்கங்கள் வெவ்வேறானவையாக உள்ளன, அமெரிக்காவின் சி.ஐ.ஏ., பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. போன்ற உளவுப் படைகளால் இயக்கப்படும் குழுக்களும் உள்ளன. அல்லாவின் ஆட்சியை நிறுவுவதற்கான புனிதப் போர் (ஜிகாத்) நடத்தும் குழுக்களும் உள்ளன. இஸ்லாம் எதிர்ப்பு, பாக். எதிர்ப்பு இந்துத்துவமே இந்திய தேசியம் என்பதும் தவறு; அதேபோல, அல்லாவின் ஆட்சியை நிறுவும் புனிதப்போர் (ஜிகாத்) என்பதும் தவறு. இரண்டுமே மதவெறி பயங்கரவாதத்துக்கு இந்த நாட்டையும் மக்களையும் பலியிடுவதாகும். முன்னதற்குச் சான்று குஜராத்; பின்னதற்குச் சான்று மும்பை ஜூலை 11. இரத்தத்தை இரத்தத்தால் கழுவ முடியாது என்பதையே இரண்டும் காட்டுகின்றன.

• ஆர்.கே.

www.padippakam.com

## பிரதமரின் விதர்பா பயணம்:

# விவசாயிகளை ஏய்க்கும் இன்னுமொரு மோசடி நாடகம்

மகாராஷ்டிரா மாநிலத்திலுள்ள விதர்பா பகுதிக்கு, கடந்த ஜூன் மாத இறுதியில் வந்து போன பிரதமர் மன்மோகன் சிங், ''அப்பகுதி விவசாயிகள் கடனில் மூழ்கி நொடித்துப் போயிருப்பதையும்; அப்பகுதி பருத்தி விவசாயம் நாசமாகி வருவதையும்'' ஒப்புக் கொள்வதாக அறிவித்திருக்கிறார். ''பொருளாதாரப் புலி'' மன்மோகன் சிங், தன் கண்களால் பார்த்து இந்த உண்மையை ஒப்புக் கொள்வதற்கு, ஏறத்தாழ 650 பருத்தி விவசாயிகள் தங்கள் உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டியதாகி விட்டது.

விதர்பா பகுதியில் விவசாயிகளின் வாழ்க்கை இயல்பாகப் போய்க் கொண்டிருப்பதாகப் புளுகி வந்த மகாராஷ்டிர மாநில அரசு, மன்மோகன் சிங் விதர்பா பகுதிக்கு வந்து விவசாயிகளைச் சந்திக்கப் போவது உறுதியானவுடன், தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளுள் சில குடும்பங்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு வேகவேகமாக நட்டஈடு வழங்கத் தொடங்கியது. இதில் கூட, அம்மாநில அரசு நாணயமாக நடந்து கொள்ளவில்லை. நட்டஈடு ஒரு இலட்சம்ரூபாய் என அறிவித்திருந்த அம்மாநில அரசு, அவர்களுக்கு வழங்கியதோ வெறும் முப்பதாயிரம் ரூபாய்தான்!

மன்மோகன் சிங் காலடித்தடம் படப் போகும் சில கிராமங்களில் புதிதாகச் சாலைகள் போடப்பட்டன; தெரு விளக்குகள் போடப்பட்டன; மன்மோகன் விரைவாக வந்து திரும்புவதற்கு வசதியாக ஹெலிகாப்டர் இறங்கு தளங்கள் அமைக்கப்பட்டன. எல்லாவற்றுக்கும் மேலாக, மன்மோகன் சிங்கைச் சந்தித்துத் தங்களின் குறைகளைக் கூறுவதற்காக 30-35 விவசாயக் குடும்பங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு பிரதமர் முன் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற பயிற்சியும் அளிக்கப்பட்டது. இப்படியாக மன்மோகன் சிங்கின் பயணமும், சந்திப்பும் அதிகார வர்க்கத்துக்கேயுரிய வக்கிரத்தோடு நடந்து முடிந்தது.

ஆறு மாவட்டங்களைக் கொண்ட விதர்பா பகுதியில், ஏதோ ஒன்றிரண்டு கிராமங்களுக்குப் போய், தேர்ந்தெடுக்கப்பட்ட சில விவசாயக் குடும்பங்களைச் சந்தித்துவிட்டு, மன்மோகன் சிங் தனது கடமையை முடித்துக் கொண்டாலும், ''அவர் ஏதாவது நல்லது செய்வார்'' என்ற நம்பிக்கை விவசாயிகளிடம் இருந்தது. குறிப்பாக, ''வங்கிக் கடனைத் தள்ளுபடி செய்வார்; கந்துவட்டிக் கடன் கொடுமையில் இருந்து தங்களை மீட்க ஏதாவதொரு வழி சொல்வார்; பருத்திக்குத் தரப்படும் ஆதார விலையைக் கூட்டிக் கொடுப்பார்'' என விவசாயிகள் நம்பினார்கள். ஆனால், இந்தப் பொருளாதாரப் புலி அறிவித்துள்ள நிவாரண உதவித் திட்டத்தை, முதலாளித்துவ விவசாய நிபுணர்களால்கூட முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியவில்லை. விதர்பா பகுதி விவசாயிகளோ இத்திட்டத்தை ஏமாற்று மோசடி எனக் காரித் துப்புகின்றனர்.

•••

விதர்பா பருத்தி விவசாயிகளின் துயரத்தைத் துடைப்பது என்ற பெயரில் மன்மோகன் சிங் அறிவித்துள்ள 3,750 கோடி ரூபாய் பெறுமான உதவித் திட்டத்தில், 2,177 கோடி ரூபாய் விதர்பா பகுதியில் நடந்து வரும் பாசனத் திட்டங்களை நிறைவேற்றவும்; 240 கோடி ரூபாய் சொட்டு நீர்ப் பாசனம் போன்ற ''நவீன'' பாசனத் திட்டங்களை நிறைவேற்றவும்; 225 கோடி ரூபாய் தோட்டப் பயிர் விவசாயத்தைப் பிரபலப் படுத்தவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இவை போக, பருத்தி விவசாயிகளுக்குக் கிடைத்தது என்னவென்றால், அரசாங்கம் கொடுத்துள்ள கடனுக்கான வட்டித் தள்ளுபடி; அரசாங்கக் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான காலக் கெடுவைத் தள்ளி வைப்பது; மற்றும் புதிய கடன் வழங்குவது, தரமான விதைகள் விநியோகிப்பது போன்ற சில்லறை சலுகை அறிவிப்புகள்தான். அடுத்தவன் இலைக்குப் பாயசம் ஊற்றச் சொல்லும் தந்திரமாக முடிந்து போனது, இந்த உதவித் திட்டம்.

உலக வங்கியின் புரோக்கரான மாண்டேக் சிங் அலுவாலியா தலைமையில் செயல்படும் திட்ட கமிசன், ''அப்பகுதியில் நடந்து வரும் பாசனத் திட்டங்களை அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் முடித்து விட்டால், பருத்தி விவசாயிகளின் பிரச்சினை தீர்ந்து விடும்'' என்ற அரிய யோசனையை மன்மோகன் சிங் விதர்பா பகுதிக்கு ''திக் விஜயம்'' செய்வதற்கு முன்பாகவே, முன் வைத்தது. இதன்படிதான், 3,750 கோடி ரூபாய் உதவித் திட்டத்தில், 2,417 கோடி ரூபாய் - ஏறத்தாழ 65 சதவீதம் - பாசனத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. திட்டக் கமிசனின் இந்த அரிய யோசனையின் இலட்சணம் என்ன தெரியுமா?

விதர்பா பகுதியில் பல பத்தாண்டுகளாக ஆமை வேகத்தில் நடந்துவரும் 500-க்கும் மேற்பட்ட பாசனத் திட்டங்கள், அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள்

வார்தா என்ற கிராமத்தில் தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளின் உறவினர்களைச் சந்தித்து உரையாடும் பிரதமர் மன்மோகன் சிங்: முதலைக் கண்ணீர்.




படிப்பகம்

முடிந்து விட்டால் கூட, விதர்பா பகுதி பூஞ்சோலையாக மாறிவிடாது. அதிகார வர்க்கத்தின் புள்ளி விவரப்படியே, பாசனத் திட்டங்கள் உருப்படியாக நடந்து முடிந்தால் 28.35 இலட்சம் ஹெக்டேர் நிலங்களுக்கு தான் பாசன வசதி கிட்டும். ஆனால், விதர்பாவில் உள்ள மொத்த விவசாய நிலப்பரப்போ 97.43 இலட்சம் ஹெக்டேர். பாசன வசதி கிடைக்காத விவசாயிகள் வானத்தையோ, கிணற்றையோ நம்பிதான் விவசாயம் செய்ய வேண்டும். பருத்தி விவசாயிகளுக்குக் கிணறு தோண்ட உதவியோ, மானியமோ தர முன்வராத மைய அரசு, சொட்டு நீர்ப்பாசன மேம்பாட்டுக்காக 240 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதை வக்கிரத்தின் உச்சம் என்றுதான் சொல்ல வேண்டும்.

இது ஒருபுறமிருக்க, மகாராஷ்டிரா மாநிலத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு முன் கொண்டு வரப்பட்ட ''நீர் ஆதார ஒழுங்குமுறைச் சட்டம், அரசாங்கம் அமைத்து வரும் பாசன வசதிகளை, ஏழை-நடுத்தர விவசாயிகள் பயன்படுத்தும் உரிமையைத் தட்டி பறித்துவிட்டது. இச்சட்டத்தின்படி, விவசாயிகள் ஒரு ஏக்கர் நிலத்திற்கு ஒரு ஆண்டுக்கு அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய பாசனக் கட்டணம் எட்டாயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெற்றுக் கொண்டுள்ள விவசாயிகளுக்கு ஆண்டு பாசனக் கட்டணம் ஒன்றரை மடங்கு அதிகமாக 12,000 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இக்கட்டணத்தைக் கட்டத் தவறும் விவசாயிகள் மீது, பாசனக் கட்டணத்தைப் போல 10 மடங்கு அபராதம் விதிக்கப்படுவதோடு ஆறுமாதச் சிறை தண்டனையும் விதிக்கப்படும்.

இப்படியொரு பகற்கொள்ளை அடிக்கும் சட்டம் இருக்கும் மாநிலத்தில், விவசாயிகளுக்குப் பாசன வசதி என்பது ஊரை ஏமாற்றுகின்ற வேலை தான். ஒப்பந்த விவசாயம் என்ற பெயரில் நுழைந்துள்ள தரகு முதலாளித்துவ நிறுவனங்கள்; ஏற்றுமதிக்காக தோட்டப் பயிர்களைப் பயிரிடும் நவீன பணக்கார விவசாயிகள்; அரசாங்க காண்டிராக்ட்காரர்கள் - இவர்களின் கஜானாவை நிரப்பத்தான், இந்த 2,417 கோடி ரூபாய் பெறுமான பாசனத் திட்டங்கள் பயன்படும்.

மகாராஷ்டிரா மாநிலத்தில் பருத்தி விதைகள் என்றாலே, மான்சாண்டோ நிறுவனத்தின் ''பி.டி.'' பருத்தி விதை கள்தான். ஆந்திராவில் பல நூற்றுக்கணக்கான பருத்தி விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டதற்கு இந்த மலட்டு விதைகளும் ஒரு காரணம் எனத் தெரிந்திருந்த போதிலும், இந்த ''பி.டி.'' பருத்தி விதைகளை மகாராஷ்டிராவில் விற்கும் ஏகபோக உரிமையை, ''மாஹிகோ'' என்ற அரசு நிறுவனமே மான்சாண்டோவிடமிருந்து வாங்கி வைத்துள்ளது.

**பருத்தி கொள்முதல் விலையை குறைத்ததன் மூலம் விதர்பா பருத்தி விவசாயிகளிடமிருந்து 1,000 கோடி ரூபாயைக் கொள்ளையடித்துவிட்டு, 712 கோடி ரூபாய் அளவிற்கு வட்டி தள்ளுபடி செய்திருக்கிறோம் என மன்மோகன் கும்பல் பீற்றிக் கொள்வது கடைந்தெடுத்த மோசடித்தனம்.**

''ஹெச்.4'' என்ற இரக பருத்தி விதை ஒரு கிலோ ரூ. 300/-க்கு விற்கப்படும் பொழுது, ''மாஹிகோ'' சந்தையின் மீதான தனது கட்டுப்பாட்டைப் பயன்படுத்திக் கொண்டு, 450 கிராம் பி.டி. பருத்தி விதைகளை ரூ. 750-க்கு விற்று, பருத்தி விவசாயிகளை மொட்டையடித்து வருகிறது.

விதர்பா பருத்தி விவசாயிகள் கோருகிறபடி ''பி.டி.'' மலட்டு விதை விற்பனையையும்; பருத்தி விதைகள் - இடுபொருட்கள் விற்பனையில் நடந்து வரும் பகற்கொள்ளையையும் தடுத்து நிறுத்த மன்மோகன் சிங் முயலவில்லை. மாறாக, மான்சாண்டோவின் ஏஜெண்டாகச் செயல்படும் மகாராஷ்டிரா அரசிடம், விவசாயிகளுக்கு நல்ல தரமான விதைகளை வழங்குவதற்கு 180 கோடி ரூபாயைத் தூக்கிக் கொடுத்து, பருத்தி விவசாயிகளின் முகத்தில் கரியைப் பூசிவிட்டார்.

''பருத்திக்கு மாநில அரசாங்கம் தரும் ஆதார விலையை ரூ. 2700/- ஆக உயர்த்துவோம்'' என காங்கிரசு - தேசியவாத காங்கிரசு கூட்டணி தேர்தல் வாக்குறுதி அளித்திருந்தது. ஆனால், இக்கூட்டணி சட்டசபை தேர்தலில் வென்று, மாநில ஆட்சியைப் பிடித்த பிறகு, ஏற்கெனவே கொடுக்கப்பட்டு வந்த ஆதார விலையில் (ஒரு குவிண்டாலுக்கு ரூ. 2,200/-) இருந்து ரூ. 500-ஐ வெட்டி விட்டு, 1,700 ரூபாய்தான் ஆதார விலையாகக் கொடுத்து வருகிறது. இந்த வெட்டின் மூலம், கடந்த ஆண்டு மட்டும், மகாராஷ்டிரா மாநில அரசுக்குக் கிடைத்துள்ள இலாபம் ஏறத்தாழ 1,000 கோடி ரூபாய். விதர்பா பருத்தி விவசாயிகளிடமிருந்து 1,000 கோடி ரூபாயைக் கொள்ளையடித்துவிட்டு, 712 கோடி ரூபாய் அளவிற்கு வட்டி தள்ளுபடி செய்திருக்கிறோம் என மன்மோகன் கும்பல் பீற்றிக் கொள்வது கடைந்தெடுத்த மோசடித்தனம்.

பருத்தி அறுவடை முடிந்து விற்பனைக்கு வந்த மார்ச் மாதம் தொடங்கி மே மாதத்திற்குள் விதர்பாவில் 80-க்கும் மேற்பட்ட பருத்தி விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டு மாண்டு போனார்கள். உற்பத்திச் செலவுக்கு ஏற்ற விலை கிடைக்காமல், அடிமாட்டு விலைக்கு விற்க வேண்டிய சந்தையின் சூதாட்டத்திற்குள் விவசாயிகள் தள்ளப்பட்டதுதான் இந்தச் சாவுகளுக்குக் காரணம். மேலும், விதர்பா பருத்தி விவசாயிகளின் அகால மரணத்திற்கும் அமெரிக்காவிற்கும் நேரடித் தொடர்புண்டு.

அமெரிக்கா, தனது நாட்டில் விளையும் பருத்திக்கு, ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ 18,000 கோடி ரூபாய் மானியமாகக் கொடுக்கிறது. இதனால், அமெரிக்காவில் இருந்து அடிமாட்டு விலையில் பருத்தி இந்தியாவிற்கு இறக்குமதியாகிறது. இந்த அமெரிக்க பருத்தி மீது வெறும் 10 சதவீத அளவிற்கே சுங்க வரி விதிக்கப்படுவதால், உள்நாட்டில் விளையும் பருத்தியை விட, அமெரிக்க பருத்தி மிக மலிவாக சந்தையில் கிடைக்கிறது. தாராளமயம் என்ற பெயரில் நடக்கும் இந்த நாணயமற்ற வர்த்தக இறக்குமதிதான் இந்தியப் பருத்தி விவசாயிகளைப் போண்டியாக்கி வருகிறது; தற்கொலைக்குத் தள்ளி வருகிறது.

அதனால்தான் விதர்பா பகுதி பருத்தி விவசாயிகள், ''அமெரிக்காவில் இருந்து பருத்தி இறக்குமதி செய்வதைக் கைவிட வேண்டும். பருத்திக்கு அரசாங்கம் கொடுக்கும் ஆதார விலையை மூவாயிரம் ரூபாயாக உயர்த்த வேண்டும்'' எனக் கோருகிறார்கள். பருத்தி விவசாயிகளின் உயிராதாரமான இந்தக் கோரிக்கைகளை மன்மோகன் சிங் கண்டு கொள்ளவில்லை என்பது ஒருபுறமிருக்க, சமீபத்தில் அவரின் தலைமையில் கூடிய அமைச்சரவை, விவசாயத் துறை முழுவதிலும் தாராளமயத்தை அமல்படுத்தப் போவதாக முடிவெடுத்திருக்கிறதாம். இந்த முடிவு நடைமுறைக்கு வரும்பொழுது விதர்பாவில் நடந்து வரும் விவசாயிகளின் தற்கொலைச் சாவுகளை, காவிரிப் படுகையிலும் நாம் காண நேரிடும்!

• செல்வம்

www.padippakam.com

## நேபாளப் புரட்சி:

# புதிய வரலாறு படைக்கும் மாவோயிஸ்டுகள் கொச்சைப்படுத்தும் போலி கம்யூனிஸ்டுகள்


நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு-ஏகாதிபத்திய எதிர்ப்பு புதிய ஜனநாயகப் புரட்சியைச் சாதிப்பதுதான் நேபாள மாவோயிசக் கம்யூனிஸ்ட் கட்சியின் இலட்சியம்; என்றாலும், நேபாள மக்கள் ஜனநாயகப் புரட்சி தற்போது ஒரு புதிய இடைக் கட்டத்தைக் கடந்து கொண்டிருக்கிறது. நேபாளத்தில் மன்னராட்சியைத் தூக்கியெறிந்து ஒரு ஜனநாயகக் குடியரசை நிறுவுவது என்பதை இந்த இடைக்கட்டத்தின் உடனடி நோக்கமாகக் கொண்டு, போர்த்தந்திர முக்கியத்துவம் வாய்ந்த செயல் தந்திரத்தை வகுத்து மாவோயிச கம்யூனிஸ்ட் கட்சி செயல்படுகிறது. அடிப்படையில் அதன் அணுகுமுறையும், அரசியல் தீர்வும் சரியானது, அவசியமானது என்று வரவேற்கிறோம். அதேசமயம், இந்தியப் புரட்சிகர இயக்கத்திற்கு நேபாள மாவோயிசக் கட்சித் தலைவர் முன்வைத்துள்ள ஆலோசனைகள் ஏற்கத்தக்கன அல்ல. அது குறித்து நமக்கு விமர்சனங்கள் உள்ளன. இவை குறித்து எமது கருத்துக்களை தனிப் பிரசுரமாக - விரிவாக பின்னர் வெளியிடுவோம். நேபாள மாவோயிஸ்டுகள் ஏழு கட்சிகளுடன் அமைத்துள்ள கூட்டணி, ஒப்பந்தங்கள் மற்றும் இந்திய அரசுடனான அவர்களின் பேச்சு வார்த்தைகள் ஆகியவை பற்றிய முழுவிவரமும் இன்னமும் கிடைக்கவில்லை; செய்தி ஊடகங்கள் மூலம் கிடைத்துள்ள தகவல்களின் அடிப்படையிலேயே இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

— ஆசிரியர் குழு

புரட்சி அலை ஓங்கி வீசும் நேபாள நாட்டின் தலைநகரான காத்மண்டு, ஜூன் 2-ஆம் நாளன்று மக்கள் திரள் பெருவெள்ளத்தால் திணறியது. பஞ்சைப் பராரிகளாக்கப்பட்ட கிராமப்புற விவசாயிகளும் உழைக்கும் மக்களும் தமது குடும்பத்தோடு திரண்டு, செங்கொடிகள் விண்ணில் உயர, பேருற்சாகத்துடன் அணிவகுத்து ஆர்ப்பரித்தனர். "மன்னராட்சி முறை ஒழிக! அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தலை நடத்து! உழுபவனுக்கே நிலம் சொந்தம்!" என்ற முழக்கங்கள் இமயமலையில் மோதி எங்கும் எதிரொலித்தன.

நேபாள மக்கள் யுத்தத்தின் பத்தாண்டு நிறைவையொட்டி, கம்யூனிசப் புரட்சியாளர்களான மாவோயிஸ்டுகள், மன்னராட்சிக் கொடுங்கோன்மைக்கு எதிரான மாபெரும் மக்கள் பேரெழுச்சிக்குப் பிறகு, முதன்முதலாக நடத்திய அந்தப் பேரணி - பொதுக் கூட்டத்தில் திரண்ட உழைக்கும் மக்களின் எண்ணிக்கை இரண்டு இலட்சத்திற்கும் மேல்! இப்பொதுக்கூட்டம் நடந்த டுண்டிகேல் சதுக்கத்திலிருந்து அரை கி.மீ தூரத்தில்தான் கொடுங்கோல் மன்னன் ஞானேந்திராவின் அரண்மனை. நெஞ்சிலே வெஞ்சினம் பொங்கத் திரண்டுள்ள இந்த மக்கள் வெள்ளம், சீறியெழுந்து அரண்மனையைத் தாக்கி அழித்து விடுமோ என்று பீதியில் நடுங்கியது, அதிகாரம் பறிக்கப்பட்ட

நேபாள ஓட்டுக் கட்சிகளுக்கு பகிரங்க எச்சரிக்கை: ஜூன் 2-ஆம் நாளன்று காத்மண்டு நகரில் மாவோயிஸ்டுகள் நடத்திய பேரணி-பொதுக்கூட்டத்தில் திரண்ட மக்கள் வெள்ளம்.



www.padippakam.com

ஞானேந்திரா கும்பல். என்ன செய்வது என்று புரியாமல் கையைப் பிசைந்து கொண்டிருந்தன, மன்னரால் உயிர்ப் பிக்கப்பட்ட நாடாளுமன்றத்தின் கட்சி கள்.

''இந்த அரண்மனை நேபாள ஜன நாயகக் குடியரசின் தலைமைச் செயலக மாக மாறப் போகிறது. அதற்காகத்தான் இதை இன்னும் விட்டு வைத்திருக்கி றோம். அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தலை நடத்தி, புதிய அரசியலமைப் புச் சட்டத்தை உருவாக்கி, ஏகாதிபத்திய எதிர்ப்பு - நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு ஜன நாயகக் குடியரசை நிறுவுவதே எங்கள் லட்சியம். அரசியல் நிர்ணய சபைக் கான தேர்தலை தாமதப்படுத்த முயற் சிக்கும் கட்சிகளை நேபாள மக்கள் விரட்டியடிப்பார்கள். நேபாள மக்கள் விழிப்புடன் இருக்கிறார்கள்'' என்று இப்பொதுக் கூட்டத்தில் மாவோயிஸ்டு தலைவர்கள் எச்சரிக்கை விடுத்தார்கள்.

மன்னராட்சிக்கு எதிரான போராட் டத்தில் எக்காலத்திலும் திரண்டிராத அளவுக்கு மாவோயிஸ்டுகளின் இப் பேரணி - பொதுக்கூட்டத்தில் மக்கள் திரண்டு, மாவோயிஸ்டுகளின் நோக் கத்தை எதிரொலித்ததைக் கண்டு பீதிய டைந்த தற்காலிக நாடாளுமன்றத்தின் கட்சிகள், மக்கள் சக்திக்கு அடிபணிந்து, விரைவில் அரசியல் நிர்ணய சபைக் கான தேர்தலை நடத்துவதாக அறிவித் தன. பயங்கரவாத பொய்க்குற்றம் சாட்டி மன்னராட்சி காலத்தில் சிறையி டப்பட்ட மாவோயிஸ்டு அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்துள்ளன. மாவோயிஸ்டுகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தி, கடந்த ஜூன் 16-ஆம் நாளன்று இக்கட் சிகள் புதியதொரு ஒப்பந்தத்தை நிறை வேற்றியுள்ளன.

இப்புதிய ஒப்பந்தப்படி, தற்போ தைய தற்காலிக நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு புதிய இடைக்கால அரசு நிறுவப்படும்; புதியதொரு இடைக்கால சட்டம் இயற்றப்படும்; அதனடிப்படையில் அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல் நடத்தப்படும்; அச் சபை, புதிய அரசியலமைப்புச் சட் டத்தை இயற்றும்; அதைத் தொடர்ந்து நேபாள ஜனநாயகக் குடியரசு பிரகட னப்படுத்தப்பட்டு, புதிய அரசியல மைப்புச் சட்டப்படி பல கட்சி நாடாளு மன்ற ஜனநாயகம் நிறுவப்படும். இதற் கான கால வரையறை தீர்மானிக்கப்பட் டுள்ளதோடு, 31 பேர் கொண்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவையும் இருதரப்பும் நிறுவியுள்ளன. 8 அம்சங் களைக் கொண்ட இந்த ஒப்பந்தத்தை



மேலாதிக்கவாதிகளின் முகத்தில் கரிபூசிய ஜூன் 16 ஒப்பந்தத்திற்காக, மாவோயிஸ்டுகளும் தற்காலிக அரசின் பிரதிநிதிகளும் நடத்தும் பேச்சுவார்த்தை.

நிறைவேற்றவும் இரு தரப்புகளின் பேச்சுவார்த்தைகளை மேற்பார்வை யிட்டு வழிநடத்தவும் நீதிபதிகள், மனி தஉரிமை இயக்கத்தினர், முன்னாள் அமைச்சர்களைக் கொண்ட 5 பேர் அடங்கிய குழுவையும் நிறுவியுள்ள னர். நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, புதிய இடைக்கால அரசும், இடைக்கால சட்டமும் உருவான பிறகு, தமது கட் டுப்பாட்டிலுள்ள மக்கள் அரசாங்கத் தைக் கலைப்பதாகவும், சுதந்திரமாக எவ்வித அச்சுறுத்தலோ நிர்ப்பந்தமோ இன்றி அரசியல் நிர்ண சபைக்கான தேர்தலை நடத்தவும் புதிய குடியரசை நிறுவவும் தாம் முழுமையாக அர்ப்ப ணிப்பதாக மாவோயிஸ்டுகள் அறிவித் துள்ளனர்.

### மேலாதிக்கவாதிகள் முகத்தில் கரிபூசிய புதிய ஒப்பந்தம்

நேபாளத்தில் மன்னராட்சிக் கொடுங்கோன்மைக்கு எதிராக கடந்த ஏப்ரல் இறுதியில் நடந்த மக்கள் பேரெ ழுச்சியின் பயனை அம்மக்கள் அனுப விக்காமல் தடுப்பதற்கு அமெரிக்காவும் இந்தியாவும் மும்முரமாக இருந்தன. அமெரிக்கா வெளிப்படையாகவே மன் னராட்சியை ஆதரித்து ஆயுத உதவிக ளைச் செய்தது. மாவோயிஸ்டுகளை பயங்கரவாதிகளாகச் சித்தரித்தது. மன் னராட்சியுடன் கூடிய நாடாளுமன்ற ஜனநாயகம் எனும் ''இரட்டைத் தூண் கள்'' கொள்கையுடன் இந்தியா மன்ன ராட்சியை முட்டுக் கொடுத்து ஆதரித்து நின்றது. உலகின் ஒரே இந்து நாட்டைக் காக்க வேண்டும் என்று இந்துவெறி பயங்கரவாத பரிவாரங்கள் மன்னராட் சியை ஆதரித்தன. அண்டை நாடான முதலாளித்துவ சீனா, மாவோயிஸ்டு களைப் பயங்கரவாதக் கும்பலாகக் காட்டி மன்னராட்சியுடன் கூடிக் குலாவியது. மாவோயிஸ்டுகளின் பத்தாண்டு கால மக்கள் யுத்தமும், மக்க ளின் பேரெழுச்சியும், கடந்த ஜூன் 16-ஆம் நாளன்று நேபாளத்தின் ஏழு கட்சி கூட்டணிக்கும் மாவோயிஸ்டுக ளுக்கும் இடையில் கையெழுத்தாகி யுள்ள ஒப்பந்தமும் இந்தப் பிற்போக்கு வாதிகள் அனைவரது முகத்திலும் கரி யைப் பூசி, மாவோயிஸ்டுகளின் அரசி யல் வலிமையை மீண்டும் உலகிற்கு நிரூபித்துக் காட்டியுள்ளது

இதுமட்டுமல்ல; கொடுங்கோலன் ஞானேந்திராவை எதிர்த்து நின்று முறி யடிக்கும் வலிமையும் நேபாள நாடா ளுமன்றக் கட்சிகளிடம் இல்லை. கடந்த ஆண்டின் இறுதியில் ஏழு கட்சிகள் கூட் டணி அமைத்து மன்னராட்சிக்கு எதிரா கப் போராடிய போதிலும், அவர்களால் போராட்டத்தில் முன்னேற முடிய வில்லை. கடந்த நவம்பர் மாதத்தில் மாவோயிஸ்டுகளுடன் இந்தக் கட்சி கள் உடன்படிக்கை செய்து கொண்ட பின்னரே, மன்னராட்சிக்கு எதிராகத் துணிவாகப் போராட முடிந்தது; மாவோயிஸ்டுகளுடன் இணைந்து மக் கள் பேரெழுச்சியில் மன்னனைத் தனி மைப்படுத்தி முடமாக்க முடிந்தது.

கடந்த ஏப்ரலில் நடந்த மக்கள் பேரெழுச்சியைத் தொடர்ந்து ஞானேந் திரா கும்பல் பின்வாங்கிக் கொண்டு, முடக்கப்பட்ட பழைய நாடாளுமன் றத்தை உயிர்ப்பிப்பதாக அறிவித்தவு டன், அதை ஏற்குமாறு இந்தியா ஏழு கட்சி கூட்டணியை வற்புறுத்தியது. ஏழு கட்சி கூட்டணியினர் இதற்கு உடன்பட் டதும், அதையே இறுதித் தீர்வாக்கி மன் னராட்சிக்குக் கீழ்ப்பட்ட நாடாளுமன்ற ஜனநாயகத்தை நிறுவுவதற்கு இந்தியா

மேற்கொண்ட முயற்சிகளுக்கு பிரதமர் கொய்ராலா ஒத்தூதினார். இத்தகைய சதிகள் - சூழ்ச்சிகள் - துரோகங்களை அம்பலப்படுத்தி, மாவோயிஸ்டுகள் இலட்சக்கணக்கான மக்களைத் திரட்டி பேரணி - பொதுக்கூட்டம் வாயிலாக எச்சரித்த பின்னர், இந்த ஏழு கட்சி கூட்டணியினர் அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தலை நடத்த முன்வந்துள்ளனர். மாவோயிஸ்டுகள் தீர்மானகரமான அரசியல் சக்தியாக உயர்ந்துள்ளதையும், ''அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தலை நடத்து!'' என்ற மாவோயிஸ்டுகளின் முழக்கம், நேபாள மக்களின் முழக்கமாக மாறியுள்ளதையும் கண்டு பீதியடைந்துள்ள இந்திய மேலாதிக்க வாதிகள், இவற்றை வெளிப்படையாக எதிர்க்க முடியாமல் புதிய சூழ்ச்சிகளில் இறங்கியுள்ளனர். மாவோயிஸ்டுகளை 'ஜனநாயக' நீரோட்டத்தில் சங்கமிக்கச் செய்து, பின்னர் அவர்களை வளைத்துப்போட்டு ஓரங்கட்டி முடக்கிவிடலாம் என்று ஏகாதிபத்தியவாதிகளும் இந்திய மேலாதிக்கவாதிகளும் தப்புக் கணக்கு போட்டு காய்களை நகர்த்தி வருகின்றனர்.

### மாவோயிஸ்டுகளின் அரசியல் மேலாண்மை

என்னதான் சூழ்ச்சிகள் - சதிகளில் இறங்கினாலும், மாவோயிஸ்டுகள் முன்வைத்துப் போராடிவரும் அரசியல் திட்டத்துக்கு மாற்றாக வேறு எந்த திட்டத்தையும் முன்வைக்க முடியாமல் ஏகாதிபத்தியவாதிகளும் இந்திய மேலாதிக்கவாதிகளும் நேபாள ஓட்டுக் கட்சிகளும் திணறுகின்றன. மாவோயிஸ்டுகள் முன்வைத்துள்ள அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல், புதிய அரசியலமைப்புச் சட்டம், ஜனநாயகக் குடியரசு முதலானவற்றுக்குக் குறைவான எந்தவொரு அரசியல் திட்டத்தையும் நேபாள மக்கள் ஏற்கத் தயாராகவும் இல்லை. அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தலை தாமதப்படுத்தி நீர்த்துப் போக வைக்கும் முயற்சிகள் அனைத்தும் அம்பலப்பட்டு பெருந்தோல்வியில் போய் முடிந்துள்ளன. மாவோயிஸ்டுகள் முன்வைத்துள்ள திட்டப்படியே இன்று நேபாளத்தின் அரசியல் செல்கிறது. இவையனைத்தும் மாவோயிஸ்டுகளின் புரட்சிகர அரசியல் தலைமையையும் வலிமையையும் மீண்டும் மீண்டும் நிரூபித்துக் காட்டுகின்றன.

நேபாளத்தில் நடந்து வரும் அரசியல் மாற்றங்களையும் புரட்சியின் நெளிவு சுழிவான போக்குகளையும் புரிந்து கொள்ள முடியாத சில திண்ணைப் பேச்சு புரட்சியாளர்கள், 'மாவோயிஸ்டுகள் நாடாளுமன்றப் பாதைக்குப் போய் விட்டார்கள்; முதலாளித்துவ கட்சிகளுடன் கூட்டணி சேர்ந்துள்ளார்கள்; புரட்சிக்குத் துரோகமிழைத்து விட்டார்கள்; ஆயுதங்களைக் கையளித்துவிட்டுச் செம்படையைக் கலைக்கப் போகிறார்களாம்' என்றெல்லாம் வதந்திகளையும் ஊகங்களையும் கொண்ட கிசுகிசுக்களைப் பிரச்சாரம் செய்து வருகின்றனர். ஆனால், நேபாளத்தில் நடந்து வரும் மாற்றங்களை பல்வேறு நாடுகளின் புரட்சிகர வரலாற்று அனுபவங்களிலிருந்து பார்க்கும் எவரும், மாவோயிஸ்டுகளின் அரசியல் முன்முயற்சியையும் பருண்மையான நிலைமைக்கேற்ற அவர்களின் வழிமுறைகளையும் புரிந்து கொள்ள முடியும்.

### அரசியல் பலம்தான் ஆயுதபலத்தைத் தரும்! - சீனப் புரட்சியின் படிப்பினை

இரண்டாம் உலகப் போரின் இறுதியில், சீனாவை ஆக்கிரமித்திருந்த ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகள் 1945-இல் சரணடைந்து வெளியேறிய போது, ''இனி சீனாவை ஆள்வது யார்?'' என்ற மையமான கேள்வி எழுந்தது. செம்படையைக் கட்டியமைத்து விடுதலைப் பிரதேசங்களை நிறுவி மக்கள் பேராதரவுடன் புதிய ஜனநாயகப் புரட்சிப் போரில் முன்னேறிக் கொண்டிருந்த சீன கம்யூனிஸ்ட் கட்சியா, அல்லது கோமிண்டாங் பிற்போக்காளர்களா என்பதே நாட்டின் மையமான கேள்வியாக இருந்தது. போரினால் பெரும் துயரங்களை அனுபவித்த மக்கள் சமாதானம், ஜனநாயகம், சுதந்திரம் மற்றும் சமுதாய விடுதலைக்கான தமது விருப்பத்தை எதிரொலித்த நிலையில், சீன கம்யூனிஸ்ட் கட்சி போர் நிறுத்தத்தை அறிவித்து, சமாதானம், ஜனநாயகம், நாட்டை மீண்டும் புனரமைப்பது என்ற கொள்கையுடன் தனது தேசியத் திட்டத்தை அறிவித்தது. இத்திட்டத்தைச் செயல்படுத்த நாட்டின் மீதும் மக்களின் மீதும் அக்கறை கொண்ட அனைவரையும் அறைகூவியழைத்துப் பிரச்சாரம் - கிளர்ச்சிகளை மேற்கொண்டது. இச்சரியான திட்டத்தை ஆதரித்து நாடெங்கும் மக்கள் போராட்டங்கள் பெருகத் தொடங்கியதும், கோமிண்டாங் அரசு சீனக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் சமாதானப் பேச்சு வார்த்தைக்கு முன்வந்து, அதன் தேசியத் திட்டத்தை ஏற்பதாக அறிவித்தது.

பேச்சு வார்த்தைகளின்போது, சமாதான ஒப்பந்தத்தை நேர்மையாகச் செயல்படுத்தவும், நாட்டைப் புனரமைக்க எல்லையற்ற அர்ப்பணிப்பை வழங்கவும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி முன்வந்தது. கோமிண்டாங் அரசு நீக்கப்பட்டு, ஒரு ஜனநாயகக் கூட்டு அரசின் கீழ் கோமிண்டாங் படைகளையும் செம்படையையும் மறுஒழுங்கமைப்பு செய்யவும் முன்வந்தது. சமாதானம், ஜனநாயகம், சுதந்திரம், தேசிய ஜனநாயக சட்டப்பேரவை, நகல் அரசியல் சட்டம் ஆகியவற்றை நிறுவுவதற்கான ஒப்பந்தங்களில் கோமிண்டாங்கும் சீன கம்யூனிஸ்ட் கட்சியும் கையெழுத்திட்டன. 1946 ஜனவரி 10-ஆம் நாளில் நிறைவேற்றப்பட்ட இந்த ஒப்பந்தம் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் முன்முயற்சியையும் அரசியல் வலிமையையும் நிரூபித்துக் காட்டியது.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் நேர்மையாகவும் முழுமையான அர்ப்பணிப்புடனும் நடந்து கொண்டதையும், செம்படை வீரர்கள் மராமத்துப் பணிகளிலும் விவசாய உற்பத்தியிலும் ஈடுபட்டதையும் உலகமே வியந்து பார்த்தது. ஐ.நா. மன்றத்தின் புனர்வாழ்வு நிர்வாகத்தின் மூலம் சீனாவுக்கு அனுப்பப்பட்ட டிராக்டர்களை இயக்கப் பயிற்சியளிக்கும் குழுவின் ஊழியராக வந்த வில்லியம் ஹிண்டன் என்ற அமெரிக்கர், கோமிண்டாங் அரசின் துரோகத்தையும் ஊழல் மோசடிகளையும் கண்டு வெறுப்புற்று, கம்யூனிஸ்டுகளின் செல்வாக்குள்ள ஹூபெய் மாகாணத்துக்குச் சென்று பணியாற்றினார். எதையும் நடைமுறை கொண்டு உரசிப் பார்த்த அவர், கம்யூனிஸ்டுகளின் நேர்மையை உளமார வாழ்த்தினார்.

அதே நேரத்தில் கோமிண்டாங் பிற்போக்கு அரசோ ஒப்பந்தத்

**இந்திய போலி கம்யூனிஸ்டுகள் அறுபதாண்டு காலமாக நாடாளுமன்ற செக்குமாட்டுப் பாதையில் சாதிக்க முடியாத மாபெரும் சமூக விடுதலையை, நேபாள மாவோயிஸ்டுகளின் பத்தாண்டு கால ஆயுதப் போராட்டம் சாதித்துக் காட்டி, ஒடுக்கப்பட்ட மக்களை தலைநிமிரச் செய்துள்ளது.**

www.padippakam.com

தைச் சீர்குலைப்பதிலும் கம்யூனிஸ்டுகளுக்கு எதிரான உள்நாட்டுப் போரைத் தொடுப்பதிலும் இறங்கியது. அமெரிக்காவின் கைப்பாவையாகிவிட்ட கோமிண்டாங் பிற்போக்கு அரசின் அதிபர் சியாங்கை ஷேக், சதிகள் - சூழ்ச்சிகள் - துரோகங்களில் இறங்கி நாட்டு மக்களிடம் அம்பலப்பட்டுத் தனிமைப்பட்டுப் போனான். சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் சமாதானம், ஜனநாயகம், கூட்டு அரசாங்கத்திற்கான முயற்சிகளை அதன் பயம், பலவீனம், கையாலாகாத்தனத்தின் அறிகுறிகளாகக் கருதிக் கொண்டான். ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்துவிட்டு, அமெரிக்காவின் துணையுடன் கம்யூனிஸ்டுகளுக்கு எதிரான உள்நாட்டுப் போரைக் கட்டவிழ்த்து விட்டான். ஆனால், கோமிண்டாங் பிற்போக்கு ஆட்சியாளர்களின் எத்தணிப்புகள் பெருந்தோல்வியில் போய் முடிந்தன. சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஆதரவாக முன்பைவிட பெருமளவில் மக்கள் திரண்டார்கள். செம்படையில் சேர மேலும் பல்லாயிரக்கணக்கில் முன்வந்தனர். சிவப்பு விடுதலைப் பிரதேசங்கள் மேலும் விரிவடைந்தன. கோமிண்டாங் பிற்போக்கு - பாசிசக் கும்பலுக்கு எதிராக, புரட்சிகர வர்க்கங்கள் - ஜனநாயக சக்திகளுடன் ஐக்கிய முன்னணியைக் கட்டியமைத்து, உக்கிரமான உள்நாட்டுப் போரில் வென்று, சீன கம்யூனிஸ்ட் கட்சி சீன மக்கள் ஜனநாயகக் குடியரசை நிறுவியது.

சீன கம்யூனிஸ்ட் கட்சி வெறும் ஆயுத பலத்தை மட்டுமே நம்பியிருந்ததில்லை. அரசியல் முன்முயற்சியை என்றுமே கைவிட்டதுமில்லை. இத்தகைய அரசியல் முன்முயற்சியும் அரசியல் போராட்டங்களும் அரசியல் வலிமையும்தான் மக்களை எழுச்சி கொள்ளச் செய்து, அமைப்பு பலத்தையும் ஆயுத பலத்தையும் தரும் என்பதில் அது தெளிவாகவே இருந்தது. பல்வேறு வரலாற்றுக் கட்டங்களிலும் முன்முயற்சியோடு தனது புரட்சிகர அரசியலை முன்வைத்து, போராட்டங்களின் மூலம் மக்களை அரசியல்படுத்துவதில் அது முன்னணிப் படையாக விளங்கியதை சீனப் புரட்சியின் வரலாறு நமக்கு உணர்த்துகிறது.

### நெளிவு சுழிவான பாதையும் போராட்ட முறையும்

இதை வெறும் வரலாற்று அனுபவமாகக் குறுக்கி சுருக்கிப் பார்க்கக் கூடாது. தற்காலிக புரட்சி அரசாங்கம் எனும் அமைப்பு முறையையும், மேலிருந்து செயலாற்றுவது என்ற போராட்ட முறையையும் பருண்மையான நிலைமைகளுக்கு ஏற்ப, தேவையான நிபந்தனைகளுடன் செயல்படுத்த வேண்டும் என்று மார்க்சிய - லெனினியம் போதிக்கிறது. அதாவது, புரட்சியின் வளர்ச்சிப் போக்கில் புதிய ஜனநாயகப் பொதுத் திட்டத்தைவிடக் குறைவானதொரு குறித்த திட்டத்தை (Specific Program) நிறைவேற்றுவதற்காக, நிறுவப்படும் தற்காலிகமானதொரு அரசாங்கத்தில் பங்கேற்று, அதிலிருந்து செயல்படுவது - போராடுவதன் மூலம் போர்த்தந்திர (மூலஉத்தி) வெற்றிக்கான தயாரிப்பில் ஈடுபடுவதாகும். கீழிருந்து மட்டும் போராடி, வெற்றியைச் சாதிக்க வேண்டும் என்று எண்ணுவது புரட்சியின் நெளிவுசுழிவுகளையும் திருப்பங்களையும் புரிந்து கொள்ளாமல், ஒரே நேர்கோட்டுப் பாதையில் முன்செல்ல முனையும் இயக்கமறுப்பில் கண்ணோட்டமாகும்.

மேலிருந்து செயல்புரியும் போராட்ட வடிவமும் தற்காலிக புரட்சி அரசாங்கம் எனும் அமைப்பு வடிவமும் ரஷ்ய புரட்சியின் 1905-06 கால கட்டத்திலும், சீனப் புரட்சியின் 1924-27 மற்றும் 1945-47 காலகட்டங்களிலும் கம்யூனிசப் புரட்சியாளர்களால் முன்வைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இது எவ்வாறு சரியானது - அவசியமானது என்பதை ''ஜனநாயகப் புரட்சியில் சமூக ஜனநாயகத்தின் இரு போர்த்தந்திரங்கள்'' என்ற நூலில் லெனினும், ''கூட்டரசாங்கம் பற்றி'' என்ற நூலில் மாவோவும் விளக்கிப் பருண்மையாகச் செயல்படுத்தியுள்ளனர். இந்த அடிப்படையிலேதான் நேபாள மாவோயிசப் புரட்சியாளர்களும் தமது நாட்டுப் புதிய ஜனநாயகப் புரட்சியின் பருண்மையான நிலைமைக்கேற்ப, நிலப்பிரபுத்துவ மன்னராட்சியையும் அதன் கொலு பொம்மையான போலி ஜனநாயக நாடாளுமன்ற முறையையும் ஒழிப்பது; அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல் நடத்துவது; ஏகாதிபத்திய எதிர்ப்பும் நிலப்பிரபுத்துவ எதிர்ப்பும் கொண்ட ஜனநாயகக் குடியரசை நிறுவுவது, புதிய அரசமைப்பின் கீழ் நாடாளுமன்றத்தில் பங்கேற்று மேலிருந்து செயல்படுவது, புதிய ஜனநாயகப் புரட்சியின் இறுதி வெற்றிக்கான தயாரிப்பிலும் போராட்டத்திலும் ஈடுபடுவது என்ற குறித்த திட்டத்துடன் செயல்பட்டு வருகின்றனர்.

''நேபாள மக்களின் தற்போதைய அரசியல் புரட்சியில் எங்களது பங்கு மிகப் பெரியது; எங்களது அர்ப்பணிப்பு எல்லையற்றது. இதை நாட்டு மக்கள் நன்கறிவர். ஏழு கட்சி கூட்டணியின் தலைவர்கள் புதிய அரசியலைமைப்பை நிறுவுவதில் தவறினால், மக்கள் அவர்களது பலவீனங்களை மதிப்பிட்டு, அவர்களை உரிய இடத்தில் வைப்பார்கள். எங்களைக் கலந்தாலோசிக்காமல் தன்னிச்சையாக அவர்கள் முடிவெடுத்துச் செயல்பட்டால், உடன்பாடு முறிந்து, நிலைமைகள் பின்னர் தீராத சிக்கலுக்குள் சென்று விடும். அவர்கள் மட்டுமின்றி, நாடும் மக்களும் அதிலிருந்து மீள்வது கடினமாகி விடும். அத்தகையதொரு நிலைமை ஏற்பட்டால், நாங்கள் முன்கை எடுத்து, மக்களுக்குத் தலைமை தாங்கி, மக்கள் தீர்ப்பைச் செயல்படுத்துவோம்!'' என்று தமது கட்சியின் நிலையைத் தெளிவாக்



''மக்கள் படை ஒன்று இல்லாவிட்டால், மக்களுக்கு ஒன்றுமே இல்லை''
— பயிற்சியில் ஈடுபடும் மாவோயிஸ்டுகளின் செம்படை.

www.padippakam.com

கியுள்ளார், மாவோயிஸ்டுக ளின் பேச்சு வார்த்தைக் குழு தலைவரான தோழர் கிருஷ்ணப கதூர் மெஹரா.

மார்க்சிய - லெனினிய போர்த்தந்திரங்களின் விதிக ளையும் வழிகாட்டும் நெறிமு றைகளையும் பற்றிய தெளிவில் லாமல், பருண்மையான நிலை மைக்கேற்ப அரசியல் செயல் திட்டத்தை வகுத்துச் செயல் படுத்த முற்படாமல், வெறும் ஆயுத சாகசங்களைக் கண்டு பர வசமடையும் திண்ணைப் பேச்சு புரட்சியாளர்களால் நேபாள நிலைமைகளைப் புரிந்து கொள்ளவோ, அதிலிருந்து படிப்பனைகளைப் பெற்று இந்தி யப் புரட்சியைச் சாதிக்கவோ ஒருக்கா லும் முடியாது. இவர்கள் ஒருபுறமி ருக்க, நாடாளுமன்ற செக்குமாட்டுப் பாதையில் செல்லும் போலி கம்யூனிசப் புரட்டல்வாதிகளும் இனவாத பித்த லாட்டக்காரர்களும் நேபாளப் புரட்சி யின் புதிய நிலைமைகளைப் புரிந்து கொள்ளாமல், "ஆகா, மாவோயிஸ்டு கள் நாடாளுமன்ற ஜனநாயகத்துக்குத் திரும்பிவிட்டார்கள்!" என்று குதியாட் டம் போடுகிறார்கள். மாவோயிஸ்டுக ளின் பத்தாண்டு கால ஆயுதப் போராட் டம் சாதித்துள்ள சமூக விடுதலையைக் கொச்சைப்படுத்தி வருகிறார்கள்.

**புரட்சியாளர்களைக் கொச்சைப்படுத்தும் வாலறுந்த நரிகள்!**

மாவோயிஸ்டுகள் நாடாளுமன்றப் பாதைக்கு வந்துவிட்டதாகவும், அதே பாதையை இந்திய மாவோயிஸ்டுக ளும் பின்பற்ற வேண்டும் என்றும் உப தேசிக்கிறார், வலது கம்யூனிஸ்டுக் கட்சி பொதுச் செயலாளரான பரதன். துப்பாக்கிக் குழாயிலிருந்து அதிகாரம் பிறக்கிறது என்ற மாவோவின் கூற்று பொய்த்துப் போய்விட்டது என்று மன நோயாளிபோல் அவர் உளறுகிறார். "இந்திய கம்யூனிஸ்டுகள் நாடாளு மன்ற ஜனநாயகத்தில் இணைந்து செயல்படுவதிலும் தேர்தல்கள் மூலம் அதிகாரத்துக்கு வருவதிலும் நீண்ட அனுபவம் பெற்றுள்ளார்கள். நேபாள மாவோயிஸ்டுகள் எங்கள் அனுபவத்தி லிருந்து கற்றுக் கொள்ளவும் அமைதி வழிப் பாதையில் செல்லவும் விரும்பு கிறார்கள்" என்று புளுகுவதோடு, மாவோயிஸ்டுகளைக் கொச்சைப்படுத் துகிறார் சி.பி.எம். கட்சியின் தலைவர்க ளில் ஒருவரான எச்சூரி. இதோடு, மாவோயிஸ்டுகள் ஆயுதங்களைக்



நேபாள மாவோயிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் தோழர் பிரசந்தா.

கையளித்துவிட வேண்டும் என்றும் வழிகாட்டுகிறார்.

ஆனால், கடந்த பிப்ரவரி மாதத்தில் "இந்து" நாளேட்டிற்கு அளித்த பேட்டி யில், நேபாள மாவோயிஸ்டு கம்யூ னிஸ்டு கட்சித் தலைவரான தோழர் பிர சந்தா இவற்றுக்கெல்லாம் தெளிவா கவே பதிலளித்துள்ளார். "நாங்கள் பல கட்சி ஜனநாயகம் பற்றிப் பேசுவது, குறிப்பான அரசியலமைப்புச் சட்டத் திற்குள்ளேதான். அதாவது, ஏகாதிபத் திய எதிர்ப்பு - நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு அரசியலமைப்புச் சட்டத்திற்குள்ளே தான். எனவேதான், ஆயுதப் போராட்ட மும் தேவை; முடியாட்சிக்கு எதிராக பிற அரசியல் கட்சிகளுடன் செயலொற் றுமையும் தேவை. ஏகாதிபத்தியத்துக் கும் நிலப்பிரபுத்துவத்துக்கும் எதிரான சமூகப் பொருளாதார மாற்றத்துக்கா கவே நாங்கள் போராடுகிறோம். அந் தப் போராட்டத்தின் பொருளில்தான் நாங்கள் பல கட்சி ஜனநாயகம் பற்றிப் பேசுகிறோம்" என்று கூறுகிறார் தோழர் பிரசந்தா.

தற்போதைய நாடாளுமன்றத்தைக் கலைத்து விட்டு, இடைக்கால அரசை நிறுவுதல்; புதிய அரசியலமைப்புப் பேரவைக்கான தேர்தலை ஐ.நா. மன் றம் அல்லது அனைத்துலக அமைதிக் குழுவின் மேற்பார்வையில் நடத்துதல்; ஏகாதிபத்திய எதிர்ப்பு - நிலப்பிரபுத் துவ எதிர்ப்பு ஜனநாயகக் குடியரசை நிறுவுதல், அப்புதிய குடியரசின் பல கட்சி நாடாளுமன்ற ஜனநாயகத்தில் பங்கேற்றல் பற்றி அந்தப் பேட்டியில் விரிவாகவே விளக்கமளித்துள்ளார் தோழர் பிரசந்தா. ஆனால் போலி கம் யூனிஸ்டுகளோ, எத்தகைய அரசமைப் பின் கீழுள்ள பல கட்சி நாடாளுமன்ற ஜனநாயகம் என்பதை மூடிமறைத்து விட்டு, நேபாள மாவோயிஸ்டு புரட்சியாளர்களும் தங்களைப் போலவே போலி ஜனநாயக நாடாளுமன்ற செக்குமாட்டுப் பாதைக்குத் திரும்பி விட்டதா கக் காட்டி தமது அணிகளை ஏய்த்து வருகிறார்கள்.

இதேபோல, நேபாள மாவோ யிஸ்டுகள் தமது செம்படை யைக் கலைத்துவிட்டு, ஆயுதங்க ளைக் கையளித்துவிட்டு, அமைதி வழிக்குத் திரும்ப தீர் மானித்துள்ளார்கள் என்று இப் போலி கம்யூனிஸ்டுகள் இன்னு மொரு அண்டப் புளுகை அவிழ்த்து விடுகிறார்கள். ஆனால், தோழர் பிரசந்தா தனது பேட்டியில், "எம்மிடம் ஒரு படை இருப்பதால் இன்ன மும் எம்மைப் பற்றி சந்தேகப்படுகிறார் கள். புதிய அரசியலமைப்பு பேரவை நிறுவப்பட்ட பிறகு, நாங்கள் ஆயுதங் களை கைவிடுவோமா என்று கேட்கி றார்கள். நாங்கள் எங்கள் படையைத் திருத்தியமைக்கத் தயாராக உள்ளோம். புதியதொரு நேபாளப் படையைக் கட் டியமைக்கவும் தயாராகவும் உள் ளோம்" என்று நேபாள ஜனநாயகக் குடியரசு நிறுவப்பட்ட பிறகு செம்படை எவ்வாறு மாற்றியமைக்கப்படும் என்ப தைத் தெளிவாகவே விளக்குகிறார். அவர் ஆயுதப் போராட்டத்தைக் கைவி டுவதாகவோ, செம்படையைக் கலைத்து விடுவதாகவோ எங்குமே கூற வில்லை. "இடைக்கால அரசு நிறுவப்ப டும் வரை ஆயுதங்களைக் கையளிப்பது பற்றிய பேச்சுக்கே இடமில்லை" என்று கடந்த ஜூன் மாதத்தில் நடந்த பேச்சு வார்த்தையின் போதுகூட மாவோயிஸ் டுகள் உறுதியாக அறிவித்துள்ளனர். இதனாலேயே தற்போதைய 8 அம்ச ஒப்பந்தத்திலும் ஆயுதங்களைக் கைய ளிப்பது பற்றி ஒரு வார்த்தை கூட இல்லை. வாலறுந்த நரி மற்ற நரிகளைப் பார்த்து நீங்களும் வாலை அறுத்துக் கொண்டால் அழகாக இருக்கும் என்று கூறிய கதையாக, இப்போலி கம்யூனி சப் புளுகர்கள். நேபாள புரட்சியாளர்க ளும் தங்களைப் போல மாறிவிட்டதாக கயிறு திரிக்கிறார்கள்.

மாவோயிஸ்டுகளின் செல்வாக்கு அவர்களிடமுள்ள துப்பாக்கியால் கிடைப்பதைப் போலச் சித்தரிப்பது இப் போலி கம்யூனிஸ்டுகள் செய்யும் இன் னுமொரு அவதூறு. மாவோயிஸ்டு களை வன்முறை நோக்கம் கொண்ட பயங்கரவாதக் கும்பலாகக் காட்டி, அந் தப் பாதை தோற்றுப் போனதால் அமைதி வழிக்குத் திரும்பிவிட்டதைப்


படிப்பகம்

www.padippakam.com

போன்ற தோற்றத்தை இப்புரட்டல்வா திகள் உருவாக்க முயற்சிக்கிறார்கள்.

ஆனால், மாவோயிஸ்டுகள் கடந்த பத்தாண்டு காலமாக வெறுமனே ஆயுதப் போராட்டம் மட்டும் நடத்திக் கொண்டிருக்கவில்லை. நிலச்சீர்திருத்தம், சாதி ஒழிப்பு, பெண்ணுரிமை, கல்வி, மருத்துவ - சுகாதாரம் முதலான பல்வேறு புரட்சிகர சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டதோடு, நேபாளத்தின் மேற்கு மாவட்டப் பகுதியில் மக்களின் கூட்டு முயற்சியால் போக்குவரத்துக்கான நெடுஞ்சாலையையும் நிர்மாணித்துள்ளனர். போலி கம்யூனிஸ்டுகள் அறுபதாண்டு காலமாக நாடாளுமன்ற செக்குமாட்டுப் பாதையில் சாதிக்க முடியாத மாபெரும் சமூக விடுதலையை மாவோயிஸ்டுகளின் பத்தாண்டு கால ஆயுதப் போராட்டம் சாதித்துக் காட்டி, ஒடுக்கப்பட்ட மக்களை தலைநிமிரச் செய்துள்ளது. இப்போலி கம்யூனிஸ்டுகள் பெரிதும் அஞ்சுவது, மாவோயிஸ்டுகளின் ஆயுதப் போராட்ட பாதையைக் கண்டல்ல. மாவோயிஸ்டுகளின் போராட்ட வெற்றியானது இப்புரட்டல்வாதிகளை மறுதலித்து, இந்திய உழைக்கும் மக்களை ஒரு மாபெரும் போராட்ட சக்தியாக மாற்றிவிடும் என்பதைக் கண்டே அவர்கள் அஞ்சுகிறார்கள். அதனாலேயே பொய்கள், அவதூறுகளை வாரியிறைத்து மாவோயிஸ்டுகளின் போராட்டத்தை இருட்டடிப்பு செய்து வருகிறார்கள்.

**பருண்மையான நிலைமைக்கேற்ப அரசியல்செயல்திட்டத்தை வகுத்துச் செயல்படுத்த முற்படாமல், வெறும் ஆயுத சாகசங்களைக் கண்டு பரவசமடையும் திண்ணைப் பேச்சு புரட்சியாளர்களால் நேபாள நிலைமைகளைப் புரிந்து கொள்ளவோ, அதிலிருந்து படிப்பனைகளைப் பெற்று இந்தியப் புரட்சியைச் சாதிக்கவோ ஒருக்காலும் முடியாது.**

### இனவாத கோயபல்சுகளின் வக்கிர வியாக்கியானம்

வாலறுந்த போலி கம்யூனிஸ்டு நரிகளைப் போலவே, இனவாத மணியரசன் கும்பலும் 'பார்த்தீர்களா, எங்களைப் போலவே நேபாள மாவோயிஸ்டுகளும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரக் கோட்பாட்டைக் கைவிட்டு விட்டார்கள்' என்று குதியாட்டம் போடுகிறது. ''மன்னராட்சி முறையை ஒழித்த பிறகு நிறுவப்படும் நேபாள ஜனநாயகக் குடியரசின் பல கட்சி நாடாளுமன்ற ஜனநாயகத்தில் நாங்கள் பங்கேற்போம்'' என்று தமது கட்சியின் முடிவை நேபாள மாவோயிஸ்டு தலைவர் தோழர் பிரசந்தா விளக்குகிறார். உடனே மணியரசன் கும்பல் துள்ளிக் குதித்து, 'பார்த்தீர்களா, பல கட்சி ஜனநாயகம் என்கிறார் பிரசந்தா; அப்படியானால், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரக் கோட்பாட்டை கைவிட்டார்கள் என்று இதிலிருந்து புரிந்து கொள்ளலாம்' என்று புது விளக்கவுரை எழுதுகிறது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைக் கைவிட்டு விட்டதாக 'இந்து' நாளேட்டிற்கு அளித்த பேட்டியில் தோழர் பிரசந்தா எங்குமே குறிப்பிடவில்லை. அப்படிச் சொல்லாததற்கு, தானே வலிந்து இட்டுக்கட்டி புது வியாக்கியானம் தந்து அவதூறு செய்வதுதான் மணியரசன் கும்பலின் கோயபல்சு வழிமுறை.

ஏகாதிபத்திய எதிர்ப்பு - நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு தன்மை கொண்ட புதிய நேபாள ஜனநாயக குடியரசு பற்றியும், அப்புதிய அரசமைப்பின் பல கட்சி நாடாளுமன்றத்தில் பங்கேற்பது பற்றியும் தோழர் பிரசந்தா விளக்குகிறார். ஆனால், மணியரசன் கும்பலுக்கு ஏகாதிபத்திய எதிர்ப்பு - நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு ஜனநாயகப் புரட்சி என்பது பாட்டாளி வர்க்கத்தையும் இதர புரட்சிகர - ஜனநாயக வர்க்கங்களையும் கொண்ட ஒரு ஐக்கிய முன்னணி என்று கூடத் தெரியவில்லை. சீனத்தில் ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு, ஏகாதிபத்திய எதிர்ப்பு - நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு புரட்சிகர வர்க்கங்களின் சர்வாதிகாரம்தான் நீடித்ததே தவிர, முதலாளித்துவ சர்வாதிகாரமல்ல. இப்புரட்சிகர வர்க்கங்களின் சர்வாதிகாரம், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் ஓர் அங்கமாகவே நீடித்தது. அங்கு பல கட்சி நாடாளுமன்ற ஜனநாயகம் நிலவிய போதிலும், அது முதலாளித்துவ வகைப்பட்ட நாடாளுமன்ற போலி ஜனநாயகமல்ல; அதிலிருந்து முற்றிலும் வேறுபட்ட, அதற்கு முற்றிலும் எதிரான, சோசலிசத்தை நிறுவுவதை நோக்கமாகக் கொண்ட, பாட்டாளி வர்க்கத் தலைமையிலான மக்கள் ஜனநாயக சர்வாதிகார அரசுதான் அங்கு நிலவியது. இத்தகைய பாட்டாளி வர்க்கத் தலைமையிலான சீன மக்கள் ஜனநாயகக் குடியரசில், தேசிய மக்கள் பேரவை எனும் பல கட்சி நாடாளுமன்றத்தில் சீன தேசிய முதலாளித்துவ கட்சிகளும் பங்கேற்றன என்பது வரலாறு. இத்தகைய கண்ணோட்டத்தில்தான் தோழர் பிரசந்தா, ஏகாதிபத்திய எதிர்ப்பு - நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு புரட்சிகர வர்க்கங்களின் - புதிய நேபாள குடியரசின் நாடாளுமன்ற ஜனநாயகம் பற்றிக் குறிப்பிடுகிறார். மணியரசன் கும்பல் கருதுவது போல, அவர் முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயகத்தைக் குறிப்பிடவில்லை; பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைக் கைவிட்டு விட்டதாக அறிவிக்கவுமில்லை.

நேபாள கம்யூனிசப் புரட்சியாளர்கள், மணியரசன் கும்பலைப் பார்த்து, ''15 ஆண்டுகளுக்கு முன்பே இப்படி தொலைநோக்குப் பார்வையுடன் பாட்டாளி வர்க்க சர்வாதிகார கோட்பாட்டைக் கைவிட்டுள்ளீர்களே! நீங்கள் தான் எங்களுக்கு வழிகாட்டி'' என்று கூறியதைப் போல கற்பனை செய்து கொண்டு, ''மெய் நடப்பில் ஆயுதப் புரட்சி நடத்திக் கொண்டிருக்கும் நேபாள மாவோவியக் கட்சி, பல கட்சி ஜனநாயகத்தை ஏற்பதாக முடிவு செய்து, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைக் கைவிட்டிருப்பது த.தே.பொ.க. 1990-களில் எடுத்த நிலைப்பாடு எவ்வளவு சரியானது என்பதற்கு ஓர் உரைகல்லாகும்'' என்று மணியரசன் கும்பல் பிதற்றுகிறது. ''அன்றே நக்கீரன் சொன்னது!'', ''அன்றே ஜூ.வி. சொன்னது!'' என்றெல்லாம் முதலாளித்துவ கிசுகிசு பத்திரிகைகள் - அற்பத்தனமாக பெருமைப்பட்டுக் கொண்டு சுயதம்பட்டம் அடித்துக் கொள்வதற்கும், மணியரசன் கும்பலின் பித்தலாட்ட சுயவிளம்பரத்துக்கும் என்ன வேறுபாடு இருக்கிறது?

நேபாளப் புரட்சியையும் புரட்சியாளர்களையும் கொச்சைப்படுத்தும் இந்தக் கிணற்றுத் தவளைகளையும் வாலறுந்த நரிகளையும் ஏளனப் புன்னகையுடன் பார்க்கும் நேபாள மக்கள், புதிய வரலாற்றைப் படைக்க மாவோயிஸ்டுகளின் தலைமையில் அணிவகுத்து முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். வெற்றியை நோக்கிய நேபாள மக்களின் புரட்சிப் போரை உற்சாகத்துடன் ஆதரித்து நம் நாட்டிலும் அத்தகையதொரு புரட்சியைச் சாதிக்கப் போராடுவதும், போலி கம்யூனிச பித்தலாட்டப் பேர்வழிகளை அம்பலப்படுத்தி முறியடிப்பதும்தான், இமயத்தின் உச்சியில் செங்கொடி உயர்வதற்கு நாம் செலுத்தும் உண்மையான பங்களிப்பாக இருக்க முடியும்.

● மனோகரன்


படிப்பகம்

www.padippakam.com

# திருச்சிற்றம்பல மேடையேற தமிழும் தீக்குளிக்க வேண்டுமோ?

தில்லைவாழ் அந்தணர்களால் எரித்துக் கொல்லப்பட்ட சிவபக்தன் நந்தன் வாழ்ந்த தமிழகத்திற்கும், தற்போதைய தமிழகத்துக்கும் எத்தனையோ வேறுபாடுகள் / மாற்றங்கள் இருந்தாலும், தில்லைவாழ் தீட்சிதர் பரம்பரை மட்டும் இந்த 21-ஆம் நூற்றாண்டிலும் மாறியதாகத் தெரியவில்லை. ஆறுமுகசாமி என்ற சிவனடியார், சிதம்பரம் நடராசர் கோவிலைத் தங்கள் பூணூலில் சுருட்டி வைத்திருக்கும் தீட்சிதர்களின் சாதிவெறியை எதிர்த்து, வழிபாட்டு உரிமைக்காக நடத்தி வரும் போராட்டம் இந்த உண்மையைத் தமிழகமெங்கும் அம்பலப்படுத்தி விட்டது.

ஆறுமுகசாமி, கஷ்டம் வந்தவுடன் இறைவனைத் தேடி ஓடும் சாதாரண பக்தரைப் போன்றவர் அல்லர். இல்லற வாழ்க்கையைத் துறந்து, துறவறம் பூண்டு, சைவத் திருமறையான தேவாரம் - திருவாசகப் பாடல்களைப் பாடுவதைக் கற்றுத் தேர்ந்து, சிதம்பரம்அருகேயுள்ள குமுடிமூலை என்ற சிற்றூரில் அமைந்திருக்கும் பசுபதி ஈஸ்வரன் கோவிலில் ஓதுவாராக இறைப்பணி ஆற்றி வருகிறார். இதற்காகத் தமிழக அரசின் நிதி உதவியையும் பெற்று வருகிறார்.

சிதம்பரம் - நடராசர் கோவில் கருவறை முன் உள்ள திருச்சிற்றம்பல மேடையில் ஏறி நின்று, தேவாரம் - திருவாசகம் பாடி நடராசரை வழிபட வேண்டும் என்பதனைத் தனது ஆன்மீக வாழ்க்கையின் இலட்சியமாக, குறிக்கோளாகக் கொண்டிருக்கிறார், ஆறுமுகசாமி. 73 வயதான, அந்திமக் காலத்தை நெருங்கிவிட்ட, அந்த முதிய சிவனடியாரின் விருப்பம் நிறைவேறத் தடைக்கல்லாக நிற்கிறார்கள், தீட்சிதர்கள்.

ஆறு ஆண்டுகளுக்கு முன்பு, 8.5.2000 அன்று ஆறுமுகசாமி திருச்சிற்றம்பல மேடையில் ஏறிப் பாட முயன்ற பொழுது, தீட்சிதர் கும்பல் கோவிலுக்குள்ளேயே, பக்தர்களின் கண் முன்னாலேயே ஆறுமுகசாமியைக் கொடூரமாகத் தாக்கி, கையை முறித்து, கோவிலுக்கு வெளியே வீசியெறிந்தது. ஆறுமுகசாமி தம்மைத் தாக்கிய ரவுடி தீட்சிதர்களை உடனடியாக அடையாளம் காட்டிப் புகார் கொடுத்த பின்னும் கூட, சிதம்பரம் நகர போலீசார் 55 நாட்கள் கழித்துதான் முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்தனர். அரசு தரப்பில் வேண்டுமென்றே இவ்வழக்கு விசாரணையை ஒழுங்காக நடத்தாததால், ஏழு ஆண்டுகள் வரை கடுங்காவல் தண்டனை பெற்றிருக்க வேண்டிய தீட்சிதர்கள், நீதிமன்றத்தால் நிரபராதிகளாக விடுதலை செய்யப்பட்டனர்.

கடலூர் மாவட்ட மனித உரிமை பாதுகாப்பு மையம், ஆறுமுகசாமி திருச்சிற்றம்பல மேடையில் ஏறிப் பாட முடியாமல் தடுக்கப்பட்டதை, மனித உரிமை மீறல் வழக்காக சென்னை - உயர்நீதி மன்றத்திற்கு எடுத்துச் சென்றது. ஆறுமுகசாமியும், விடுதலை செய்யப்பட்ட தீட்சிதர்களைத் தண்டிக்கக் கோரி சென்னை - உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தார். பார்ப்பன உயர் அதிகாரிகள் மத்தியில் தீட்சிதர்களுக்கு இருக்கும் செல்வாக்கு மற்றும் பண பலம் காரணமாக இவ்விரு வழக்குகளும் உயர்நீதி மன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டன. தற்பொழுது இவ்விரு வழக்குகளில் மனித உரிமை மீறல் வழக்கு மட்டும் உச்சநீதி மன்றத்தின் விசாரணையில் உள்ளது.

சிவனடியார் ஆறுமுகசாமி.



•••

சிவனடியார் ஆறுமுகசாமி, மிகவும் பிற்பட்ட சாதியைச் சேர்ந்தவர்; தமிழில் பாடி நடராசனை வழிபட விரும்புகிறார் என்ற காரணத்துக்காகவேதான், தீட்சிதர் கும்பல் அவரை திருச்சிற்றம்பல மேடையில் ஏறிப்பாட விடாமல் தடுத்து வருகிறது.

திருச்சிற்றம்பல மேடையில் ஏறிப் பாட தீட்சிதர்களுக்கு மட்டுமே உரிமையுண்டு; சமஸ்கிருத மொழியில் அமைந்த வேதங்களையும், மந்திரங்களையும் தான் அம்மேடையில் பாட முடியுமேயன்றி, பிற மொழி துதிப் பாடல்களைப் பாடி இறைவனை வழிபட அனுமதிக்க முடியாது எனப் பச்சையாக பார்ப்பன சாதிக் கொழுப்பைக் கக்கி வருகிறது, தீட்சிதர் கும்பல்.

இதனை மரபு, சம்பிரதாயம் என்ற பெயரில் நியாயப்படுத்தி, மயிலாடுதுறையில் உள்ள இந்து அறநிலையத் துறை துணை ஆணையர் மூலம், ஆறுமுகசாமியின் வழிபாட்டு உரிமைக்கு எதிரானத் தடையாணையையும் தீட்சிதர்கள் பெற்றுள்ளனர்.

ஆகம விதிகள், மரபு, சம்பிரதாயங்கள் என்ற பெயரில் புனிதப்படுத்தப்படும் இத்தீண்டாமையை ஒழித்துக் கட்ட வேண்டும் என்ற அடிப்படையில்தான் மனித உரிமை பாதுகாப்பு மையம் ஆறுமுகசாமிக்கு ஆதரவு கொடுத்து வருகிறது. இந்தப் பிரச்சினை நீதிமன்றத்தோடு முடங்கிப் போய்விடக் கூடாது என்பதற்காகவே, செப். 2004-இல் பல்வேறு ஜனநாயக அமைப்புகளின் ஆதரவோடு ஆறுமுகசாமிக்கு நீதி கேட்டு, மனித உரிமை பாதுகாப்பு மையம் சார்பாகப் போராட்டம் நடத்தப்பட்டது. மேலும், நடராசர் கோவிலில் நடைபெறும் ஒவ்வொரு திருவிழாவின் போதும், பொதுமக்கள் மத்தியில் இப்பிரச்சினையின் பின் மறைந்துள்ள


படிப்பகம்

www.padippakam.com

தீண்டாமையை விளக்கும் பிர சுரங்கள் விநியோகிக்கப்படு கின்றன. தீட்சிதர்களின் அச்சு றுத்தலையும் மீறி, ஆறுமுக சாமியே பிரசுரங்களைப் பொதுமக்களிடம் கொடுத்து, ஆதரவு தேடி வருகிறார்.

இந்நிலையில், தி.மு.க. அரசு பதவியேற்று, அனைத் துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற சட்டம் அறி விக்கப்பட்ட பின், ஆறுமுக சாமி, "15.7.06 முதல் 20.7.06 முடிய திருச்சிற்றம் பல மேடையில் ஏறி சிவபுரா ணம் பாடப் போவதாக" அறி வித்தார். இதற்கு ஆதரவு தெரி வித்த கடலூர் மாவட்ட மனித உரிமைப் பாதுகாப்பு மையம், இந்த அறிவிப்பின் பின் னுள்ள நியாயம் - உரிமை களை விளக்கி, 12, 13, 14.7.06 ஆகிய மூன்று நாட் களும் விடுதலைச் சிறுத்தை கள், திராவிடர் கழகம், சி.பி.ஐ., சி.பி.எம்., வி.வி.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய அமைப்புகளின் ஆதரவோடு, தெருமுனை பிரச்சாரக் கூட்டங்களை நடத்தி, பொதுமக்களின் ஆதரவைத் திரட்ட முனைந்தது.

ஆறுமுகசாமி திருச்சிற்றம்பல மேடையில் ஏறிப் பாடப் போவதாக அறிவித்தவுடனேயே, சிதம்பரம் உரி மையியல் நீதிமன்றத்தின் மூலம், ஆறு முகசாமி பாடுவதை 25.7.06 வரைத் தடை செய்யும் ஆணையைத் தீட்சிதர் கள் பெற்றுக் கொண்டனர். எனினும், இத்தடையுத்தரவை மீறுவது என்ற முடி வோடு, 15.7.06 அன்று சிவனடியார் ஆறுமுகசாமியை வாழ்த்தி வழிய னுப்பி வைக்கும் நிகழ்ச்சியை சிதம்ப ரம் - மேல வீதியில் மனித உரிமை பாது காப்பு மையம் ஒருங்கிணைத்து நடத்தி யது.

இப்போராட்டத்திற்குத் தலைமை யேற்ற மனித உரிமை பாதுகாப்பு மையத்தின் மாநில ஒருங்கிணைப் பாளர் வழக்கறிஞர் சி.ராஜு, வரவேற் புரை நிகழ்த்திய சிதம்பரம் வழக்குரை ஞர் கோபாலகிருஷ்ணன், மற்றும் வாழ்த்துரை வழங்கிய முன்னாள் (தமிழக) இந்து அறநிலையத் துறை அமைச்சர் திரு. வி.வி.சாமிநாதன்; பா.ம.க.வின் மாநிலத் துணைத் தலை வர் திரு. வி.எம். சவுந்திரபாண்டியன்; திராவிடர் கழகத்தின் மாநிலத் துணை பொதுச்செயலர் திரு. துரை சந்திரசேகர்; சி.பி.எம்.இன் மாவட்ட விவசாய அணித்தலைவர் தோழர் டி.ஆர். விசுவ நாதன்; சி.பி.ஐ.யின் சிதம்பரம் நகரச் செயலாளர் தோழர் நடராஜன் உள் ளிட்ட பலரும் தீட்சிதர்களின் சாதித் திமிரையும், அவர்களின் ஒழுக்கக் கேடுகளையும் அம்பலப்படுத்தி உரை யாற்றினர்.



**சிவனடியார் ஆறுமுகசாமி கோவிலுக்குள் சென்றுவிடாமல் தடுப்பதற்காக, நடராசர் ஆலய நுழைவாசலின் முன் காவல் காக்கும் போலீசார்: தீண்டாமைக்குக் காவல்.**

சிதம்பரம் உரிமையியல் நீதிமன் றம் ஆறுமுகசாமி திருச்சிற்றம்பல மேடையில் ஏறிப் பாடுவதற்குத்தான் தடை விதித்திருந்தது. ஆனால், சிதம்ப ரம் நகர போலீசோ, சட்டம் - ஒழுங் கைக் காட்டி, ஆறுமுகசாமியைக் கோவிலை நெருங்கக் கூட விடாமல் தடுத்து, அவரையும், அவருக்குத் துணையாகச் சென்றவர்களையும் - பெண்கள், குழந்தைகள் உள்ளிட்டு 80 பேரை நடுத்தெருவிலேயே கைது செய்து, தீட்சிதர்களுக்கு விசுவாசமாக நடந்து கொண்டது.

•••

"உரிய தகுதி இருந்தால் பார்ப்ப னர் அல்லாதவர் கூட அர்ச்சகர் ஆக லாம்; கருவறைக்குள் நுழைந்து, இறை வனுக்கு வழிபாடு நடத்தலாம்" எனக் கூறுகிறது தமிழக அரசின் சட்டம். இதற்கு ஆதரவாக உச்சநீதி மன்றத்தின் இரண்டு தீர்ப்புகளும் சுட்டிக் காட்டப் படுகின்றன. ஆனால், தீட்சிதர் கும் பலோ, துறவறம் பூண்டு வாழும் ஓது வார் ஆறுமுகசாமியை, கருவறைக்கு எதிரே இருக்கும் மேடையில் ஏறுவதற் குக் கூடத் தடை போடுகிறது.

"உச்சநீதி மன்ற நீதிபதி கள் மோகன் மற்றும் சி.என்.ரே ஆகிய இருவர் அடங்கிய பெஞ்ச், கர்ப்பகிர கங்களில் தமிழ் மந்திரத்தில் அர்ச்சனை செய்யலாம் என்று 2.4.1992-இல் தீர்ப்பளித்தி ருப்பதாகவும்; சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி ஏ.ஆர். லெட்சுமணன் தமிழ்நாட்டில் ஆலயங்களில் தமிழில் அர்ச் சனை செய்யலாம் என்று 17.6.1992-இல் தீர்ப்பளித்தி ருப்பதாகவும்" முன்னாள் இந்து அறநிலையத்துறை அமைச்சர் வி.வி.சுவாமி நாதன் குறிப்பிடுகிறார். ஆனால், கருவறைக்கு எதிரே யுள்ள திருச்சிற்றம்பலத்தில் சமஸ்கிருதம் அல்லாத பிற மொழிகளில் பாடி இறை வனை வழிபடக் கூடாது எனத் தமிழை தீண்டத்தகாத மொழியாக ஒதுக்கித் தள்ளுகி றார்கள் தீட்சிதர்கள்.

சட்டத்தின்படியும், நீதிமன்றத் தீர்ப் புகளின்படியும் பார்த்தால், ஆறுமுக சாமியைத் தடை செய்த தீட்சிதர்கள்; அவர்களுக்குத் துணை நின்ற நீதிபதி, போலீசு அதிகாரிகளைத் தான் கைது செய்திருக்க வேண்டும். ஆனால், நடந் திருப்பதோ நேர் எதிராக இருக்கிறது.

1987-ஆம் ஆண்டே, சிதம்பரம் நடராசர் கோவிலை இந்து அறநிலை யத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர புதிதாக விதிகள் உருவாக் கப்பட்ட போதிலும், கடந்த 19 ஆண்டு களாக இந்தக் கோயிலில் ஒரு நிர்வாக அதிகாரியைப் போட முடியாமல், தமி ழக அரசு கையைக் கட்டிக் கொண்டு நிற் கிறது.

இந்தக் கோயிலின் நிர்வாகத்தைத் தமிழக அரசு எடுத்துக் கொள்வதை எதிர்த்து தீட்சிதர்களால் தொடுக்கப் பட்ட வழக்கில், "இந்தக் கோயிலுக்குச் சொந்தமாக 1000 ஏக்கர் நிலமுள்ளது; உண்டியல் வைக்காமல், பக்தர்களிடமி ருந்து தீட்சிதர்களே நேரடியாகப் பணம் பெறுகிறார்கள்; 50 கிலோ மதிப்புமிக்க நகைகள் காணாமல் போயிருப்பதாகக் கூறப்படுகிறது. இந்தக் காரணங்களால், இக்கோவிலில் அரசு நிர்வாக அதிகா ரியை நியமிப்பது சரி" என சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி வெங்கடாச லய்யா 1997-இல் தீர்ப்பளித்தார். ஆனால், தீட்சிதர்கள் வழக்கிற்கு மேல் வழக்கு போட்டு இத்தீர்ப்பை நீதிமன்


படிப்பகம்

www.padippakam.com

றத்திற்குள்ளேயே பந்தாடி வருகிறார்கள்.

நூறு ஆண்டுகளுக்கு முன்பே தீட்சிதர்கள் தொடுத்த ஒரு வழக்கில், ''இந்தக் கோயில் தீட்சிதர்களுக்குச் சொந்தமில்லை என்றும், ஒட்டு மொத்த சைவர்களுக்குச் சொந்தம் என்றும் உயர்நீதி மன்ற நீதிபதி முத்துச்சாமி ஐயரும், இன்னொரு வெள்ளைக்கார நீதிபதியும் தீர்ப்பளித்திருப்பதாக'' முன்னாள் அமைச்சர் வி.வி.சாமிநாதன் குறிப்பிடுகிறார். ஆனால், தீட்சிதர்களோ, ''இந்தக் கோயில் எங்களுக்குப் பாத்யப்பட்ட பரம்பரைச் சொத்து'' எனச் சுவரொட்டி அடித்து ஒட்டும் அளவிற்கு, சட்டம் - நீதி மன்றம் எதனையும் மதிக்காமல் திமிரோடு நடந்து வருகின்றனர்.



உரிமையியல் நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டுள்ள தடையை நீட்டிக்கக் கூடாது என்ற வழக்கு விசாரணையில் கலந்து கொள்ள, சிவனடியார் ஆறுமுகசாமி மனித உரிமை பாதுகாப்பு மையத்தால் நீதிமன்றத்திற்கு ஊர்வலமாக அழைத்து வரப்படுகிறார்.

சிதம்பரம் கோயிலின் வருமானம் ஏறத்தாழ 1 கோடி ரூபாய் இருக்கும் எனக் கூறப்படுகிறது. ஆனால், தீட்சிதர்களோ, ஊர் பெரிய மனிதர்களிடம் 100, 200 நன்கொடை வாங்கித்தான், பூசையே நடத்துவதாக மோசடிக் கணக்கைத் தயார் செய்து, பக்தர்களை ஏமாற்றி வருகிறார்கள். கோயில் நிலத்தில் இருந்து கிடைக்கும் குத்தகை, கடை ஏலம், அபிஷேகம், ஆராதனைக்காக ரசீது கொடுக்காமல் பக்தர்களிடம் பிடுங்கும் பணம், கோவிலுக்குச் சொந்தமான தங்க நகைகள் - இவை எல்லாவற்றையும் தாங்களே ஆண்டு அனுபவிக்கும் வண்ணம் ''அருள்மிகு சபாநாயகர் திருக்கோயில் பொது தீட்சிதர்கள், சிதம்பரம்'' என்ற அமைப்பைக் கட்டி வைத்துக் கொண்டு, அலிபாபா கதையில் வரும் கொள்ளைக் கூட்டம் போலக் கொழுத்துத் திரிகிறார்கள்.

இது ஒருபுறமிருக்க, இரவு நேரமானபின், சிதம்பரம் கோயிலையே தண்ணி அடிக்கும் பாராகவும்; பெண்களோடு சல்லாபம் செய்யும் விடுதியாகவும் தீட்சிதர்கள் மாற்றிவிட்டதாக ஆதாரத்தோடு குற்றச்சாட்டுகள் கூறப்படுகின்றன. இந்த அசிங்கமான உண்மையை மூடி மறைக்கத்தான் கே.ஆடுரைச் சேர்ந்த செல்வராஜையும்; வீட்டுத் தரகர் ராயரையும் தீட்சிதர்கள் கோயிலுக்குள் வைத்துக் கொன்றுவிட்டதாகவும்; கோவில் வருமானத்தைப் பங்கு போட்டுக் கொள்வதில் ஏற்பட்ட தகராறில் மூர்த்தி தீட்சிதரை கோயில் கல் தூணில் மோதிக் கொன்றுவிட்டதாகவும் கூறப்படுகிறது.

இப்படிப்பட்ட கிரிமினல் குற்றம் சாட்டப்பட்டுள்ள தீட்சிதர்கள், ''திருச்சிற்றம்பல மேடையில் ஏறிப்பாட தமக்கு மட்டுமே உரிமையுண்டு; ஆறுமுகசாமியைப் பாட வைத்தால் சட்டம்-ஒழுங்கு கெட்டுவிடும்; பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படும்; கோவிலில் உள்ள விலையுயர்ந்த நகைகளின் பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்படும்'' எனப் புளுகித்தான் நீதிமன்றத்தில் இடைக்காலத்தடை கேட்டுள்ளனர். இதற்கு ஏதாவது ஆதாரம் இருக்கிறதா என்று கூடப் பார்க்காமல், நீதிமன்றம் தீட்சிதர்களின் கோரிக்கைக்குத் தலையாட்டியுள்ளது. மேலும், ''ஆறுமுகசாமியை நாத்திகர்கள் தூண்டிவிடுவதாகவும்; இதற்குப் பின்னால் பெரிய சதி நடப்பதாகவும்'' தீட்சிதர்கள் பீதியூட்டுகிறார்கள். மிகவும் பிற்படுத்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஆறுமுகசாமி திருச்சிற்றம்பலத்தில் ஏறிப் பாடுவதை மறுக்கும் தீண்டாமையை, நாத்திக - ஆத்திகப் பிரச்சினையாகத் திசைதிருப்ப முயலுகிறார்கள்.

தேவாரம், திருவாசகம் ஆகிய சைவத் திருமறைகளோடு பின்னிப் பிணைந்த சிதம்பரம் நடராசர் கோவிலை; சைவத் திருத்தலங்களிலேயே ஆகாயத் தலமாகக் கருதப்படும் சிதம்பரம் நடராசர் கோவிலை, கிரிமினல் பின்னணி கொண்ட தீட்சிதர்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதைக் கண்டு, நாத்திகர்களைவிட, ஆத்திகர்களுக்குத் தான் இரத்தம் கொதிக்க வேண்டும். ஆனால் ஆறுமுகசாமியைத் தவிர, வேறெந்த சைவ மடாதிபதிக்கும் தமிழுணர்வும், ரோசமும் இருப்பதாகத் தெரியவில்லை.

அதனால்தான், இப்பிரச்சினையில் ஆறுமுகசாமியை ஆதரிக்கும் மனித உரிமை பாதுகாப்பு மையம், சிதம்பரம் நடராசர் ஆலயத்தை இந்து அறநிலையத்துறையின் கீழ் கொண்டு வர நடவடிக்கை எடு என்ற கோரிக்கையையும் சேர்த்து முன்வைக்கிறது. இதற்கு ஆதரவாகப் பொதுமக்களைத் திரட்டும் நோக்கத்தோடு, சிதம்பரம் மற்றும் அந்நகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் மனித உரிமை பாதுகாப்பு மையம், பிற ஜனநாயக அமைப்புகளோடு இணைந்து தெருமுனைப் பிரச்சாரம் நடத்தி வருகிறது. மேலும், சிதம்பரம் உரிமையியல் நீதிமன்றம் கொடுத்துள்ள இடைக்காலத் தடையை நீட்டிக்கக் கூடாது; இவ்வழக்கில் உடனடியாகத் தீர்ப்பளிக்க வேண்டும் எனக் கோரி நீதிமன்றத்தில் மனு செய்து, வழக்கும் நடத்தி வருகிறது.

இப்பிரச்சினையில் இன்னொரு உண்மையையும் சுட்டிக் காட்டத்தான் வேண்டும். கோவில்களில் பார்ப்பனர்கள் சூத்திரர்கள் மீதும், தாழ்த்தப்பட்டோர் மீதும் திணிக்கும் தீண்டாமையையும்; கிராமப்புறங்களில் ஆதிக்க சாதிகளால் காலனிகளின் மீது திணிக்கப்படும் தீண்டாமையையும் பிரித்துப் பார்க்க முடியாது. பார்ப்பனர் அல்லாதவர் அர்ச்சகர் ஆவது, தமிழ் உள்ளிட்டு அவரவர் தாய்மொழிகளில் வழிபட உரிமை கோருவது ஆகிய கோரிக்கைகள், சாதி-தீண்டாமை ஒழிப்புப் போராட்டங்களோடு இணைக்கப்படாவிடில், அதில் முழுமையான வெற்றியைக் காண முடியாது. இப்படிப்பட்ட ஒருங்கிணைந்த போராட்டம், மக்கள் மத்தியில் எழவில்லையென்றால், வழிபாட்டு உரிமை தொடர்பாகக் கொண்டு வரப்படும் சட்டங்களும், நீதிமன்றத் தீர்ப்புகளும் அரைகுறையானதாக, ஒன்றுக்கொன்று முரணானதாக, நடைமுறைக்கு வராத காகிதக் குப்பைகளாகவே இருக்கும்.

**– மனித உரிமை பாதுகாப்பு மையம், கடலூர் மாவட்டம்.**



படிப்பகம்

www.padippakam.com

**தலையங்கம் தொடர்ச்சி**

அமெரிக்க நாடாளுமன்றத்தில் கடந்த 20 நாட்களாக இந்த திருத்தங்கள் குறித்த விவாதங்கள் நடைபெற்றபோது வாய் திறக்கவில்லை. ரசியாவில் நடைபெற்ற ஜி-8 நாடுகளின் மாநாட்டிற்குச் சென்றிருந்த மன்மோகன் சிங்கிடம் தங்களது நிருபர் நிர்ப்பந்தித்துக் கேட்டபிறகுதான், திருத்தங்களின் சில அம்சங்கள் கவலையளிப்பதாக மன்மோகன் சிங் பதிலளித்தாரென்று தனது தலையங்கத்தில் (ஜூலை-20) குறிப்பிடுகிறது. ''தி இந்து'' நாளேடு. அதன் பிறகு புஷ்ஷை சந்தித்த மன்மோகன் சிங், ''போட்ட ஒப்பந்தத்தை ஒருதலைப்பட்சமாக ஏன் மீறுகிறீர்கள்?'' என்று கேள்வி எழுப்பவில்லை. ''நாங்கள் ஒரு ஜனநாயக நாடு. நாங்கள் எங்களுடைய நாடாளுமன்றத்துக்குப் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. சில விசயங்கள் எங்களுக்கும் எங்கள் நாடாளுமன்றத்துக்கும் கவலை அளிக்கின்றன'' (இந்து, 18.7.06) என்று புஷ்ஷிடம் கவலை தெரிவித்தாராம். ஆவன செய்வதாக புஷ் உறுதியளித்துள்ளாராம்! ''அமெரிக்க நாடாளுமன்றத்தில் நடைபெறும் விவாதம் குறித்து நானும் இந்திய வெளியுறவுச் செயலர் சியாம்சரணும் ஜூலை 10-ம் தேதியன்று பாரிசில் 5 மணிநேரம் பேசியிருக்கிறோம்'' என்று கூறி மன்மோகன் சிங் கும்பலின் குட்டை உடைத்துவிட்டார் அமெரிக்க வெளியுறவுத்துறை இணைச்செயலர் நிகோலஸ் பர்ன்ஸ். 'ஆவன செய்வதாக'க் கூறிய புஷ்ஷின் வெள்ளை மாளிகையோ நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ள திருத்தங்களை வரவேற்றிருக்கிறது. திரைமறைவு பேரங்கள் முடிந்துவிட்ட நிலையில் இந்திய மக்களை ஏமாற்றுவதற்காக நடத்தப்படும் நாடகங்கள்தான் மன்மோகன் வெளியிடும் அறிக்கைகள் என்ற உண்மையை மன்மோகன் சிங்கே நிரூபிக்கிறார்.

அணுசக்திக் கமிசனின் முன்னாள் தலைவர் எம்.ஆர். சீனிவாசன், பாபா அணு ஆராய்ச்சி மையத்தின் முன்னாள் இயக்குநரும், சர்வதேச அணுசக்தி ஏஜென்சியின் இந்தியப் பிரதிநிதியுமான ஏ.என். பிரசாத், அணுசக்தி ஒழுங்குமுறை ஆணையத்தின் முன்னாள் தலைவரான ஏ.ஆர். கோபாலகிருஷ்ணன் என விஞ்ஞானிகள் அனைவரும் ஒருமித்த குரலில் இந்த ஒப்பந்தத்தை எதிர்த்துள்ளனர். அவர்களுடைய வாதங்கள் எதற்கும் மன்மோகன் கும்பல் பதிலளிக்கவில்லை. ''அனாவசியமாகப் பிரச்சினையை மிகைப்படுத்தாதீர்கள். செனட்டிலும் விவாதம் முடிந்து 'அமெரிக்க சட்டத்தின் இறுதி வடிவம் வரட்டும். அதில் ஏதாவது பிரச்சினை இருந்தால் நான் நாடாளுமன்றத்துக்குத் தெரிவிக்கிறேன்'' என்பதுதான் மன்மோகன் சிங் கூறியுள்ள பதில்.

''அணு ஆயுதம் தயாரிக்கும் உரிமையைப் பறிப்பதால் அது இந்தியாவின் பாதுகாப்புக்கே ஆபத்து'' என்று கூச்சலிட்டது பாரதிய ஜனதா. ''சுயேச்சையான வெளியுறவுக் கொள்கை வகுக்க முடியாமல் செய்து இந்தியாவை அமெரிக்காவின் உலக யுத்த தந்திரத் திட்டத்தில் பிணைக்கிறது; அணுசக்தி சுயசார்பை அழிக்கிறது'' என்று கூறி இந்த ஒப்பந்தத்திற்கு எதிராக 'நாடாளுமன்றத்தின் உணர்வை வெளிப்படுத்தும் தீர்மானத்தை'க் கொண்டுவரப் போவதாக 'எச்சரித்தது' சி.பி.எம். கட்சி. ''அத்தகையதொரு தீர்மானம் கொண்டு வரப்பட்டால் நான் இந்த அரசில் இருக்க மாட்டேன், இந்த அரசாங்கமும் இருக்காது'' என்று பதிலுக்கு சி.பி.எம்.மை எச்சரித்தார். பாதுகாப்புத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி. உடனே, தாங்கள் சி.பி.எம்.மின் தீர்மானத்தை ஆதரிக்கப் போவதில்லை என்று நழுவியது பா.ஜ.க. ''அரசாங்கத்தை மிரட்டுவது எங்கள் நோக்கமல்ல, இந்திய அமெரிக்க அணு ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கான ஒரு சட்டகத்தை முன்மொழிவதுதான் எங்கள் நோக்கம்'' என்று விளக்கமளித்திருக்கிறார் 'மார்க்சிஸ்டு' கட்சியின் பொதுச் செயலர் பிரகாஷ் காரத்.

புஷ் - மன்மோகன் ஒப்பந்தம் என்பது சொக்கத்தங்கம் போலவும், அதற்கு அமெரிக்க நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படும் திருத்தங்கள்தான் பிரச்சினை என்பது போலவும் ஒரு பொய்ச்சித்திரம் ஓட்டுக்கட்சிகளாலும் ஊடகங்களாலும் திட்டமிட்டே உருவாக்கப்படுகிறது. மாறாக, இன்று அமெரிக்க நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டுள்ள திருத்தங்கள் அனைத்தையும் அமெரிக்க தூதர் முல்ஃபோர்டு, கண்டலிசா ரைஸ், நிகோலஸ் பர்ன்ஸ் போன்ற பல அதிகாரிகளும் மார்ச் ஒப்பந்தத்திற்கு முன்னதாகவே பேசியுள்ளனர். இவை தொடர்பாக மன்மோகன் சிங் கூறிய பொய்களும் அப்போதே அம்பலமாகி இருக்கின்றன. (பு.ஜ. மார்ச், ஏப்ரல் 2006) நாடாளுமன்றத்துக்கு மட்டுமின்றி அமைச்சரவைக்குக் கூடத் தெரியாமல் ஜூன், 18, 2005 அன்று மன்மோகன் சிங் புஷ்ஷுடன் இணைந்து அமெரிக்காவிலிருந்து வெளியிட்ட கூட்டறிக்கையும், ஜூன் 28,2005-இல் பிரணாப் முகர்ஜி அமெரிக்காவில் கையெழுத்திட்ட இராணுவ ஒப்பந்தமும்தான் மார்ச் மாதம் கையெழுத்தான ஒப்பந்தத்தின் அடிப்படைகள். அந்த அடிப்படையில்தான் இரானுக்கு எதிராக சர்வதேச அணுசக்தி ஏஜென்சியில் இந்தியா வாக்களித்தது. இரானுடனான எரிவாயுக் குழாய் திட்டம் கிடப்பில் போடப்பட்டதற்கும் இதுதான் அடிப்படை. இந்தியாவின் அரசியல், பொருளாதார, இராணுவக் கொள்கைகள் இந்த அடிப்படையிலிருந்துதான் தீர்மானிக்கப்படுகின்றன.



ஆட்சியே போனாலும் ஒப்பந்தத்தை விடமுடியாது என்ற பிரணாப் முகர்ஜியின் மிரட்டலுக்கும், தேசிய கவுரவத்தின் மொத்தக் குத்தகைதாரர்களான பார்ப்பன பாசிஸ்டுகளின் 'பல்டி'க்கும், அமெரிக்க ஒப்பந்தத்துக்கு ஆலோசனை வழங்குவதாக 'மார்க்சிஸ்டுகள்' அடக்கி வாசிப்பதற்கும் வேறென்ன விளக்கம் இருக்கிறது? ஆசியாவுக்கான அமெரிக்க அடியாள் என்ற பதவியில் நியமனம் பெறுவதன் மூலம் மறுகாலனியாக்கத்தின் ஆதாயங்களைச் சுவைக்க வெறி பிடித்து அலைகின்றது இந்தியத் தரகு முதலாளி வர்க்கம். அதன் பொருட்டு 'இறையாண்மை, சுயசார்பு' போன்ற பழைய உள்ளாடைகளை அவிழ்த்து வீசிவிட்டு அம்மணமாக நடனமாடவும் தயாராக இருக்கிறது. இநத நிர்வாண நிலையை எழுத்துபூர்வமாக உத்திரவாதப்படுத்த விரும்புகிறது அமெரிக்க வல்லரசு. ''நாமும் ஒரு வல்லரசு என்று கூறிக் கொள்வதால் அதைக் கொஞ்சம் இலைமறைகாயாக செய்யக்கூடாதா?'' என்பதுதான் இப்போது நாடாளுமன்றத்தைக் கலக்கிக் கொண்டிருக்கும் விவாதம். இந்தக் கேலிக்கூத்தின் முரண்நகையாக பத்தாண்டுகளுக்கு முன் பிரதமர் அலுவலகத்தில் இருந்த அதிகாரிகள் அமெரிக்க உளவாளிகள் என்ற பிரச்சினையை எழுப்பியிருக்கிறார் 'தேசபக்தர்' ஜஸ்வந்த் சிங். இப்போது பிரதமர் நாற்காலியில் அமர்ந்திருப்பவரே ஒரு அமெரிக்க உளவாளிதானே!

# "குர்கான்" தாக்குதல் கற்பிக்கும் பாடம் என்ன?

"குர்கான்" - இந்தப் பெயரைத் தன்மானமிக்க தொழிலாளர்களால் ஒருக்காலும் மறந்துவிட முடியாது. இந்தப் பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே அவர்களுக்கு "ஹோண்டா" நிறுவனத் தொழிலாளர்கள் மீது அரியானா போலீசார் நடத்திய காட்டுமிராண்டித்தனமான தாக்குதலும்; அதை எதிர்த்து அத்தொழிலாளர்கள் நடத்திய வீரச்சமரும்தான் நினைவுக்கு வரும்.

ஹோண்டா தொழிலாளர் மீது நடத்தப்பட்ட தாக்குதல், ஏதோ விதிவிலக்காக நடந்துவிட்ட போலீசின் அத்துமீறல் அல்ல. மாறாக, தாராளமயத்தின் பின் இத்தகைய "போலீசு அத்துமீறல்கள்" தான் 'தொழிலாளர் நலச் சட்டங்களாக' மாறிவிட்டன. "தொழிலாளர் போராட்டங்கள் நசுக்கப்பட வேண்டும்" என குர்கான் நகரின் போலீசு ஆணையர், ஹோண்டாவின் அடியாளாக மாறி பத்திரிகைகளுக்கு பேட்டி கொடுத்தார்.

அரசும், பத்திரிகைகளும் தாராளமயத்தின் பளபளப்பின் பின்னே இந்தக் கொடூரத்தை மூடி மறைத்துவிட முயன்றாலும், தொழிலாளர்களின் போராட்டத்தால், தியாகத்தால் இந்த உண்மைகள் புதையுண்டு போக மறுக்கின்றன.

"லிபர்டி" என்ற ஆங்கிலச் சொல்லுக்குச் சுதந்திரம் என்று பொருள். ஆனால், இந்தப் பெயரில் காலணிகளைத் தயாரிக்கும் இந்திய நிறுவனம், தனது தொழிலாளிகள் வாயைத் திறப்பதற்குக் கூட அனுமதிப்பதில்லை. அரியானா மாநிலம் - கர்நாலில் உள்ள லிபர்டி காலணி ஆலையைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கும், நிர்வாக அதிகாரிகளுக்கும் இடையே ஒரு சிறு சச்சரவு எழுந்தது. இந்தச் சச்சரவு ஆலை அதிகாரிகளால் திட்டமிடப்பட்டுத் தூண்டிவிடப்பட்டது. இந்தச் சச்சரவைக் காரணம் காட்டி, தொழிற்சங்கத்தில் முன்னணியாகச் செயல்படும் எட்டுத் தொழிலாளர்களை இரவோடு இரவாக, அவர்களின் வீட்டில் இருந்து அள்ளிக் கொண்டு போன போலீசார், அவர்களை அடித்துச் சித்திரவதை செய்ததோடு மட்டுமின்றி, அதிகாரிகளைக் கொலை செய்ய முயற்சித்ததாக அந்த எட்டுத் தொழிலாளர்கள் மீதும் வழக்குப் போட்டு சிறையில் அடைத்தனர்.

இந்த அநீதியைக் கேள்விப்பட்ட தொழிலாளர்கள், தங்களின் தலைவர்களை விடுதலை செய்யக் கோரியும்; சச்சரவு நடந்தபொழுது, தொழிலாளர்கள் மீது ஜீப்பை ஏற்றிக் கொல்ல முயன்ற ஜோஷி என்ற அதிகாரியைக் கைது செய்யக் கோரியும் தேசிய நெடுஞ்சாலையில் மறியல் போராட்டம் நடத்தினர். போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவது என்ற பெயரில் படை, பட்டாளத்தோடு வந்து இறங்கிய அரியானா போலீசார், எந்தவிதமான முன்னெச்சரிக்கையும் செய்யாமல், மிருகத்தனமாகத் தொழிலாளர்களைத் தாக்கியதோடு, அவர்களை ரப்பர் குண்டுகளால் சுட்டுத் தள்ளினர். இத்தாக்குதலில் நூற்றுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் காயமடைந்தனர்.

போலீசின் பயங்கரவாதம் இதோடு முடிந்துவிடவில்லை. தொழிலாளர்களின் வீட்டுக்குப் போய் குடும்பத்தாரை அச்சுறுத்தியதோடு, ஐம்பதுக்கும் மேற்பட்ட தொழிலாளர்களைக் கைது செய்து, அவர்கள் மீதும் கொலை முயற்சி வழக்கு தொடுத்தது. போலீசார் நடத்திய தடியடி தாக்குதலில் காயமடைந்து கர்நால் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த தொழிலாளர்களும் சட்ட விரோதமாகக் கைது செய்யப்பட்டதோடு, போலீசு நிலையத்தில் வைத்து மீண்டும் தாக்கப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்டனர்.

தொழிற்சாலையில் நடந்த ஒரு சிறிய சச்சரவை, லிபர்டி நிர்வாகமும், அரியானா போலீசும் இப்படி பூதாகரமாக வளர்த்துக் கொண்டு போனதற்குக் காரணம் ஒரு ஒப்பந்தம். ஊதியம் மற்றும் தொழிற்சங்க உரிமைகள் குறித்து கடந்த அக்டோபர் மாதம், லிபர்டி நிர்வாகத்துக்கும், தொழிலாளர்களுக்கும் இடையே ஒரு ஒப்பந்தம் கையெழுத்தாகி இருந்தது. ஆனால், ஒப்பந்தம் கையெழுத்தாகி ஆறேழு மாதங்கள் கடந்த பின்னும், ஒப்பந்தத்தை அமல்படுத்த நிர்வாகம் முயலவில்லை. தொழிற்சங்கமோ, ஒப்பந்தத்தை உடனே அமல்படுத்துமாறு நெருக்கடி கொடுத்து வந்தது. இந்த நெருக்கடியில் இருந்து தப்பித்துக் கொள்ள நிர்வாகமும், போலீசும் கூட்டுச் சேர்ந்து செய்த சதிதான் இந்தத் தாக்குதல்.

• ஜப்பானிய நிறுவனமான "டொயோட்டா" கார் தயாரிப்பில் மட்டுமல்ல; தொழிலாளர்களை ஒடுக்குவதிலும் உலகப் புகழ் பெற்றது. இந்தியத் தரகு முதலாளியான கிர்லோஸ்கர் குழுமத்துடன் இணைந்து பெங்களூரில் அமைந்துள்ள "டொயோட்டா - கிர்லோஸ்கர் மோட்டார்ஸ்" நிறுவனத்தில் நாளொன்றுக்கு 65 முதல் 70 கார்கள் வரை உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த உற்பத்தி இலக்கை தினந்தோறும் எட்ட வேண்டும் என்பதற்காக, வேலை நேரத்தில் தொழிலாளர்களைத் தண்ணீர் குடிக்கக் கூட அனுமதிப்பதில்லை அந்த நிர்வாகம். எந்தத் தொழிலாளியாவது அனுமதி பெறாமல் சிறுநீர் கழிக்கப் போனால், கழிவறைக்குப் போய்விட்டுத் திரும்புவதற்குள், அந்தத் தொழிலாளிக்குப் பணி இடை நீக்க ஆணை கிடைத்துவிடும்.

இந்தக் கொத்தடிமைத்தனம் தொழிலாளர்களுக்குத் தொழிற்சங்கம் அமைத்துப் போராட வேண்டிய தேவையை உணர்த்தியது. நிர்வாகத்தின் அச்சுறுத்தலையும் மீறி, அவர்கள் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு "டொயோட்டா - கிர்லோஸ்கர் தொழிலாளர் சங்கத்தை" (டி.கே.எம்.இ.யூ.) அமைத்தனர். சங்கம் அமைத்தவுடனேயே அதன் முன்னணியாளர்களை நிர்வாகம் பணி இடைநீக்கம் செய்தது. நிர்வாகத்தின் இந்த எதேச்சதிகாரப் போக்கை எதிர்த்து தொழிலாளர்கள் போராட்டத்தில் குதித்தனர். 52 நாட்கள் நடந்த அந்தப் போராட்டம் தோல்வியில் முடியவே, டொயோட்டா நிர்வாகம் மேலும் 3 தொழிலாளர்களை நிரந்தரப் பணி நீக்கமும், 15 தொழிலாளர்களை இடைக்காலப் பணி நீக்கமும் செய்தது.

இந்தத் தோல்வி - பழி வாங்கும் நடவடிக்கைகளால் துவண்டு போய்விடாத தொழிலாளர்கள், கடந்த சனவரி மாதம் உள்ளிருப்பு வேலை நிறுத்தப் போராட்டத்தைத் தொடங்கினர். நிர்வாகம், தொழிற்சாலைக்குள் குடிநீர் - உணவு விநியோகம், கழிவறை வசதி ஆகியவற்றை நிறுத்தி, தொழிலாளர்களைப் பணிய வைக்க நெருக்கடி கொடுத்தது. இன்னொருபுறம் போலீசையும், ரவுடிகளையும் தொழிற்சாலைக்குள் இறக்கிவிட்டுத் தொழிலாளர்களைப் பயபீதியூட்டியது. நிர்வாகத்தின் இந்த முயற்சிகள் தோல்வியடையவே, கதவடைப்புச் செய்து, போலீசைக் கொண்டு பலவந்தமாகத் தொழிலாளர்களை வெளியேற்றியது. நிர்வாகத்தின் தன்னிச்சையான கத

www.padippakam.com

வடைப்பைச் சட்ட விரோதமாக அறிவிக்காத கர்நாடக மாநில அரசு, டொயோட்டா நிர்வாகத்தின் கார் உற்பத்தியை அத்தியாவசிய பணி பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கொண்டு வந்து, வேலை நிறுத்தத்தைச் சட்டவிரோதமாக அறிவித்தது.

இந்தப் போராட்டத்தின் முடிவில் நடந்த முத்தரப்பு பேச்சுவார்த்தையில் கதவடைப்பை திரும்பப் பெற்றுக் கொள்ள நிர்வாகம் சம்மதித்தாலும், ஒவ்வொரு தொழிலாளியிடமிருந்தும் நன்னடத்தை உறுதி மொழி பத்திரம் எழுதி வாங்கிக் கொண்டது; வேலை நிறுத்தம் காரணமாகத் தயாரிக்க முடியாமல் போன 800 கார்களைக் கூடுதல் நேரம் வேலை பார்த்து தயாரித்துக் கொடுக்க வேண்டும் என நிபந்தனை விதித்து, அதில் வெற்றியும் பெற்றது. ஏற்கெனவே பணி இடைநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ள மறுத்துவிட்ட நிர்வாகம், இப்போராட்டத்தின் பொழுது, வன்முறையில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சுமத்தி 27 தொழிலாளர்களைப் பணி இடைநீக்கம் செய்தது.

• அரியானா மாநிலத்தில் உள்ள "இந்தியன் சுகர் அண்ட் ஜெனரல் இன்ஜீனியரிங் கார்ப்பரேசன்" என்ற நிறுவனத்தில் சி.ஐ.டி.யூ. தொழிற்சங்கம் அமைக்க முற்பட்டதற்காக, முன்னணித் தொழிலாளர்கள் தொலைதூர இடங்களுக்குப் பணிமாற்றம் செய்யப்பட்டு, பழி வாங்கப்பட்டனர். இந்தப் பணிமாற்றத்தை எதிர்த்து அந்த ஆலை தொழிலாளர்கள் நடத்திய ஊர்வலத்தில் புகுந்த ரவுடிகள், உருட்டுக் கட்டைகளாலும்,கொடுவாட்களாலும் தொழிலாளர்களைத் தாக்கியுள்ளனர்.

• அரியானா மாநிலத்தின் பானிபட் நகரில் மே 28 அன்று, ஸ்பிரிங் உற்பத்தி செய்யும் ஆலைகளைச் சேர்ந்த தொழிலாளர்கள், எட்டு மணி நேர வேலை, வாராந்திர விடுமுறை, குறைந்தபட்ச ஊதியம் ஆகிய கோரிக்கைகளை நடைமுறைப்படுத்தக் கோரி ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினார்கள். ஊர்வலம் நடந்த மறுநாளே, அந்நகரத்தில் ஏதோ பயங்கரவாதிகள் புகுந்துவிட்டது போல அதிரடிப் போலீசு பட்டாளம் குவிக்கப்பட்டது. ஊர்வலத்தில் கலந்து கொண்ட தொழிலாளர்கள் தேடி பிடிக்கப்பட்டு, போலீசாராலும், ரவுடிகளாலும் மிரட்டப்பட்டனர். இதைக் கண்டித்து தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்த பிறகு தான் போலீசின் பீதியூட்டல் நிறுத்தப்பட்டது.

•••



போலீசாரின் சட்டவிரோதக் கைது - கொட்டடிச் சித்திரவதை - தாக்குதல்களைக் கண்டித்து "லிபர்டி" நிறுவனத் தொழிலாளர்கள் நடத்தும் ஆர்ப்பாட்டம்.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் 1926-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டத்தின் படி தொழிலாளியிடம் நன்னடத்தைப் பத்திரம் எழுதி வாங்குவதும்; முதலாளிகள் தொழிலாளர்களைப் பழிவாங்க திடீர் கதவடைப்பு செய்வதும், பணி இடைநீக்கம் செய்வதும் சட்டவிரோதமானவை. ஆனால், இந்தக் காலனியச் சட்டத்தைக் கூட முதலாளிகளும் மதிப்பதில்லை; அரசும் மதிப்பதில்லை. ஏற்றுமதி சார்ந்த உற்பத்திக்கு முன்னுரிமை தரப்படும் சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் முதலாளிகள் வைத்ததுதான் சட்டம். எஸ்மா, டெஸ்மா போன்ற சட்டங்கள் தொழிற்சங்க இயக்கங்களைப் பயங்கரவாத இயக்கங்களைப் போலத் தண்டிக்கின்றன. இந்த நிலைமைகள், வெள்ளைக்காரனுக்கு நாடு அடிமையாக இருந்த காலத்தில் தொழிலாளி வர்க்கம் நசுக்கப்பட்டதைவிடக் கேவலமான நிலைக்குச் செல்வதை எடுத்துக் காட்டுகின்றன.

எந்தவொரு ஓட்டுக் கட்சி தொழிற்சங்கமும் இப்பாசிச நிலைமைகளை எதிர்கொண்டு போராடத் தயாராக இல்லை. போராடும் தொழிலாளர்கள் போலீசாராலும், ரவுடிகளாலும் தாக்கப்படும் பொழுது, சி.பி.எம்.இன் மேற்கு வங்க முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யா, "கெரோ" போன்ற போராட்டங்களைத் தொழிற்சங்கங்கள் கைவிட வேண்டும் என அறிவுறுத்துகிறார்.

தமிழகத்தில் அரசு ஊழியர் போராட்டம் ஒடுக்கப்பட்ட பின், சங்கத் தலைவர் சூரியமூர்த்தி, "ஜெயாவை விமர்சனம் செய்திருக்கக் கூடாது; அரசியல் பேசியிருக்கக் கூடாது; நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கக் கூடாது" எனப் பல "கூடாது"களைப் பட்டியல் இட்டார்.

டொயோட்டா தொழிலாளர்கள் நிர்வாகத்தின் பழிவாங்குதலை எதிர்த்துத் தீவிரமாகப் போராடத் தயாராக இருந்தாலும், சி.ஐ.டி.யு. தொழிற்சங்கத் தலைமை, அவர்களைப் பேச்சுவார்த்தைக்குள் இழுத்துவிட்டு, போராட்டத்தை நீர்த்துப் போகச் செய்திருக்கிறது.

லிபர்டி தொழிலாளர்கள் மீது மிகக் கொடூரமான தாக்குதலை போலீசு நடத்திக் கொண்டிருந்தபொழுது, சி.ஐ.டி.யு. தலைமையோ, "நாங்கள் தொழில்துறையில் மூலதனம் பாய்வதற்கு எதிரானவர்களோ, வேலை நிறுத்தத்தை நீட்டித்துக் கொண்டே போக வேண்டும் என்ற விருப்பம் கொண்டவர்களோ கிடையாது" என அறிவித்துத் தங்களின் கோழைத்தனத்தை வெளிச்சம் போட்டு காட்டிக் கொண்டனர்.

சி.ஐ.டி.யு. போன்ற ஓட்டுக் கட்சி தொழிற்சங்கங்களின் சமரசமும், கோழைத்தனமும்தான் பெரும்பாலான தொழிற்சங்கப் போராட்டங்கள் அவமானகரமான தோல்வியில் முடிவதற்கு காரணமாக அமைகின்றன. அதே சமயம், இத்தகைய துரோகத் தொழிற்சங்கங்களைப் புறக்கணிக்காமல், அவர்களுக்கு வால் பிடித்துப் போகும் வண்ணம் தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் உணர்வு பின்தங்கியிருப்பது, போராட்டங்களின் தோல்வியைவிட, அவமானகரமானதாக இருக்கிறது.

• ரஹீம்


படிப்பகம்

# சாதி ஆட்சிக்கு உட்பட்ட சட்டத்தின் ஆட்சி

தூத்துக்குடி மாவட்டம், கே.வேலாயுதபுரம் கிராமத்தின் அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த தலித் மக்கள் மீது ஒரு உள்நாட்டுப் போரைப் பிரகடனம் செய்திருக்கிறார்கள் அவ்வூரைச் சேர்ந்த சாதி ஆதிக்க வெறியர்கள். அந்த ஊரில் தலித் மக்களின் எண்ணிக்கை 200. சாதி இந்துக்களின் மக்கள் தொகையோ 2000.

ரெட்டியார் சாதி வெறியர்களின் தலைமையிலான ஊர்ப் பஞ்சாயத்து கடந்த ஜூன் மாதம் அறிவித்துள்ள சமூகப் புறக்கணிப்பு நடவடிக்கையின்படி, ''தலித்துகள் பொதுக் குழாய்களிலோ, கிணறுகளிலோ தண்ணீர் எடுக்கக் கூடாது, கடைக்காரர்கள் பொருள் விற்கக் கூடாது, அவர்களை யாரும் விவசாய வேலைக்கு அழைக்கக் கூடாது, சுற்று வட்டாரத்திலுள்ள தீப்பெட்டிக் கம்பெனிகளில் கூட யாரும் அவர்களை வேலைக்கு வைத்துக் கொள்ளக் கூடாது, பிள்ளைகளைக் கூடப் பள்ளிகளுக்குள் அனுமதிக்கக் கூடாது.'' இந்த உத்தரவை வார்த்தை பிசகாமல் அமல்படுத்தி வருகிறார்கள் ஆதிக்க சாதிக்காரர்கள்.

இராக் மீது அமெரிக்கா விதித்திருந்த பொருளாதாரத் தடைக்கு எந்த விதத்திலும் குறைவில்லாத இந்தக் கொடிய நடவடிக்கைக்குக் காரணம் என்ன? தங்கள் தெருவிலுள்ள பத்ரகாளியம்மன் கோயிலுக்கு அருந்ததியின மக்கள் திருவிழா நடத்தினார்கள்; ஆனால் 'மரபுப்படி' அதற்கு சாதி இந்துக்களிடம் முன் அனுமதி வாங்கவில்லை. 'தீண்டத்தகாதோரின் சாமிக்கு' குற்றாலத்திலிருந்து 'புனிதநீர்' கொண்டு வந்து முழுக்காட்டினார்கள். - இது இரண்டாவது குற்றம். இதனால் ஆத்திரமடைந்த சாதி வெறியர்களால் திருவிழா முடிந்த மறுநாளே (ஜூன் 8) அருந்ததியினப் பெரியவர் சுப்பிரமணியன் சுற்றி வளைத்துத் தாக்கப்பட்டார். தன்னைத் தாக்கியவர்கள் மீது போலீசில் புகார் செய்தார் சுப்பிரமணியன். தீண்டாமைக் குற்றத்தின் கீழ் 8 பேர் கைது செய்யப்பட்டனர். இதற்குப் பதிலடி சமூகப் புறக்கணிப்பு.

''இந்தக் காலத்தில் எங்கே சார் இருக்கிறது தீண்டாமை'' என்று பேசும் புத்திசாலிகள், சாமி கும்பிட்டதற்காக சமூகப் புறக்கணிப்பா என்று ஆச்சரியப்படலாம். அந்தக் கிராமத்தில் தங்களுக்கு எதிராக 20-க்கும் மேற்பட்ட வடிவங்களில் தீண்டாமை அமலபடுத்தப்படுவதாகக் குற்றம் சாட்டியிருக்கிறார்கள் வேலாயுதபுரம் தலித் மக்கள்.

அவர்கள் பொதுக் கிணற்றில் தண்ணீர் எடுக்க முடியாது. பொதுக் கோயிலில் வழிபட முடியாது, தேநீர்க் கடைகளில் தனிக்குவளை என்பன போன்ற 'வழமையான' தீண்டாமைக் கொடுமைகள் மட்டுமல்ல; சாதி இந்துக்களின் தெருக்களில் செருப்பு போட்டு நடக்கக் கூடாது, சைக்கிளில் போகக் கூடாது, அவ்வளவு ஏன், சைக்கிளே வைத்துக் கொள்ளக் கூடாது என்பது அங்கே சட்டம்.

தலித் மாணவர்கள் யாரும் கல்லூரிப் படிப்புக்குப் போகக் கூடாது, வெளியூரிலிருந்து உறவினர்களோ நண்பர்களோ வந்தால் சாதி இந்துக்களிடம் ''விசா'' வாங்கிக் கொண்டு தான் ஊருக்குள் நுழைய வேண்டும். தலித்துகள் யாரும் அரசு வேலைக்கு விண்ணப்பிக்கக் கூடாது, வெளியூருக்கு வேலைக்குப் போகக் கூடாது, உள்ளூரில் அவர்களது சாதிக்கு விதிக்கப்பட்ட அடிமைத் தொழில்கள் அனைத்தையும் கூலியில்லாமல் செய்ய வேண்டும்.

**உடல் ஊனமுற்றவரான கணேசன், தனது மூன்று சக்கர மிதிவண்டியில் ஏறிச் செல்லக்கூடாது என ஆதிக்க சாதி வெறியர்கள் கட்டளை போட்டுள்ளனர்: தீண்டாமையின் வக்கிர வடிவம்.**



இந்தச் சட்டங்கள் எல்லாம் கொடூரமான முறையில் தலித்துகள் மீது திணிக்கப்பட்டு அமல்படுத்தப்படுகின்றன. வேலாயுதபுரத்தில் அஞ்சல் அலுவலகம் திறந்தபோது, பெரியவர் சுப்பிரமணியனின் மகன் முத்துகிருஷ்ணனுக்கு அங்கே சப்-போஸ்ட் மாஸ்டர் வேலை கிடைத்தது. ''ஒரு சக்கிலியனிடம் கைநீட்டி நாம் ஸ்டாம்பு வாங்க முடியுமா?'' என்று கூறி அந்த இளைஞனை நேர்முகத் தேர்வுக்கே போகவிடாமல் தடுத்து விட்டார்கள் சாதிவெறியர்கள். கல்யாணி என்ற பெண்ணுக்கு கிடைத்த சத்துணவு அமைப்பாளர் வேலையும் இதேபோலப் பறி போனது. பெயிண்டர் வேலை செய்யும் மாரியப்பன் என்பவர் சுற்று வட்டாரக் கிராமங்களில் வேலை செய்ய உதவுமென்று ஒரு ஸ்கூட்டர் வாங்கினார். அந்தக் குற்றத்துக்காக அவர் ஊரைவிட்டே வெளியேற்றப்பட்டார். உடல் ஊனமுற்றவரான கணேசன் என்பவர் தனக்கு அரசு வழங்கிய மூன்று சக்கர வாகனத்தைப் பயன்படுத்த முடியவில்லை. சாதி இந்துக்களின் 'சாலை விதிகள்' அவருக்குக் கூட இரக்கம் காட்டவில்லை. சாதிவெறியர்களிடம் கெஞ்சிக் கூத்தாடித்தான் இந்தச் சலுகையை அவர் பெறவேண்டியிருந்தது. முத்தையா என்பவருடைய வீட்டின் வாசலிலேயே பஞ்சாயத்து குடிநீர்க் குழாய் இருக்கிறது. எனினும் அவர் அதில் தண்ணீர் பிடிக்க முடியாது. தலித்துகளுக்கென்று ஒதுக்கப்பட்ட குழாய்க்கு நடந்து சென்று அங்கிருந்து தான் தண்ணீர் பிடித்து வரவேண்டும். இந்தக் கொடுமைகளின் உச்சம்தான் கோயில் பிரச்சினை.

''2000 பேருக்கெதிராக 200 பேர் என்ன செய்ய முடியும், நிலச் சுவான்தார்களுக்கு எதிராக அவர்களை அண்டி வாழும் கூலி விவசாயிகள்

www.padippakam.com

என்ன செய்துவிட முடியும், அதிகார பலம் கொண்ட ஆதிக்க சாதியினர்க்கு எதிராக ஒடுக்கப்பட்ட ஏழை மக்கள் என்ன செய்துவிட முடியும்'' என்று தங்கள் குமுறலை அடக்கிக் கொண்டிருந்த மக்கள், 'இனிமேலும் பொறுக்க முடியாது' என்று பொங்கி எழுந்ததற்குச் சான்றுதான் சுப்பிரமணியனின் நடவடிக்கை.

ஆதிக்க சாதியினர்க்கு எதிராக வேலாயுதபுரம் தலித் மக்கள் போலீசில் புகார் கொடுத்திருப்பதென்பது சாதாரண நடவடிக்கை அல்ல, தங்கள் உயிரைப் பணயம் வைக்கும் நடவடிக்கை. தலித் சமூகத்திலேயே ஆகக் கடைநிலையில் வைக்கப்பட்டுள்ளவர்களான அருந்ததியின மக்கள், இந்தப் போராட்டத்தை தாங்கள் தனித்து நின்றுதான் சமாளிக்க வேண்டும் என்பதை அறிந்திருந்தார்கள். அதிகார வர்க்கமும் போலீசும் ஓட்டுக் கட்சிகளும் ஆதிக்க சாதியினர் பக்கம்தான் என்ற உண்மையையும் அறிந்தேயிருந்தார்கள்.

சமூகப் புறக்கணிப்பு என்று அறிவித்தவுடனே ஆதிக்க சாதியினரின் கட்டைப் பஞ்சாயத்தார்களை தீண்டாமைக் குற்றத்தின் கீழ் போலீசு கைது செய்திருக்க முடியும். சமூகப் புறக்கணிப்பை அமல்படுத்தும் ஒவ்வொருவரையும் சிறையில் வைத்து, சாதி பேதமில்லாமல் பட்டை சோத்துக்கு வரிசையில் நிறுத்தியிருக்க முடியும். ஆனால், அவ்வாறு எங்கும் எப்போதும் நடந்ததில்லை. சாதியின் ஆட்சியை சட்டத்தின் ஆட்சி கேள்விக்குள்ளாக்கியதில்லை.

எனவே, குற்றவாளிகள் ஊரில் சொகுசாக அமர்ந்திருக்க, சமூகப் புறக்கணிப்பினால் பாதிக்கப்பட்ட தலித் மக்கள் ஜூன் 12-ஆம் தேதியன்று ஊர்வலமாக கோவில்பட்டி ஆர்.டி.ஓ. அலுவலகத்துக்குச் சென்று மனு கொடுத்தார்கள். தீண்டாமைக் குற்றத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் ஆர்.டி.ஓ.விற்கு இருந்த போதிலும், மாவட்ட ஆட்சியரைக் கேட்காமல் எதுவும் செய்ய இயலாது என்றும் ஊருக்குத் திரும்பிச் செல்லுமாறும் கூறினார்.

தங்களுடைய உயிருக்கும் வாழ்க்கைக்கும் உத்திரவாதம் இல்லாமல் அலுவலகத்தை விட்டுப் போக முடியாது என்று கூறி அங்கேயே அடுப்பு வைத்து சோறு பொங்கத் தொடங்கினார்கள் மக்கள். அடுப்பிலிருந்து புகை வருவதற்குள் போலீசு வந்தது. போலீசின் மிரட்டலுக்கு அஞ்சி மக்கள் கலையமாட்டார்கள் என்பது புரிந்த பின்னர் 55 கி.மீ தூரத்திலுள்ள தூத்துக்குடியிலிருந்து மாவட்ட ஆட்சியர் வந்தார்.




**சாதி ஆதிக்கவாதிகள் விதித்துள்ள பொருளாதாரத் தடையை உடைக்கும் விதமாக, கே.வேலாயுதபுரம் தாழ்த்தப்பட்டோரால் திறக்கப்பட்டுள்ள தேநீர் கடைக்கு ''சமத்துவம்'' எனப் பெயர் வைக்கப்பட்டுள்ளது.**

பிறகு சமாதானக் கமிட்டி (peace committee) என்ற வழக்கமான அதிகார வர்க்க கட்டைப் பஞ்சாயத்து நடந்திருக்கிறது. ஜூன் 14-ம் தேதியன்று வேலாயுதபுரத்திற்கு நேரில் சென்ற மாவட்ட ஆட்சியர், ''தலித் மக்களை சுயசார்புள்ளவர்களாக ஆக்குவதுதான் தனது முதற்கடமை'' என்று அறிவித்திருக்கிறார். முதியோர் பென்சன், மகளிர் சுய உதவிக் குழுக்கள், தையல் பயிற்சி, தலித்துகள் சுயமாகக் கடை நடத்த அரசுக் கடன் உதவி எனக் கேட்காத உதவிகள் உடனே அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

தலித் மக்களுடைய பொருளாதாரச் சார்பு நிலையைப் பயன்படுத்தி அவர்கள் மீது சாதி வெறியர்கள் தீண்டாமைக் கொடுமையைத் திணிக்காமல் தடுப்பதற்கும் தீண்டாமைக்கெதிராகப் போராடும் வலிமையை தலித் மக்கள் பெறுவதற்கும் பொருளாதாரச் சுயசார்பு அவர்களுக்கு அவசியம். அவற்றில் தலையாயது நிலம். அதைப் பற்றி வாய் திறக்காத அரசு சில்லறைச் சலுகைகளால் தலித் மக்களைக் குளிப்பாட்ட நினைக்கிறது. பொதுக்குழாயில் தண்ணீர் பிடிக்க முடியவில்லையா காலனிக்கு தனிக்குழாய், ஊரிலுள்ள ரேசன் கடையில் அரிசி வாங்க முடியவில்லையா தனி ரேசன் கடை, தனி மளிகைக் கடை - என்று புதிய வகைத் தீண்டாமையை சட்டபூர்வமாகவே அமல்படுத்துகிறது.

தீண்டாமைக் குற்றவாளிகளுக்கு எதிரான நடவடிக்கை? அதை 'கவனிப்பதாக' வாக்குறுதி தந்திருக்கிறார் ஆட்சியர். ஆட்சியர் வந்து போய் 10 நாட்கள் ஆன பின்னரும் சமூகப் புறக்கணிப்பு தொடர்கிறது. வேலாயுதபுரம் அருந்ததியின மக்களுக்கு சுற்று வட்டாரத்தில் யாரும் வேலை தருவதில்லை. சாதி வெறியர்களோ, அரசின் இந்தக் கண்துடைப்பு நடவடிக்கைகளைக் கூடச் சகித்துக் கொள்ள முடியாமல் கருவிக் கொண்டிருக்கிறார்கள்.

எனினும் 2000 பேர் சேர்ந்து 200 பேரை அடிக்கும் தீண்டாமை எனும் இந்தக் கோழைத்தனத்திற்கு உள்ளூர நடுக்கமும் வந்திருக்கிறது. மலம் அள்ளவும், குப்பை வாரவும், பிணம் எரிக்கவும் விதிக்கப்பட்ட அந்த மக்கள், சக்கிலியென்றும் மாதாரியென்றும் இழிவுபடுத்தப்பட்ட அந்த மக்கள், தலித் மக்களிலேயே ஆகக் கீழ்நிலையில் வைக்கப்பட்டு 'அடித்தால் கேட்க நாதியில்லாத அநாதைகள்' என்று மிகவும் அலட்சியமாகக் கருதப்பட்ட அருந்ததியின மக்கள் இதோ, திருப்பி அடிக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

ஒண்டிவீரன் அவர்களுடைய குல தெய்வம்; நம்முடைய விடுதலைப் போரின் முன்னோடி. பூலித்தேவனின் தளபதியான வீரன், ஒண்டியாகச் சென்று வெள்ளையர்களின் பாசறையைத் தாக்கி அழித்தவன். அதன் காரணமாகவே ஒண்டிவீரன் என்று மக்களால் புகழப்பட்டவன். அவனுடைய வாரிசுகள் இதோ, தனித்து நின்று போராடுகிறார்கள். நாமும் ஒண்டிவீரனின் வாரிசுகள்தான் என்பது உண்மையானால், அவர்களை ஒண்டியாகப் போராடவிட்டு ஒதுங்கி நின்று வேடிக்கைப் பார்க்கக் கூடாது.

● இளநம்பி

www.padippakam.com

## சிக்குன்குன்யா நோய் தாக்குதல்:

# மக்கள் விரோத அரசை ஒழித்தால்தான் கொசுவும் ஒழியும்!

சிக்குன்குன்யா - மனிதனை முடமாக்கிவிடும் கொடிய நோய். ''ஏடீஸ் அஜெப்டி'' **(Aedes agepti)** எனப்படும் கொசுக்களால் பரவும் இந்த வைரஸ் நோய், கடந்த நான்கு மாதங்களாகத் தமிழகத்தின் பல மாவட்டங்களில் பல்லாயிரக்கணக்கானோரைத் தாக்கி படுக்கையில் வீழ்த்தியுள்ளது. கடந்த இரு மாதங்களாக விருதுநகர் மாவட்டத்தின் பல பகுதிகளில் இந்நோய் பரவி, சத்திரப்பட்டி வட்டாரத்தில் மட்டும் 19 பேரின் உயிரைக் காவு கொண்டுள்ளது. உயிரிழந்த அனைவரும் முதியவர்கள் என்றாலும், சிக்குன்குன்யா நோயின் கடுமை தாங்காமல், உரிய சிகிச்சையின்றி மாண்டு போயுள்ளனர்.

குப்பைகள், கழிவுநீர் குட்டைகள், பயன்பாடற்ற தண்ணீர் தொட்டிகள், பிளாஸ்டிக் கழிவுகள் மூலம் இந்த வகை கொசுக்கள் வேகமாகப் பல்கிப் பெருகி மனிதர்களைத் தாக்குகின்றன. நோய் வாய்ப்பட்ட ஒருவரிடமிருந்து மற்றவருக்கு கொசுக்கடி மூலம் இந்நோய் பரவி ஊரையே முடமாக்கி விடுகிறது.

நோய் தடுப்பு மருந்துகள் அரசு மருத்துவமனைகளில் இல்லாமல், சாதாரண தலைவலி-காய்ச்சலுக்கான மாத்திரைகளே தரப்படுவதால், வீங்கிய கால்களோடும், வலியோடும், காய்ச்சலோடும் வேதனைப்படும் ஏராளமான நோயாளிகள், நம்பிக்கையிழந்து வேப்பிலை அடிப்பது, தாயத்து கட்டுவது என்று போகிறார்கள். கோழிகளால் பரவும் காய்ச்சல், தண்ணீரால் பரவும் காய்ச்சல், நோயாளிகளுடன் இருந்தாலே தொற்றிக் கொள்ளும் என்றெல்லாம் அறியாமையால் வதந்திகளை நம்பி பீதியடைகிறார்கள். திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பழவேற்காடு அருகே தோணிரேவு கிராமத்தைச் சேர்ந்த மக்கள் சிக்குன்குன்யாவுக்கு அஞ்சி ஊரையே காலி செய்து வேறிடங்களுக்குச் சென்று விட்டனர். அதன் பின்னரே தாசில்தார், மருத்துவர்கள் குழு, அரசியல்வாதிகள் படையெடுத்து வந்து மருத்துவ முகாம் அமைத்துச் சிகிச்சையளித்துள்ளனர்.

சத்திரப்பட்டி வட்டாரத்தில் சிக்குன்குன்யா நோயினால் பலர் பாதிக்கப்பட்டுள்ள தகவலறிந்து, நாம் அங்குள்ள ஆரம்ப சுகாதார மையத்திற்குச் சென்று பார்த்தோம். அங்கு படுக்கை வசதியோ உரிய மருந்துகளோ சிகிச்சையோ இல்லாமல் நோயாளிகள் அவதிப்பட்டுக் கொண்டிருந்தனர். பஞ்சாயத்து நிர்வாகமோ இரண்டு முறை கொசு மருந்து அடித்ததோடு முடங்கி விட்டது.

சிக்குன்குனியா நோயினால் உடலில் நீர்வற்றி நாவறட்சியும் கண் எரிச்சலும் அதீத உடற் சோர்வும் ஏற்படுவதால், நோயாளிகளுக்கு குளுக்கோஸ் ஏற்றுவது அவசியம். ஆனால் சத்திரப்பட்டி மருத்துவமனையில் அதற்கான வாய்ப்போ அறிகுறியோ அறவே இல்லை. நோயினால் பாதிக்கப்பட்ட நெசவுத் தொழிலாளியான முத்துசாமி, ''கவருமெண்டு ஆசுபத்திரிக்குப் போயிருந்தால் நான் செத்துப் போயிருப்பேன். எனது உறவினர்கள் என்னை தனியார் ஆசுபத்திரியில் சேர்த்தார்கள். அங்கு 5 நாட்களுக்கு குளுக்கோஸ் ஏற்றியதால் உயிர் பிழைத்தேன். ஆயிரக்கணக்கில் பணம் செலவாகி விட்டது. கவருமெண்டு ஆசுபத்திரி ஒழுங்காக இல்லாததால், தனியார் டாக்டர் முதலாளிகளுக்குத்தான் கொள்ளை லாபம்'' என்று வேதனையோடு கூறுகிறார்.

சத்திரப்பட்டி வட்டாரத்தில் 2000-க்கும் மேற்பட்டோரை இந்நோய் தாக்கிய பின்னரும் போர்க்கால அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்காமல் அரசு அலட்சியப்படுத்தியதால், உழைக்கும் மக்கள் சாலை மறியல் போராட்டத்துக்கு ஆயத்தமாகினர். இத்தகவல் அறிந்ததும் கலெக்டர், தாசில்தார், ஆர்.டி.ஓ. என அதிகார வர்க்கம் ஓடோடி வந்து மக்களைச் சாந்தப்படுத்திவிட்டு, மருத்துவமனை வளாகத்தில் இருந்த, ஊரின் நோய் பரப்பும் மையமாக விளங்கிய மிகப்பெரிய கழிவுநீர் குட்டையை அவசரமாக மண்ணைப் போட்டு மூடினர். உள்ளூர் பிரமுகர்களுடன் பேசி, ஒரு திருமண மண்டபத்தை தற்காலிக மருத்துவ முகாமாக மாற்றி, 10 மருத்துவர்களை அனுப்பினர். ஆனால், உரிய மருந்துகளை அனுப்பவில்லை பின்னர் பஞ்சாயத்து நிர்வாகம் நன்கொடை திரட்டி மருந்துகளை வாங்கிக் கொடுத்தது. அவையும் ஒரு வாரத்தில் தீர்ந்துவிட மருத்துவர்களும் கிளம்பி விட்டனர். சத்திரப்பட்டியில் சிக்குன்குன்யாவைக் கட்டுப்படுத்தி விட்டதாக அதிகாரிகள் அறிக்கை தயாரித்து அனுப்பிவிட்டனர். ஆனால், இந்நோய் இப்போது சங்கரபாண்டியபுரம், சமுசிகாபுரம், ரெட்டியப்பட்டி, தேவராயன்பட்டி என அடுத்துள்ள ஊர்களில் வேகமாகப் பரவிக் கொண்டிருக்கிறது.

''சாதாரண வைரஸ் நோய்தான்; இதனால் உயிருக்கு ஆபத்து ஏற்படாது'' என்று ஆருடம் சொல்கிறது அரசு. ஆனால், அச்சாதாரண நோய்க்குக் கூட அரசு மருத்துவமனைகளில் உரிய சிகிச்சை கிடைப்பதில்லை. சாதாரண நோய் புதிய வீரியத்துடன் தாக்குவதற்குக் காரணம் என்ன என்பதைப் பற்றியும் அரசு அக்கறை காட்டுவதில்லை. சிக்குன்குன்யா மட்டுமல்ல; ஏற்கெனவே ஒழிக்கப்பட்டு விட்டதாகக் கூறப்படும் காலரா, மலேரியா, பிளேக், அம்மை நோய், மூளைக் காய்ச்சல் முதலான பலவும் ஆண்டுதோறும்

**பொதுமக்கள் கூடும் சத்திரப்பட்டி பேருந்து நிறுத்தம் அருகில் உள்ள, நோயை உற்பத்தி செய்யும் கழிவுநீர் குட்டை: அரசின் மெத்தனம்.**



www.padippakam.com

படையெடுக்கின்றன. டெங்கு காய்ச்சலும் ''மெட்ராஸ் ஐ'' எனப்படும் கண் நோயும் குறிப்பிட்ட பருவங்களில் தாக்குவது வாடிக்கையாகி விட்டது.

சுற்றுப்புற சுகாதாரமும் உரிய சிகிச்சையும் ஆரோக்கியமான உணவும் இருந்தால் இத்தகைய நோய்கள் மீண்டும் தலைதூக்க அடிப்படையில்லாமல் போயிருக்கும்! ஆனால், முதலாளிகளுக்கு வரிச் சலுகை, கண்ணகிக்கு சிலை, சிவாஜிக்கு சிலை என்று மக்கள் வரிப்பணத்தை கோடிகோடியாய் வாரியிறைக்கும் அரசு, அடிப்படை மருத்துவ-சுகாதாரத்துக்கு அற்ப நிதியையே ஒதுக்குகிறது. அடிப்படை மருத்துவ - சுகாதார வசதிகளை அறவே புறக்கணித்துவிட்டு, நிலைமை முற்றியதும் கொசு மருந்து அடிப்பது, மருத்துவ முகாம் நடத்துவது, விழிப்புணர்வு பிரச்சாரம், நோய் தடுப்புக்காக ரூ. 2.856 கோடி ஒதுக்கீடு என்று திடீர் நாடகமாடுகிறது தி.மு.க. அரசு. உலக வங்கி உத்தரவுப்படி மருத்துவ-சுகாதார வசதிகளுக்கான மானியங்களை வெட்டியும், பஞ்சாயத்துகளுக்கு உரிய நிதி ஒதுக்காமலும் மக்கள் நல்வாழ்வைத் தொடர்ந்து புறக்கணித்ததன் கோரவிளைவுதான் இத்தகைய நோய்கள் பெருகக் காரணம்.

துப்புரவு - சுகாதார - மருத்துவ வசதிகள் அறவே புறக்கணிக்கப்பட்டு, சிக்குன்குன்யா போன்ற நோய்கள் பெருகுவதற்கும் பல்லாயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதற்கும் இந்த அரசுதான் பொறுப்பு என மக்களை உணரச் செய்ய வேண்டும். மக்களின் குமுறலை எதிரொலிக்கும் வகையில் போராட்டங்கள் கட்டியமைக்கப்பட வேண்டும். அடிப்படை வசதிகளை அறவே புறக்கணிக்கும் தனியார்மய - தாராளமயக் கொள்கைக்கு எதிரான, இக்கொள்கையைத் தீவிரமாகச் செயல்படுத்தி வரும் ஆட்சியாளர்களுக்கு எதிரான போராட்டங்களாக இவை வளர்த்தெடுக்கப்பட வேண்டும். இது தான் உண்மையான நிவாரணப் பணி; அரசியல் பணி.

**- பு.ஜ. செய்தியாளர்கள், மதுரை.**

## மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் கோவை கிளை தொடக்கவிழா:

# நம்பிக்கையின் ஒளிக்கீற்று!


கடலூர், திருச்சி, மதுரை மாவட்டங்களில் செயல்பட்டு வரும் மனித உரிமைப் பாதுகாப்பு மையம் (HRPC), ''மனித உரிமை காப்போம்! மக்கள் விடுதலைக்கு அணிவகுப்போம்!'' என்ற முழக்கத்துடன் தனது கோவை மாவட்டக் கிளை தொடக்க விழாவை கடந்த ஜூன் மாதம் 30-ஆம் தேதியன்று நடத்தியது. மனித உரிமை பாதுகாப்பு மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் எஸ். ராஜு தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், மனித உரிமை பாதுகாப்பு மையத்தின் மாநிலத் தலைவர் மதி.சோழா், செயலர் போஜகுமார், மூத்த வழக்குரைஞர் ப.பா. மோகன் உள்ளிட்ட பலர் பங்கேற்று வாழ்த்துரை வழங்க, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியின் மாநிலச் செயலர் தோழர் சுப.தங்கராசு சிறப்புரையாற்றினார். கோவை ம.உ.பா. மையத்தின் தலைவர் கார்க்கி, செயலாளர் மதி. ரமேஷ், பொருளாளர் சம்பத் ஆகியோரை ம.உ.பா. மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் ராஜு அறிமுகப்படுத்தினார்.

கோவையைச் சுற்றியுள்ள ஆலைகளில் இளம் பெண்கள் ''கேம்ப் கூலி'' கொத்தடிமைகளாகச் சுரண்டப்படுவதை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும்; கோவை தொடர் குண்டு வெடிப்பு வழக்கில் கைதாகிச் சிறையில் வதைபடும் அப்பாவி இஸ்லாமிய இளைஞர்களுக்குப் பிணை வழங்க வேண்டும்; தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தேநீர் கடைகளில் தனிக்குவளை முறை, ஆலயங்களில் வழிபாட்டு உரிமை மறுப்பு முதலான தீண்டாமைக் கொடுமைகளை முடிவு கட்ட வேண்டும்; வீரப்பன் தேடுதல் வேட்டையின் போது அதிரடிப் படையால் பாதிக்கப்பட்ட அப்பாவி மலைவாழ் மக்களுக்கு சதாசிவம் கமிஷன் பரிந்துரைப்படி உடனடியாக இழப்பீடு தொகை வழங்க வேண்டும்; ''பொடா'' சட்டம் ரத்து செய்யப்பட்டும், தருமபுரி மாவட்டம் ஊற்றங்கரையைச் சேர்ந்த 26 பேரை இன்னமும் ''பொடா'' கைதிகளாக நடத்துவதை ரத்து செய்ய வேண்டும்; பவானி, சிறுவாணி ஆற்று நீரை வரைமுறையின்றி உறிஞ்சியும், கழிவுகளைக் கொட்டி ஆற்றை நாசப்படுத்தியும் வரும் காகித ஆலை-துணி ஆலைகளுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்வதைத் தடுக்கும் போலீசாரின் மனித உரிமை மீறல்கள் நிறுத்தப்பட வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

பாசிச இருள் சூழ்ந்துவரும் இன்றைய நிலையில், குறிப்பாக, பயங்கரவாத பீதியூட்டி ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டு வரும் கோவை மாவட்டத்தில் இத்தகைய மனித உரிமை - ஜனநாயக உரிமைகளுக்கான அமைப்புகள் மிக அவசியமானவை என்பதையும், மக்களைச் சார்ந்து நின்று மக்கள் உரிமைகளுக்காகப் போராடும் அமைப்புகளே இன்றைய தேவை என்பதையும் உணர்த்துவதாக இவ்விழா அமைந்தது.

- பு.ஜ. செய்தியாளர்கள், கோவை.

மனித உரிமைப் பாதுகாப்பு மைய புதிய கிளைத் துவக்க விழாவில் பேசுகிறார் மாநிலச் செயலர் கி. போஜக்குமார். உடன் (இடமிருந்து) வழக்கறிஞர் ப.பா. மோகன், மனித உரிமைப் பாதுகாப்பு மைய மாநில ஒருங்கிணைப்பாளர் எஸ். ராஜு, கிளைச்செயலர் மதி.ரமேஷ், பொருளாளர் எஸ். சம்பத். (இடது) விழாவில் பங்கேற்றோர்.





படிப்பகம்

www.padippakam.com

## ஆண்டிப்பட்டி கொலை வழக்கு:

# வி.வி.மு. தோழர்கள் விடுதலை! பொய்சாட்சிகளுக்கு என்ன தண்டனை?

ஆண்டிப்பட்டி வட்டார மக்களைத் துன்புறுத்தி வந்த பால்சாமி என்ற கிரிமினலின் கொலையோடு தொடர்பு படுத்தி ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட தோழர் செல்வராசு உள்ளிட்ட வி.வி.மு. தோழர்கள் பத்து பேரை 3.7.06 அன்று மதுரை உயர்நீதி மன்றம் விடுதலை செய்திருக்கிறது. சாட்சியங்கள் அனைத்தும் பொய்யானவை என்பதை வழக்குரைஞர்கள் நிரூபித்த போதிலும், அதனைக் கணக்கில் கொள்ளாமல் 27.2.03 அன்று பெரியகுளம் விரைவு நீதிமன்றம் அளித்த ஆயுள் தண்டனையால் தோழர்கள் செல்வராசு, பரமன், சீனி, ஏழுமலை, ஈஸ்வரன், சுப்பையா, விஜயன், கருப்பையா, அன்னக்கொடி, காமராஜ் ஆகியோர் சுமார் இரண்டரை ஆண்டுகள் சிறைத்தண்டனையை அனுபவித்திருக்கின்றனர்.

கொலையுண்ட பால்சாமியோ ஒரு மக்கள் விரோதி. இவன் திருட்டு, கொலை, கொள்ளை, கட்டைப் பஞ்சாயத்து, விவசாயிகளின் நிலத்தை அபகரித்தல் என எல்லா கிரிமினல் குற்றங்களிலும் கைதேர்ந்தவன் என்பதோடு, தன்னை மந்திரவாதி என்றும் கூறிக்கொண்டு அப்பகுதி மக்களை அச்சுறுத்திப் பணிய வைத்திருந்தவன். பொய்ப் புகார்கள் மற்றும் பொய் வழக்குகள் மூலம் போலீசையும் நீதிமன்றத்தையும் பயன்படுத்தி, தன்னை எதிர்ப்பவர்களைத் துன்புறுத்தும் கலையிலும் கைதேர்ந்தவன். தன்னுடைய அண்ணனின் மனைவியையே அபகரித்துக் கொண்டு, அண்ணனைத் தற்கொலைக்குத் தள்ளினான் பால்சாமி. மூத்த மகனை வழிப்பறிக் கொள்ளைக்குப் பயிற்றுவித்து, தேனி வட்டாரம் முழுதும் மக்களைக் கொள்ளையடித்தான். வழக்குகள் அனைத்திலும் விடுதலை வாங்கினான். பெண்களின் சங்கிலியை அறுத்து போலீசிடம் சிக்கி, வழக்கே இல்லாமல் வெளியே வந்தான்.

இவனுடைய ரவுடித்தனங்களை ஒடுக்க வி.வி.மு. களத்தில் இறங்கியபின் நிலைமை மாறத் தொடங்கியது. பால்சாமியின் தம்பி மகன் ஒரு பெண்ணை ஏமாற்றிக் கெடுத்துவிட்டு தப்பிக்க முயன்றபோது, அந்தப் பெண்ணையே திருமணம் செய்ய வைத்தனர் வி.வி.மு. தோழர்கள். அடுத்தடுத்து இரண்டு நிலப்பிரச்சினைகளில் தலையிட்டு பாலுச்சாமியின் சதியையும் முறியடித்தனர். வி.வி.மு.வுடன் நேரடியாக மோதமுடியாததால் ஆத்திரம் கொண்ட இந்தக் கிரிமினல், தன்னுடைய வழக்கமான நரித்தனத்தில் இறங்கினான். வி.வி.மு. தோழர்கள் 7 பேர் தங்களைக் கொலை செய்ய முயன்றதாக பொய்ப்புகார் கொடுத்தான். கைது செய்யப்பட்ட தோழர்களை விடுதலை செய்யக் கோரி ஊரே போலீசு நிலையத்தின் முன் திரளவே, தோழர்கள் விடுவிக்கப்பட்டனர். உடனே, உயர் போலீசு அதிகாரிகளைச் சந்தித்து தோழர்களைக் கொலை முயற்சி வழக்கில் கைது செய்ய வைத்தான். இந்த சலசலப்புகளுக்கெல்லாம் அஞ்சாமல் பால்சாமிக்கு எதிராக மக்களைத் திரட்டும் பணியை வி.வி.மு. தீவிரப்படுத்தியது.

இத்தகைய சூழ்நிலையில் 5.1.2000 அன்று, அரப்படித்தேவன் பட்டியில் அவனுடைய வீட்டின் வாயிற்புறத்திலேயே பால்சாமி கொல்லப்பட்டான். அவனால் பாதிக்கப்பட்டவர்கள்தான் அவனை ஒழித்துக் கட்டியிருக்க வேண்டும் என்று ஊகிப்பதாயிருந்தால், ஆண்டிப்பட்டி வட்டாரத்தில் நூற்றுக்கணக்கான மக்களை போலீசு கைது செய்திருக்க வேண்டும். ஆனால், கியூ பிரிவு போலீசோ, வி.வி.மு.வை ஒடுக்குவதற்கு இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டது. அந்த வட்டாரத்தில் போலீசின் லஞ்ச ஊழலையும் கட்டைப் பஞ்சாயத்தையும் தட்டிக் கேட்டது மட்டுமின்றி, போலீசு அதிகாரிகளுக்கு எதிராக வழக்கும் தொடுத்திருந்தனர், வி.வி.மு. தோழர்கள்.



எனவே, வி.வி.மு.வைப் பழிவாங்கத் துடித்த போலீசின் நோக்கமும், பால்சாமி குடும்பத்தின் நோக்கமும் ஒன்று சேர்ந்து பொய்வழக்குப் பிறந்தது. 5.1.2000 அன்று இரவு 9.45 மணிக்கு தோழர் செல்வராசு உள்ளிட்ட 10 பேர் பால்சாமியின் வீட்டுக் கதவைத் தட்டி அவனை வெளியே அழைத்து, வந்தவுடன் இழுத்துச் சென்று வெட்டிக் கொன்றதாகவும், பால்சாமியின் குடும்பத்தினர் மட்டுமின்றி, அண்டை வீட்டுக்காரர்களும் இந்தக் கொலையைக் கண்ணால் கண்டிருப்பதாகவும் தனது குற்றப்பத்திரிகையில் கூறியிருந்தது போலீசு. முதல் சாட்சியான பால்சாமியின் மகனும் குறுக்கு விசாரணையில் இதையே கூறினார். எனினும், அண்டைவீட்டார் ஒருவர் கூட சாட்சியாகச் சேர்க்கப்படவே இல்லை.

பால்சாமியின் உடலிலிருந்து செருப்பையும், துண்டையும் கைப்பற்றியதாகக் கூறியது போலீசு. தட்டப்படும் கதவைத் திறப்பதற்கு யாரேனும் காலில் செருப்பும் தோளில் துண்டும் அணிந்து வருவார்களா என்ற கேள்விக்கு விடையில்லை.

மாலை 6.30 மணிக்கு தன் தந்தையுடன் பூசைக்குச் சென்றதாகவும், அங்கே பொங்கல் சாப்பிட்டதாகவும் அதற்குப்பின் எதுவும் சாப்பிடவில்லை என்றும் சாட்சியமளித்திருக்கிறார் பால்சாமியின் மகன். பிரேத பரிசோதனை அறிக்கையோ பால்சாமியின் குடலில் அரை மணி நேரத்துக்கு முன் சாப்பிட்டுச் செரிக்காத உணவு இருந்ததாகக் கூறுகிறது.

இரவு 9.45-க்கு கொலை நடந்ததாக குற்றப்பத்திரிகை கூறுகிறது. 9.15 மணிக்கு பால்சாமியின் மகன் கொலை பற்றிப் புகார் செய்ததாகவும், அந்தப் புகாரில் மொத்தம் 12 பேர் குற்றம் சாட்டப்பட்டிருந்ததாகவும் கூறினார் சாட்சியமளித்த போலீசு துணை ஆய்வாளர். கொலையுண்ட நேரம் மட்டுமல்ல, வழக்கே பொய் என்பதை நிரூபித்தன இந்த சாட்சியங்கள்.

இத்தனை முரண்பாடுகளையும் புறந்தள்ளி விரைவு நீதிமன்றம் அளித்த தவறான தண்டனையை எதிர்த்து செய்யப்பட்ட மேல்முறையீட்டு வழக்கில், குற்றம் சாட்டப்பட்ட தோழர்களின் சார்பில் வழக்குரைஞர் கோபிநாத் வாதாடினார். மதுரை உயர்நீதி மன்ற நீதிபதிகள் சொக்கலிங்கம், பத்ருடு ஆகியோர் இந்தப் பொய் வழக்கிலிருந்து தோழர்களை விடுதலை செய்ததுடன் சாட்சிகள் அனைவரும் நீதிமன்றத்தில் பொய் சொல்லியிருக்கின்றனர் என்பதையும் தமது தீர்ப்பில் பதிவு செய்துள்ளனர். ஒரு மக்கள் விரோதியின் சாவுக்காக 10 தோழர்கள் அநியாயமாகத் தண்டனை அனுபவித்துள்ளனர். வேண்டுமென்றே பொய்வழக்குப் போட்ட போலீசுக்கும், பொய்சாட்சி சொன்ன பால்சாமியின் குடும்பத்தினருக்கும் என்ன தண்டனை?

● வி.வி.மு., ஆண்டிப்பட்டி.


படிப்பகம்

www.padippakam.com

# நுகர்வுவெறி தோற்றுவிக்கும் வக்கிரம்

## பெண்கள் விடுதலை முன்னணி ஆவேசம்

தனியார்மயமும் தாராளமயமும் பரப்பும் ஏகாதிபத்திய நுகர்வு வெறியானது, பெண்களையும் நுகர்பொருளாகப் பார்க்கும் வக்கிர வெறியாக மாறி, நாடு முழுவதும் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு பெண்கள் மீதான பாலியல் கொடுமைகளும் ஆபாச - வக்கிர வெறியாட்டங்களும் தீவிரமாகிவிட்டன. தமிழகத்தில் உள்ள பல கணினி ப்ரவுசிங் மையங்கள் நீலப்பட அரங்குகளாகிவிட்டன.

திருச்சியில் பாலக்கரை பருப்புக்கார தெருவிலும் திருவரங்கத்திலும் நேஸ் (NAES) என்ற கணினிப் ப்யிற்சி மையத்தை நடத்தி வந்த லியாகத் அலி என்ற பொறுக்கி, பயிற்சிக்கு வரும் கல்லூரி மாணவிகளிடம் இனிக்கப் பேசி, வஞ்சகமாகப் போதை மருந்து கொடுத்து அவர்களை நீலப்படமெடுத்த விவகாரமும், அவற்றைக் குறுந்தகடுகளாக விற்பனை செய்த விவகாரமும் கடந்த ஜூன் இறுதியில் திருச்சி நகரையே அதிர்ச்சிக்குள்ளாக்கியது. புகார் அடிப்படையில் லியாகத் அலியைக் கைது செய்த போலீசு, அவனுக்கு உடந்தையாக இருந்த பெண் ஊழியர்கள், ஆட்டோ ஓட்டுநர் மற்றும் போதை மருந்து சப்ளை செய்த சமூக விரோதிகளை இன்னமும் கைது செய்யாமல் விட்டு வைத்திருக்கிறது.

தமிழச்சிகளின் கற்பைக் காக்கப் போவதாக குஷ்புவுக்கு எதிராக துடப்பக் கட்டை தூக்கிய தமிழின வீராதிவீரர்கள், இங்கே தமிழச்சிகள் பாலியல் வன்புணர்ச்சிக்கு ஆளாகி ஆபாசப்படமெடுக்கப்பட்டு அவமானப்படுத்தப்பட்ட போதிலும், இக்கொடுஞ்செயலுக்கு எதிராக வாய்திறக்கவில்லை.



இந்நிலையில் பெண்கள் வீதியில் இறங்கிப் போராடாமல், பெண்களின் மீதான வன்கொடுமைகளுக்கு முடிவு கட்ட முடியாது என்று அறிவித்து, திருச்சியில் இயங்கும் பெண்கள் விடுதலை முன்னணி, ''மாணவிகளை ஆபாசப்படமெடுத்த பொறுக்கி லியாகத் அலியைத் தூக்கிலிடு!'' என்ற தலைப்பிட்ட சுவரொட்டிகளை நகரெங்கும் ஒட்டியது. பெண்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த பெண் தோழர்கள், கையில் பசை வாளியுடன் பகல் நேரத்தில் இக்காமவெறி கொடுஞ்செயலுக்கு எதிராக நூற்றுக்கணக்கில ஒட்டிய சுவரொட்டிகள், உழைக்கும் மக்களிடமும் குறிப்பாக, பெண்களிடம் பெருத்த தாக்கத்தை ஏற்படுத்தியது. பெண்களே வீதிக்கு வந்து சுவரொட்டி பிரச்சாரம் செய்ததைக் கண்டு வியப்புற்று, உள்ளூர் நாளேடுகள் இதனைப் புகைப்படத்துடன் செய்தியாக வெளியிட்டன. ஏகாதிபத்திய நுகர்வு வெறியையும் ஆணாதிக்க வக்கிரங்களையும் வீழ்த்த மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்து அணிதிரட்டி வரும் இவ்வமைப்பினர், அடுத்த கட்ட போராட்டத்துக்கு ஆயத்தமாகி வருகின்றனர்.

- பு.ஜ. செய்தியாளர்கள்,
திருச்சி.

# வாசகர் கடிதம்

● ஆளும் வர்க்கங்களும் ஊடகங்களும் சொல்லும் பொருளாதார வளர்ச்சியானது, நாட்டின் மிக அற்பமான முதலாளித்துவப் பிரிவினரின் வளர்ச்சியைத்தான் குறிக்கிறது என்பதை ''வல்லரசாகும் இந்தியா'' கட்டுரை செறிவாக விளக்கியுள்ளது. எனினும், உழைக்கும் மக்கள் வாழ்க்கைத் தரம் அதலபாதாளத்திற்கு வீழ்ந்துள்ளதைப் புள்ளிவிவர ஆதாரங்களுடன் தொகுத்தளித்து எழுதப்படாததால் இக்கட்டுரை முழுமையைத் தரவில்லை.

- ஜீவா, சென்னை.

● இட ஒதுக்கீடு விவகாரத்தில், தமிழினவாதிகளும் சமூக (அ)நீதிக்காரர்களும் செய்து வரும் அவதூறு - பொய்ப்பிரச்சாரத்துக்குப் பதிலடி கொடுப்பதாக ''சாதி இந்துக்களுக்கு வக்காலத்துதான் சமூக நீதியா?'' என்ற கட்டுரை எடுப்பாக அமைந்துள்ளது. கடந்த 16.7.06 அன்று தோழர் ஆனந்த் தலைமையில் நடந்த வாசகர் வட்டக் கூட்டத்தில், தோழர் எழில்மாறன் இடஒதுக்கீடு பற்றியும் மீண்டும் தலைதூக்கும் பார்ப்பனத் திமிரை முறியடிக்க வேண்டிய அவசியம் பற்றியும், புரட்சிகர அமைப்புகளின் நிலைப்பாட்டையும் எளிய உதாரணங்களுடன் விளக்கிச் சிறப்புரையாற்றினார். பழைய - புதிய வாசகர்கள் தமது கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டு தெளிவு பெற உதவுவதாக இக்கூட்டம் அமைந்தது.

- வாசகர் வட்டம், பரமக்குடி

● பேரழிவில் புதைந்து கொண்டிருக்கும் பாலஸ்தீனம் பற்றிய கட்டுரை அமெரிக்க - இஸ்ரேலிய பயங்கரவாதத்தையும் மக்களின் அவலத்தையும் கண்ணெதிரே படம் பிடித்துக் காட்டியது. இன்றைய உலகமய - மறுகாலனிய சூழலில் குட்டி முதலாளிய தலைமையில் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்பதை இக்கட்டுரை படிப்பினையாக உணர்த்துகிறது.

- தூயவன், நல்லம்பள்ளி.

● சாதி இந்துக்களின் ஆதிக்கத்துக்கு வக்காலத்து வாங்கும் தமிழினப் பிழைப்புவாதிகளின் சந்தர்ப்பவாதத்தையும் அவதூறுகளையும் அம்பலப்படுத்திக் காட்டி, புரட்சியாளர்களின் நிலைப்பாட்டைச் செறிவாகத் தொகுத்துக் கூறியது சிறப்பு. கொத்தடிமைக் கூடாரமாகும் தமிழகம் எனும் கட்டுரை நம் கண்ணெதிரே நடந்து வரும் கொடுமையை விளக்கி, போராட வேண்டிய அவசியத்தை உணர்த்துவதாக அமைந்துள்ளது.

- இரா. கணேசன், சாத்தூர்.

● 'இடஒதுக்கீடு என்பது நீதிக்கட்சியினரோ, திராவிடர் கழகத்தினரோ போராடிப் பெற்ற உரிமையல்ல; ஆங்கிலேய காலனியவாதிகள் முதல் இன்றைய ஆட்சியாளர்கள் வரை இத்தகைய நிறுவனமயமாக்கும் ஏற்பாட்டைச் செய்துள்ளனர்' என்ற பு.ஜ.வின் நிலைப்பாட்டைப் படித்த சில தமிழினப் பிழைப்புவாதிகள், இதற்கு என்ன ஆதாரம் என்று எம்பிக் குதித்தனர். நாம் ஆதாரங்களைக் காட்டியதும் வாயடைத்துப் போயினர்.

- வாசகர்கள், திருப்பூர்

● நாடு வல்லரசாவதைக் கனவு காணும் கலாம் ரசிகர்களுக்கு அட்டைப்படம் சவுக்கடி. ஈராக்கில் ஹதிதா கிராமத்தில் அமெரிக்க இராணுவம் நடத்திய கொலைவெறியாட்டம் பற்றிய கட்டுரையில் வியட்நாமில் மைலாய் கிராமத்தில் அமெரிக்கா நடத்திய கொடூரத்தை விளக்கி ஒப்பிட்டுக் காட்டியிருக்கலாம்.

- பகத், பென்னாகரம்.

● இந்தியாவின் உண்மை நிலையை புள்ளிவிவர ஆதாரங்களுடன் கொடுத்த அட்டைப்படக் கட்டுரை அதிர்ச்சியைக் கொடுத்தது. வாசகர் வட்டத்தில், ஈழப் பிரச்சினை தீராத நெருக்கடியில் சிக்கியுள்ளதையும் ஏகாதிபத்திய மேலாதிக்கவாதிகளின் சூழ்ச்சிகளையும் விளக்கி பாய்லர் பிளாண்ட் தொழிலாளர் சங்கப் பொதுச்செயலாளர் தோழர் நாராயணசாமி ஆற்றிய சிறப்புரை தோழர்களுக்குப் புதிய பார்வையை அளிப்பதாக அமைந்தது.

- வாசகர் வட்டம், திருச்சி.

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and
Printed by him at EZHILPRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM

REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS
FOR INDIA UNDER No: 42648/85

Regn. No: TN/CC(S)Dn/190/06-08
WPP No: TN/PMG/CCR/WPP-562/06-08

# சிற்றம்பல மேடையேறத் தமிழும் தீக்குளிக்க வேண்டுமோ?

சிதம்பரம் நடராசர் ஆலயத்தில்
தமிழுக்கும், தமிழனுக்கும்
இழைக்கப்படும் தீண்டாமைக்கு
முடிவு கட்டுவோம்!

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர்
ஆகலாம் என்கிறது சட்டம்.
நடராசர் ஆலய திருச்சிற்றம்பல
மேடையில் பார்ப்பானைத் தவிர
வேறு யாரும் ஏறக் கூடாது
என்கிறது தீட்சிதர் கூட்டம்!

"தமிழக அரசே!
சிதம்பரம் நடராசர் ஆலய
சிற்றம்பல மேடையில்
தேவாரம்-திருவாசகம் பாட
சிவனடியார் ஆறுமுகசாமிக்குப்
பாதுகாப்பு கொடு!"

சிதம்பரம் நடராசர் ஆலயத்தை
இந்து அறநிலையத் துறையின்கீழ்
கொண்டுவர நடவடிக்கை எடு!

- என்ற கோரிக்கைகளை முன்வைத்து,
12.7.2006 முதல் 15.7.2006 முடிய
சிதம்பரம் நகரில்
மனித உரிமைப் பாதுகாப்பு மையம்
ஒருங்கிணைத்து நடத்திய தெருமுனைப்
பிரச்சாரம் மற்றும் நீதிமன்றத் தடையை
மீறி நடந்த போராட்டக் காட்சிகள்.












படிப்பகம்